www.padippakam.com

# மதத்தைப் பற்றி மார்க்சியம்

அ. கா. ஈஸ்வரன்



செந்தழல் வெளியீட்டகம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மதத்தைப் பற்றி மார்க்சியம்

அ.கா.ஈஸ்வரன்

செந்தழல் வெளியீட்டகம்
சென்னை

படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **மதத்தைப் பற்றி மார்க்சியம்** |
| பொருள் | : | மதம் பற்றி |
| பதிப்பு | : | முதல் பதிப்பு - டிசம்பர் 2011 |
| உரிமை | : | ஆசிரியர் |
| வெளியீடு | : | செந்தழல் வெளியீட்டகம்<br>52/252, செல்லப்பா தெரு, குயப்பேட்டை,<br>சென்னை - 600 012. |
| மின்னஞ்சல் | : | chenthazhal@gmail.com |
| அலைபேசி | : | 9283275513 |
| ஒளி அச்சு மற்றும் முகப்பு வடிவமைப்பு | : | அபிராமி கம்ப்யூட்டர்ஸ். செல் : 9042769787 |
| அச்சு | : | ராஜம்ஸ், சென்னை - 600 014. |
| விலை | : | ரூ. 50/- |

| | | |
|---|---|---|
| Title | : | **MARXISM ON RELIGION** |
| Subject | : | On Religion |
| Edition | : | First Edition - December 2011 |
| Copyright | : | Author |
| Published by | : | **Chenthazhal Veliyeettagam**<br>52/252 Chellappa Street,<br>Koyapet, Chennai 600 012. |
| email | : | chenthazhal@gmail.com |
| Cell No | : | 9283275513 |
| Typeset & Wrapper Design | : | Abirami Computers, Cell : 9042769787 |
| Printed at | : | Rajams, Chennai – 600 014. |
| Price | : | Rs. 50/- |

www.padippakam.com

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முகவுரை | | 5 |
| 1. | மதம் தோன்றாக் காலமும், மதத்தின் தோற்றமும் | 17 |
| 2. | மதத்தின் வர்க்கத் தன்மை | 24 |
| 3. | மதத்தைப் பற்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் அணுகுமுறை | 38 |
| 4. | இந்து மதத்தின் தோற்றமும் வளர்ச்சியும் | 53 |
| 5. | பகுத்தறிவுவாதமும் மதமும் | 82 |
| 6. | மதத்தின் தேவையின்மையும் மறைவும் | 101 |


படிப்பகம்

www.padippakam.com



அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் – அதை
ஆங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு – தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

– மகாகவி பாரதியார்

படிப்பகம்

www.padippakam.com

# முகவுரை

மார்க்சிய முதலாசிரியர்களின் அணுகுமுறைப்படி செயற்பட விரும்பும் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் துணைபுரிய வேண்டும் என்ற அடிப்படையில் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர்களின் மதத்தைப் பற்றிய கருத்துகள் இந் நூலில் தொகுத்து விவரிக்கப்படுபட்டுள்ளது.

*"மதத்தின் துயரம் என்பது ஒரே நேரத்தில் உண்மையான துயரத்தின் வெளிப்பாடாகவும், அதற்கு எதிரான கண்டனமாகவும் இருக்கிறது. மதம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் பெருமூச்சாகவும், இதயமற்ற உலகின் இதய மாகவும், ஆன்மாவற்ற நிலைகளின் ஆன்மாவாகவும் இருக்கிறது.* ***இது மக்களின் அபினியாக உள்ளது.***

*மக்கள் உண்மையான மகிழ்ச்சி பெறுவதற்காக, மக்களது மாயையான மகிழ்ச்சியாக அமைந்துள்ள மதத்தை அழிப்பது அவசியமாக்குகிறது. தங்களது நிலைமைகள் குறித்து மக்கள் கொண்டுள்ள பொய்த் தோற்றத்தை விட்டொழிக்கும்படிக் கோருவது, அத்தகைய பொய்த் தோற்றங்கள் தேவையாக இருக்கும் நிலைமைகளை விட்டொழிக்கும் படிக் கோருவதே ஆகும்."*

***—மார்க்ஸ் - ஹெகலின் உரிமைத் தத்துவம் பற்றிய விமர்சனத்துக்கு பங்களிப்பு***

*"நாம் மதத்தை எதிர்க்க வேண்டும். அதுதான் அனைத்துப் பொருள் முதல்வாதத்தின் அரிச்சுவடியாகும். ஆனால் மார்க்சியம் அரிச்சுவடியோடு நின்றுவிட்ட பொருள்முதல்வாதம் அல்ல. மார்க்சியம் அதற்கும் அப்பால் செல் கிறது. மதத்தை எதிர்ப்பது எப்படியென்று நாம் அறிந்திருக்க வேண்டும், அதற் காகப் பெருந்திரளான மக்களிடையில் நம்பிக்கை மற்றும் மதத்தின் தோற்று வாயைப் பொருள்முதல்வாத முறையில் நாம் விளக்க வேண்டும் என்று அது கூறுகிறது."*

***—லெனின் - மதத்தைப் பற்றித் தொழிலாளர் கட்சியின் அணுகுமுறை***

இயக்கவியல் பொருள்முதல்வாத அடிப்படையில் மதத்தின் தோற்றத்தை யும், அதன் மறைவையும், அவ்வாறு மறையும் வரையில் மதத்தின் மீதான மார்க்சிய அணுகுமுறையையும் இந்நூலில் முதலாம், மூன்றாம், ஆறாம் இயல் களில் விவரிக்கப்படுகிறது. (1.மதம் தோன்றாக்காலமும், மதத்தின் தோற்றமும் 3. மதத்தைப் பற்றி கம்யூனிஸ்ட் கட்சியின் அணுகு முறை 6. மதத்தினுடைய தேவையின்மையும் மறைவும்)



படிப்பகம்

www.padippakam.com

"எது குறித்தும் முடிந்த முடிவான கருத்துகளை முன்வைக்காததைப் போன்றே மதம் குறித்தும் கறாரான தீர்ப்புக்கள் எதனையும் மார்க்சியம் வழங்கவில்லை" என்று ந.இரவீந்திரன் தாம் எழுதிய **"மதமும் மார்க்சியமும்"** என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். மார்க்சியத்தின் பேராலேயே இதுபோன்ற கருத்துகள் தற்போது தமிழகத்தில் மிகஅதிகமாக பரப்பப்பட்டு வருவதைப் பார்க்க முடிகிறது. இதன் மறுப்பாக மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகிய மூன்று மார்க்சிய முதலாசிரியர்களின், மதத்தைப் பற்றி கூறிய கறாரான கருத்துகள் இந்த சிறு படைப்பில் தொகுக்கப்பட்டுள்ளது.

மார்க்சியம் முடிந்த முடிவானதாக எதையும் முன்வைக்கவில்லை என்பது உண்மையே. ஏன் என்றால் மார்க்சியம் என்பது வறட்டு சூத்திரவாதமல்ல, மாறும் சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் போக்குடையதே. ஆனால், மார்க்சியம் எந்த கருத்தையும் கறாராக முன்வைக்கவில்லை என்பது அப்பட்டமான உள்நோக்கம் கொண்டதாகும். மாறும் சூழலுக்கு ஏற்ப மார்க்சிய அடிப்படைகள் மாறிவிட்டதாக கூறி, மார்க்சியத்துக்கு விரோதமான கருத்தை மார்க்சியத்தினுள் புகுத்துவது என்பதே அந்த உள்நோக்கமாகும்.

**லெனின் :**

*"மார்க்சியம் உயிரற்ற வறட்டுச் சூத்திரம் அல்ல. இறுதி முடிவாக்கப்பட்டுவிட்ட, முன்கூட்டியே தயார் செய்து வைக்கப்பட்டுவிட்ட, மாற்றத்துக்கு இடமில்லாது இறுகிவிட்ட போதனை அலல. அது செயலுக்கான உயிருள்ள வழி காட்டி அது. சமுதாய வாழ்க்கை நிலைமைகளில் ஆச்சரியப்படத்தக்க அளவில் திடுதிடுப்பென நிகழ்ந்த மாறுதல்களை இக்காரணத்தால் நிச்சயமாய் மார்க்சியம் பிரதிபலித்துக் காட்டவே செய்யும்"*

*—மார்க்சியத்திடைய வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பு இயல்புகள்*

இதனை வலியுறுத்துவதாக சொல்லிக் கொண்டு, மார்க்சியம் எதையும் முடிந்த முடிபாக, கறாரான தீர்ப்பு எதையும் வைக்கவில்லை என்கின்றனர். ஆனால் இதனைத் தொடர்ந்து லெனின் கூறிய கருத்தை இவர்கள் மறைத்தும் - மறந்தும் விடுகின்றனர்.

லெனின் கூறுகிறார்:-

*"பொதுப்படையான, அடிப்படையான குறிக்கோள்களை இங்கே நான் குறிப்பிடவில்லை. வர்க்கங்களிடையே நிலவும் அடிப்படை உறவு மாறாமலிருக்கும் வரையில் சரித்திரத்தின் திருப்பங்களினால் இந்தக் குறிக்கோள்கள் மாறுவதில்லை"*

*—மார்க்சியத்திடைய வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பு இயல்புகள்*



படிப்பகம்

*"நாம் முற்றிலும் மார்க்சியத் தத்துவார்த்த நிலையையே எமது அடிநிலையாய்க் கொண்டு நிற்கிறோம்: மார்க்சியம் தான் முதன்முதல் சோஷலிசத்தைக் கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானமாய் மாற்றி யமைத்துத் தந்தது, இந்த விஞ்ஞானத்துக்கு உறுதியான அடித்தளத்தை நிறுவிக் கொடுத்தது, இதை இதன் எல்லாக் கூறுகளிலும் மேலும் வளர்த்தும் விவரமாய் விரித்தமைத்தும் செல்வதற்குப் பின்பற்ற வேண்டிய பாதையைச் சுட்டிக் காட்டிற்று."*

*—நமது வேலைத்திட்டம்*

மார்க்சியக் கண்ணோட்டம் எது என்பதைக் கூட முடிவாக வைக்கவில்லை என்பது அப்பட்டமான பொய் என்பது மேலே காணும் லெனின் கூற்றால் அறிந்து கொள்ளலாம்.

*"வரலாறு பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தோட்டம், உபரிமதிப்பு மூலம் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் ரகசியம் புலப்படுத்தப்படல் ஆகிய இந்த மாபெரும் இரு கண்டுபிடிப்புகளுக்காக நாம் மார்க்சுக்குக் கடமைப்பட்டிருக் கிறோம். இந்தக் கண்டுபிடிப்புகளின் விளைவாக சோஷலிசம் ஒரு விஞ்ஞான மாயிற்று, இனி அடுத்தப்படிச் செய்ய வேண்டி யிருந்த பணி அதன் எல்லா விவரங்களையும் உறவுகளையும் வகுத்தமைத் திடுவதுதான்."*

*—எங்கெல்ஸ் - கற்பனாவத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்*

வரலாற்றியல் பொருள்முதல்வாதம், உபரிமதிப்பு இதனைப் பற்றி மார்க்ஸ் கறாரான கருத்துக்களை வைக்கவில்லை என்று கூறினால் அது எப்படிப்பட்ட அபத்தம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஏன் என்றால் இதன் அடிப்படை யில் மார்க்சும் எங்கெல்சும் தமது படைப்புகளை இறுதிகாலம்வரை எழுதியுள்ள னர். விஞ்ஞான கம்யூனிசத்தை ஏற்றுக் கொள்வதில் தடுமாறுபவர்களே மார்க் சியத்தின் கறார் தன்மையை சந்தேகிக்கின்றனர்.

மார்க்ஸ் தனது கண்டுபிடிப்பான வரலாற்றியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தை நம்முன்வைப்பதைப் பார்ப்போம்.

*"இதன் மூலம் நான் உருவாக்கிய பொதுவான முடிவை - இந்த முடிவுக்கு வந்தவுடன் அதுவே என்னுடைய ஆராய்ச்சிகளுக்கு வழி காட்டும் கொள்கையாக மாறியது - பின்வருமாறு சுருக்கிச் சொல்லலாம். மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக ஈடுபடும் சமூக உற்பத்தியில் திட்டவட்டமான உறவுகளில் தவிர்க்க முடியாத வகையில் ஈடுபடுகிறார்கள். இந்த உறவுகள் அவர்களுடைய சித்தங்களிலிருந்து தனித்து நிற்பவையாகும், அதாவது அவர்களுடைய உற்பத்தியின் பொருளாயத சக்திகளில் வளர்ச்சியில் அந்தக் குறிப்பிட்ட கட்டத்துக்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளாகும்.*

www.padippakam.com

*இந்த உற்பத்தி உறவுகளின் கூட்டுமொத்தமே சமூகத்தின் பொருளாதார அமைப்பாக, அதன் உண்மையான அடித்தளமாக அமைகிறது. இதன் மீது சட்டம், அரசியல் என்ற மேற்கட்டமைப்பு எழுப்பப்பட்டு, அதனோடு பொருந்தக் கூடிய சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவங்களும் உருவா கின்றன. பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தி முறை சமூக, அரசியல், அறிவுத்துறை வாழ்வின் பொதுவான போக்கை நிர்ணயிக்கிறது.''*

*—அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு பங்களிப்பு முன்னுரை*

இங்கு மார்க்ஸ் தன்னுடைய வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தை, கண்டுபிடித்தது முதல் தமது ஆராய்ச்சிகளுக்கு அதையே வழிகாட்டும் கொள்கையாக ஏற்றுக் கொண்டதை வெளிப்படுத்தியிருகிறார். இவ்வழி யிலேயே காலம் முழுமையும் தமது படைப்புகளை படைத்தளித்துள்ளார். இதன் அடிப்படையில் எழுதப்பட்டது தான் ''மூலதனம்'' என்ற மாபெரும் அரசியல் பொருளாதார நூல். முதலாளித்துவத்தின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி போன்றவற்றை மூலதன நூலில் கூறிய கருத்துகள் எவ்வளவு கறார் தன்மை பெற்றதாக இருக்கிறது என்பதை அவ்வப்போது முதலாளித்துவம் சந்தித்து வரும் பொருளாதார நெருக்கடிகள் நமக்கு உணர்த்திவருகிறது. இந்நிலையில் ந.இரவீந்திரன் ''எது குறித்தும் முடிந்த முடிவான கருத்துகளை முன்வைக் காததைப் போன்றே மதம் குறித்தும் கறாரான தீர்ப்புக்கள் எதனையும் மார்க் சியம் வழங்கவில்லை'' என்ற கூற்று மார்க்சியம் அறிந்தவர்களிடையே வியப்பை ஏற்படுத்துகிறது. இதுபோன்ற வழிபிறழ்ந்த கூற்று மார்க்சியம் என்ற பெயருடனேயே உலவுகிறது.

சமூகம் வர்க்கமாக உருவானது முதல், சமூகத்தில் காணும் கருத்துகள் ஒரு வர்க்கத்துக்கு சார்பாகவும், மற்றொரு வர்க்கத்துக்கு பாதகமாகவும் காணப்படுகிறது. சமூகத்தில் வர்க்கம் நிலவும் வரையில் மார்க்ஸ் காட்டிய வழிகாட்டுதல் நமக்கு பயன்படும். இதனை மறுப்பது மார்க்சியத்தை மறுதலிப்ப தாகவே அமையும். இந்த மறுதலைப்புகளை மார்க்சியத்தன் வளர்ச்சி! என்று சுட்டுவதன் மூலம் மார்ச்சியத்தின் அடிப்படைகள் மறுக்கப்படுவதை கம்யூ னிஸ்டுகளால் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது.

மாறும் சூழலுக்கு ஏற்ப போர்தந்திரம் மாற்றம் பெறும். அந்த மாற்றம் வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தின் அடிப்படையில் தான் கம்யூனிட் கட்சி அமைத்துக்கொள்ளும். இதனை புரிந்து கொள்ளாமல் ந.இரவீந்திரன் போன றோர்கள் போர்தந்திரத்தையும் தத்துவத்தையும் ஒன்றாக குழப்புகின்றனர்.

அதுமட்டுமல்லாது மதத்தின் தோற்றத்தையும், அதன் மறைவையும், அவ்வாறு மறையும் வரை மதத்தின் மீதான அணுகுமுறையையும் பற்றிய, மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகிய மூன்று முதல் ஆசிரியர்களின் கருத்தை ந.இரவீந்திரன் போன்றோர்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை என்பது தான் உண்மை.



படிப்பகம்

www.padippakam.com

*"மிகப் பெருந் திரள்களான மக்களை, ஏனையோருக்காகத் தாம் செய்யும் ஓயாத வேலையாலும் மற்றும் இல்லாமையாலும் தனிமைப்பாட்டாலும் நசுக்கப் படும் இம்மக்களை, எங்கும் அழுத்தி இருத்திவைக்கும் ஆன்மீக (அறிவுசார்) ஒடுக்குமுறையின் பல வடிவங்களில் மதமும் ஒன்றாகும்.*

*மதம் மக்களுக்கு அபினியைப் போன்றது. மதம் ஒரு வகையான ஆன்மீக பெரும் போதை கொண்டது. அதில் மூலதனத்தின் அடிமைகள் மூழ்கி அவர்களுடைய மனித உருவத்தையும், மனிதப் பிறப்புக்குகந்த முறை யிலான வாழ்க்கை நடத்துவதற்கான உணர்வையும் கோரிக்கைகளையும் மழுங்கடித்து மூழ்கடித்து வருகிறார்கள்"*

*—சோஷலிசமும் மதமும்*

மதம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் பெருமூச்சாகவும், இதயமற்ற உலகின் இதயமாகவும், ஆன்மாவற்ற நிலைகளின் ஆன்மாவாகவும் மாறி, மக்களுக்கு அபினியாக எப்படி செயல்படுகிறது என்பதை மார்க்ஸ் விளக்கி யிருக்கிறார். இந்தக் கூற்றை மிகவும் கொச்சைப்படுத்தி, மார்க்சின் கருத்துக்கு விரோதமாக பலர் விளக்கமளித்து வருகின்றனர். இதனை விமர் சித்து, ஆன்மீக ஒடுக்குமுறையான மதத்தை மக்களின் அபின் என்பதையும் மதத்தின் வர்க்கத் தன்மையையும் மார்க்ஸ் எவ்வாறு விளக்குகிறார் என்பதை லெனின் கூறும் விளக்கத்தோடு இரண்டாம் இயலில் (2. மதத்தின் வர்க்கத் தன்மை) தொகுக்கப்பட்டுள்ளது.

மார்க்சியத்தை சொல்லளவில் ஏற்று, மார்க்சிய சொற்களை பயன்படுத்தி, மார்க்சிய அடிப்படைக்கு விரோதமாக கருத்துரைப்பதென்பது தற்போது அதிகரித்து வருகிறது. மார்க்சிய அடிப்படையை ஏற்கமுடியாமல் இருப்பவர்கள் மார்க்சிய அடிப்படைக் கோட்பாடுகளை திருத்தியும் புரட்டியும் விளக்கமளித்து வருகின்றனர்.

மார்க்சிய முதலாசிரியர்களின் அடிப்படை நூல்களை படித்தறிய வேண்டி யது கம்யூனிஸ்டுகளின் கடமையாகும். இதனை உணராமல் இருந்தால், நாம் எதிராளியின் குழப்பத்துக்கு ஆட்படவேண்டிவரும். ஏனென்றால் மார்க்சி யத்துக்கு எதிரான கருத்துக்கள் மார்க்சியம் என்ற பெயர் தாங்கியே நடமாடு கிறது.

லெனின் கூறுகிறார்:-

*"நீதி, மதம், அரசியல், சமுதாயம் சம்பந்தமான எல்லாவிதச் சொல்லடுக்குகளுக்கும் பிரகடனங்களுக்கும் வாக்குறுதிகளுக்கும் பின்னே ஏதாவதொரு வர்க்கத்தின் நலன்கள் ஒளிந்து நிற்பதைக் கண்டு கொள்ள மக்கள் தெரிந்து கொள்ளாத வரையில் அரசியலில் அவர்கள் முட்டாள்தனமாக ஏமாளிகளாகவும் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள் வோராகவும் இருந்தனர், எப்போதும் இருப்பார்கள். பழைய ஏற்பாடு*



படிப்பகம்

www.padippakam.com

*ஒவ்வொன்றும் எவ்வளவுதான் அநாகரிகமான தாகவும் அழுகிப்போன தாகவும் தோன்றிய போதிலும் ஏதாவது ஓர் ஆளும் வர்க்கத்தின் சக்தி களைக் கொண்டு அது நிலைநிறுத்தப்பட்டு வருகிறது. சீர்திருத்தங்கள், மேம்பாடுகள் ஆகியவற்றின் ஆதரவாளர்கள் இதை உணராத வரையில் பழைய அமைப்பு முறையின் பாதுகாவலர்கள் அவர்களை என் றென்றும் முட்டாள்களாக்கிக் கொண்டேயிருப்பார்கள்."*

*—மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும்*

இந்து மதத்தின் சொல்லடுக்குகளுக்கும் பிரகடனங்களுக்கும் வாக்குறுதிகளுக்கும் பின்னே எந்த வர்க்கத்தின் நலன்கள் ஒளிந்து நிற் கின்றன என்பதை, நான்காம் இயலில் (4. **இந்து மதத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**) விளக்கப்படுகிறது.

பகுத்தறிவுவாதத்தின் தொடக்கமும் தந்தை பெரியாரின் பகுத்தறிவு வாதத்தைப் பற்றியும் ஐந்தாம் இயல் ஆராய்கிறது. மார்க்சிய நாத்திகத்துக்கும் பகுத்தறிவுவாத நாத்திகத்துக்கும் இடையே உள்ள முதன்மையான வேறுபாட்டை சுட்டுகிறது.

தோற்றம் பெற்ற மதம் அதன் மறைவு வரையான காலகட்டத்தில் கம்யூ னிஸ்ட் கட்சியின் பணியைப் பற்றி "3. **மதத்தைப் பற்றி கம்யூனிஸ்ட் கட்சியின் அணுகுமுறை**" என்ற மூன்றாம் இயல் விவரிக்கிறது. மத நம்பிக்கை பெற்ற பொதுமக்களை நாத்திகமாக்குவதே தமது தலையாய குறிக்கோளாக கம்யூனிஸ்ட் கட்சி கொள்ளவில்லை. வெகுஜன அமைப்பில் உறுப்பினராக சேர்வதற்கு நாத்திகராக இருக்க வேண்டும் என்று கட்சி வலியுறுத்துவதில்லை. ஆனால் மதத்தின் மாய்மாலதத்தை கம்யூனிஸ்ட் கட்சி மக்களிடமும் வெகுஜன அமைப்பிடமும் அம்பலப்படுத்தும்.

மக்களை விழிபுறச் செய்திட துணைபுரியும் கம்யூனிஸ்ட் போராளி மதத்தின் வர்க்கத் தன்மையை புரிந்தவராக இருக்க வேண்டும். மதத்தின் மாய்மாலத்திலிருந்து விடுபட்டு இருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களால் வழிகாட்டியாகச் செயற்படமுடியும்.

*"சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சியைப் பொறுத்தமட்டில், மதம் தனிநபரது சொந்த விவகாரமல்ல. நமது கட்சி தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்காகப் போராடும் வர்க்க உணர்வு கொண்ட, முன்னேறிய வீரர் களை ஒருசேர இணைக்கும் கழகமாகும். இப்படிப்பட்ட ஒரு கழகம் மத நம்பிக்கை களின் வடிவிலாகிய வர்க்க உணர்வின்மை, அறியாமை அல்லது மூடத்தனம் குறித்துப் பாராமுகமாய் இருக்க முடியாது, இருக்கவும் கூடாது.*

...



படிப்பகம்

*மதத்தின் மூலமான எல்லாவித மாய்மாலங்களாலும் தொழிலாளர்கள் ஏய்க்கப்படுவதை எதிர்த்து இப்படி ஒரு போராட்டம் நடத்தும் பொருட்டே ருஷ்யாவின் சமூக - ஜனநாயகத் தொழிலாளர் கட்சியாகிய நமது கழகத்தை நாம் நிறுவிக் கொண்டோம். ஆகவே நமக்குச் சித்தாந்தப் போராட்டம் தனிநபரது சொந்த விவகாரமல்ல, கட்சி அனைத்துக்கும், பாட்டாளி வர்க்கம் அனைத்துக்கும் உரிய விவகாரமாகும்.''*

*—லெனின்-சோஷலிசமும் மதமும்*

லெனின் வழிகாட்டுதலின்படி அமைந்துள்ள கம்யூனிஸ்ட்கட்சி மதத்தைப் பற்றி பாராமுகமாக இருக்க முடியாது. இந்தப் புரிதலோடு **விடுதலை இறையியல்** என்ற லத்தீன் அமெரிக்காவில் காணும் போக்கை அணுக வேண்டும்.

ஏழைகளே தேவனுக்கு உரியோராவர் என்று ஆதிகாலக் கிறிஸ்துவத் துக்கு புத்துயிர் ஊட்டுவதையும், மத வழியில் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுவதையும் பற்றிய கருத்தை எங்கெல்ஸ் தம் காலத்தில் எதிர்ப்பையும் மறுப்பையும் வெளியிட்டுள்ளார். இன்றைய லத்தீன் அமெரிக்காவில் காணும் **விடுதலை இறையியல்** என்ற புதிய போக்கை புரிந்து கொள்ள எங்கெல்சின் அணுகுமுறை நமக்கு உதவும்.

விடுதலை இறையியல் போன்ற போக்கு மார்க்சிய முதலாசிரியர்கள் காலத்தில் பார்க்கப்பட்ட ஒன்றுதான். அந்த போக்கு புதுப்புது வடிவமாக அந் தந்த நாட்டின் சூழல்களுக்கு ஏற்ப தோன்றுகிறது.

**கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்** என்ற நூலின் முன்னுரையில் எங்கெல்ஸ் கூறுகிறார், மக்கள் திரள்களிடையிலே இருக்க வேண்டிய மத உணர்ச்சிகள் மறையுமாயின் என்ன நேரும் என்பதைப் பாரிசில் நடைபெற்ற ஆட்சி நிரூபித்துக் காட்டவில்லயா? என்ற கேள்வியைத் தொடுக்கிறார். பொருள்முதல்வாதமும், கட்டுப்படுத்தப்படாத சுதந்திரச் சிந்த னையும் பொதுவாகக் கண்டத்தில் பண்பட்டவர்களுக்கான அத்தியாவசியத் தகுதிகளாகி வந்தனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமான பிடிவாதத் துடன் ஆங்கில நடுத்தர வர்க்கத்தார் தமது பல்வேறுபட்ட மத நெறிகளையும் இறுக்கமாகப் பற்றிக்கொண்டனர். இந்த நெறிகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருக்கலாம். ஆனால் இவையாவும் ஒன்று விடாமல் தெளிவான மத முத்திரை பெற்ற கிறிஸ்துவ நெறிகளாகும் என்பதைத் தெரிவித்து, மேலும் எங்கெல்ஸ் கூறுகிறார்:-

*“.. சாதாரண மக்களைச் சமய மனப்பாங்கு கொண்டோராக வைத் திருப்பது அவசியமென்று முன்பே ஐயமற உணர்ந்திருந்த பிரிட்டிஷ் முதலாளி, இந்த அனுபவங்கள் யாவற்றுக்கும் பிற்பாடு இந்த அவசியத்தை இன்னும் எவ்வளவு அதிகமாக உணர்ந்திருப்பார்?*

*கண்டத்தைச் சேர்ந்த தனது சகாக்களின் ஏளனப் பேச்சுக்களைப் பொருட்படுத்தாமலே அடிமட்டத்து மக்களைக் கிறிஸ்துவச் சமயநெறிக்கு வயப்படுத்தும் பணிக்காகத் தொடர்ந்து ஆண்டுதோறும் அவர் ஆயிரக் கணக்கிலும் பத்தாயிரக்கணக்கிலும் செலவிட்டு வந்தார். சமயப் பணிக்காகத் தமது சொந்த நாட்டில் இருந்த ஏற்பாடுகளுடன் திருப்தியடையாமல் தொழில்முறையாக சமயப் பணிக்கு ஏற்பாடு செய்வதில் உலகிலுள்ள மிகப்பெரிய ஒழுங்கமைப்பாளராகிய "சோதரர் ஜானாத்தனுக்கு" வேண்டுகோள் விடுத்து அமெரிக்காவிலிருந்து சமயப் புத்தெழுச்சியையும் மூடியையும் சாங்கியையும் இன்ன பிறரையும் இறக்குமதி செய்து கொண்டார்.*

*முடிவில் "ரட்சணியச் சேனையின்" அபாயகரமான உதவியையும் ஏற்றுக் கொண்டார். இந்த "ரட்சணியச் சேனை" ஆதிகாலக் கிறிஸ்து வத்தின் பிரசாரத்துக்குப் புத்துயிர் அளித்து ஏழைகளே தேவனுக்கு உரியோராவர் என்று அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறது. மத வழியில் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுகிறது, இவ்விதம் அது ஆதி காலக் கிறிஸ்துவ வர்க்கப் பகைமையின் ஓர் அம்சத்தை வளர்த்திடு கிறது, இன்று விரும்பி இதற்குப் பணம் வழங்கும் செல்வந்தர்களுக்கு இவ்வம்சம் ஒரு நாள் வினையாய் முடிவுறலாம்"*

"ரட்சணியச் சேனை" என்பது அன்றைய வடிவமாகும். ஆதிகாலக் கிறிஸ்துவத்தில் ஏழைகளே தேவனுக்கு உரியோராவர் என்று தெரிவித்து, மத வழியில் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராட வைத்த அன்றைய போக் கிற்கு, சில முதலாளித்துவ வர்க்கத்தாரே பணம் செலவழித்து வளர்த்தனர். இப்போக்கு முதலாளித்துவ வர்க்கத்தாரின் நேரடியான உதவியோடு நடைபெற்ற போது எங்கெல்ஸ் இதனை "இன்று விரும்பி இதற்குப் பணம் வழங்கும் செல்வந்தர்களுக்கு இவ்வம்சம் ஒரு நாள் வினையாய் முடிவுறலாம்"என்று விமர்சிக்கிறார்.

விடுதலை இறையியல் என்பது கிறிஸ்துவப் பாதிரியார் போன்றோர் களால், யேசு ஏழைகளுக்குத் தோழன் என்ற புரிதலின் அடிப்படையில் லத்தீன் அமெரிக்காவில் தோன்றிய அண்மைய போக்காகும்.

ஃபிடல் காஸ்ட்ரோவுடன், பிரேசில் நாட்டு பாதிரியார் ஃபிரே பெட்டோ நிகழ்த்திய நேர்க்காணல், **ஃபிடலும் மதமும் (மதம் மக்கள் புரட்சி (தமிழ்)** என்று நூல்வடிவம் பெற்றுள்ளது. அதில் பாதிரியார் ஃபிரே பெட்டோ, தமது பேட்டியில், அரசியல் இயக்கமாகிய மார்க்சிய லெனினிய இடதுசாரி இயக்கம் மதம் குறித்த தனது மதிப்பீட்டில் லத்தீன் அமெரிக்காவில் நாத்தி கத்தைப் போதித்ததில் தவறு செய்திருப்பதாகக் கூறியதற்குப் பதிலளிக்கும் போது ஃபிடல்:-

www.padippakam.com

*"ஓர் அரசியல் இயக்கம், ஒரு புரட்சிகர இயக்கம், வெறும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொள்ளாமல் குறிப்பிட்ட காலகட்டத்தில் நிலவும் நிலைமைகளை அடிப்படையாக கொண்டே தனது மதிப்பீடுகளைச் செய்ய வேண்டும். தனது உத்திகளையும் அணுகுமுறைகளையும் வகுத்துக் கொள்ள வேண்டும் என்று நம்புகிறவன்தான் நான். .. சரியான திட்டமோ உத்திகளோ இல்லாமல் ஓர் அரசியல் கருத்து கடைப்பிடிக்கப்படுமானால், அது எவ்வளவு சரியான கருத்தாக இருந்தாலும், அது கற்பனாவாதமாகி விடும்." (பக்கம் 307)*

இப்படித் தெரிவிக்கும் ஃபிடல் நேரடியாக மதத்தின் மீதான விமர்சனத்தை ஃபிரே பெட்டோயிடத்தில் வைக்காமல் இல்லை. அடிமைச் சமூகம் முதல் இன்றைய சமூகம் வரையில் சுரண்டலுக்கு ஆளான மக்களுக்குச் சார்பாக, கிறிஸ்துவ மதம் எந்தவித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை என்று வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார். அத்துடன், ஃபிரே பெட்டோ நியாயமாக நடந்து கொள்வது என்பது யேசுவைப் பின்பற்றுவதற்கான ஓர் அடிப்படைத் தகுதி என்று தனது விளக்கத்தில் கூறிய கதைக்கு, ஃபிடல் பதிலளிக்கிறார்:-

*".. ஒரு நுட்பமான மாறுபாட்டை வெளிபடுத்த விரும்புகிறேன். ஒரு பணக்காரன் தான் திருடியதைப் போன்று நான்கு மடங்கு செல்வத்தை ஒருபோதும் திருப்பித் தரமாட்டான். ஏனென்றால், ஒரு பணக்காரனிடம் இருப்பதெல்லாமே திருடப் பட்டவையாகத்தான் இருக்கும். .. ஏனென்றால், அந்த வாக்குறுதியை நிறை வேற்ற அவன் மறுபடியும் நான்கு மடங்கு திருடியாக வேண்டும்." **(மதம் மக்கள் புரட்சி,** பக்கம் 350)*

இந்தச் சுரண்டலைப் புரிந்துகொள்வதற்கான பொருளாதாரக் கண்ணோட்டம் விடுதலை இறையியலில் கிடையாது. பணக்காரனிடம் செல்வம் எப்படிச் சேர்கிறது என்பதும் ஏழைகள், ஏன் ஏழைகளானார்கள் என்பதும் விடுதலை இறையியலுக்குப் புரியாது. விடுதலை இறையியல் இந்த விளக்கத்திற்கு மார்க்சியத்திடம் வந்தடைய வேண்டும்.

ஃபிரே பெட்டோ தனது கேள்வியில், ரீகன், சிலி நாட்டுக் கொலைகார ராணுவ ஜெனரல்கள், பினோசெட் போன்றவர்கள் நம்புகிற கடவுளுக்கும், லத்தீன் அமெரிக்கத் தொழிலாளர்கள் நம்புகிற கடவுளுக்கும் இடையே எந்த ஒற்றுமையும் கிடையாது என்கிறார்.

இந்த இரட்டைப் கிறிஸ்துகளைப் பற்றி **ஜார்ஜ் தாம்சன்** தமது **"மதத்தைப் பற்றி"** என்ற நூலில் எழுதியிருக்கிறார். அவர் கூறுகிறார், கிறிஸ்துகள் இருவர் இருக்கின்றனர். ஒருவர் தொழிலாளி கிறிஸ்து, மற்றொருவர் ஆளும் வர்க்கத்தின் கிறிஸ்து.

தொழிலாளிகளின் விடுதலைக்கான நம்பிக்கை ஒளியாகவும், துன்பங்களின் குறியீடாகவும் ஏழைகளின் யேசு கிறிஸ்து இருக்கிறார். மற்றொரு யேசு



படிப்பகம்

கிறிஸ்து ஆளும் வர்க்கத்தின் சார்பாக, தொழிலாளர்கள் பொருளாதார முறையில் சுரண்டப்படுவதை ஏற்றுக் கொள்கிறார். எல்லா மதங்களிலும் இதுபோன்ற இரண்டு போக்குகள் இருக்கின்றன. தொழிலாளர்கள் தம்மோடு வேலை செய்யும் கிறிஸ்துவ தொழிலாளர்களுடன் இணைந்து, அவர்களின் முன்னேற்றத்துக்குத் துணைபுரிய வேண்டும். கிறிஸ்துவத் தொழிலாளர்கள் காண விரும்பும் சமாதானம், நல்லெண்ணம், அண்டை வீட்டாரிடம் நேசம், சமூகத்திற்குச் சேவை செய்தல் ஆகிய அவர்களுடைய லட்சியங்கள், இதே லட்சியத்திற்காகப் போராடும் தொழிலாளர்கள், கிறிஸ்துவத் தொழிலாளாகளிடம், நீங்கள் நினைக்கும் லட்சியத்தை அடைவதற்கு, சமூக அமைப்பை மாற்றினால்தான் முடியும். அதனை ஒன்று திரண்ட தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களால்தான் அடைய முடியும் என்பதை எடுத்துச் சொல்லும்படி ஜார்ஜ் தாம்சன் வலியுறுத்துகிறார். இவ்வழியில்தான் சமூக அநீதிக்கு எதிராக மத வடிவில் வெளிப்படும் கண்டனமாகவும், எதிர்ப்புக் குரலாகவும் விளக்குகிறார் ஜார்ஜ் தாம்சன்.

> *“.. சமாதானம், நல்லெண்ணம், அண்டை வீட்டாரிடம் நேசம், சமூகத்திற்குச் சேவை புரிதல் போன்ற மானுட உணர்வுகள் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இழக்காமல் தக்க வைத்துக்கொள்ள உதவுகின்றன. இவ்வுணர்வுகள் முதலாளித்துவ சமுதாயத்தில் எவ்வளவுதான் உரக்கப் பறைசாற்றப்பட்டாலும் நடைமுறையில் மிதித்து நசுக்கப்படுகின்றன. 1381ஆம் ஆண்டில் நிலப்பிரப்புத்துவ ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த ஆங்கில உழவர் எழுப்பிய முழக்கம்: “நாம் யேசு கிறிஸ்துவின் வடிவில் வளர்க்கப்பட்ட மனிதர்கள். ஆனால் விலங்குகளைப்போல் நடத்தப்படுகிறோம்” என்பதே. இங்கிலாந்தின் வரலாற்றில் இந்த முழக்கம் பலமுறை மீண்டும் மீண்டும் லெவலர்களாலும் டிக்கர்களாலும் லடைட்டுகளாலும் எழுப்பப்பட்டு வந்துள்ளது. இது இன்னும் உயிர்ப்புடன் இருக்கும் ஓர் உணர்ச்சியின் குரலாக விளங்குகிறது. சமூக அநீதிக்கு எதிராக மத வடிவில் வெளிப்படும் கண்டனமாக, எதிர்ப்புக் குரலாக உள்ளது”*
>
> *—மதத்தைப் பற்றி*

இவ்வாறு மத நம்பிக்கையுள்ள தொழிலாளர்களை, அவர்களின் நம்பிக்கையின் அடிப்படையிலேயே சென்று, சமூக அநீதிக்கு எதிராக, மத வடிவில் வெளிப்படும் கண்டனமாக, எதிர்ப்புக் குரலாக மாற்ற வேண்டும். மதத்தைப் பற்றிய விமர்சனத்தை அனைத்தும் பற்றிய விமர்சனமாக விரிவுபடுத்த அவர்களுக்குத் துணைபுரிய வேண்டும்.

இந்தியப் பாட்டாளிகள் விமர்சனக் கண்ணோட்டத்தில் விடுதலை இறையியல் போக்கைப் படித்தால் அல்லது அவர்களுக்குத் தெளிவாக்கினால், இந்துத் தொழிலாளர்கள், கிறிஸ்துவத் தொழிலாளர்கள், முஸ்லிம்

தொழிலாளர்கள் மற்றும் பிற மதப்பிடிப்புள்ள தொழிலாளர்களுடன் எவ்வாறு இணைந்து சமூக முன்னேற்றத்திற்குப் போராடுவது என்பதில் உறுதிகொள் வார்கள். மத நம்பிக்கைகொண்ட தொழிலாளிகள், இன்றைய பாட்டாளி வார்க்கத்துடன் இணைந்து போராடுவதிலுள்ள தயக்கங்கள் படிப்படியாக நீக்கம் பெற்று புதிய சமூகத்தைப் படைக்கத் துணைபுரிவர்.

இவைகளையே விடுதலை இறையியல் என்பது பற்றிய எனது பார்வையாக இங்கு பதிந்துள்ளேன்.

மேலும் லெனின் கூறுவதை பார்ப்போம்:-

> *"பேராசிரியர்கள் தமது கருத்துமுதல்வாத, "விமர்சன" அமைப்புகளை ஆதிக்கத்திலிருந்த மத்திய காலத் "தத்துவவியலுக்கு" (அதாவது இறை யியலுக்கு) உகந்தவாறு சரிசெய்து அதிகார பூர்வமான தமது சம்பளங் களைச் சம்பாதித்துக் கொண்டனர் - திருத்தல்வாதிகளும் உடனே அவர்களை நெருங்கிச் சென்று மத்தை, தற்கால அரசு சம்பந்தமாய் மட்டுமின்றி முன்னேறிய வர்க்கத்தின் கட்சி சம்பந்தமாகவுங்கூட, அவரவரது "சொந்த விவகாரமாக்க" முயன்றனர்"*
>
> *—மார்க்சியமும் திருத்தல்வாதமும்*

மதத்தை, தற்கால அரசு சம்பந்தமாய் மட்டுமின்றி முன்னேறிய வர்க்கத் தின் கட்சி சம்பந்தமாகவுங்கூட, அவரவரது "சொந்த விவகாரமாக்க" முயற்சிப்பதை, லெனின் திருத்தல்வாதமாகவே விமர்சிக்கிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**விடுதலை இறையியலை** இயக்கவியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டுமா? இறையியல் கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ள வேண்டுமா? இதனோடு இந்திய மதங்களை குறிப்பாக இந்து மதத்தை விடுதலை இறையியல் என்ற புதிய கண்ணோட்டத்தின் வழியில் விவரிக்க வேண்டுமா? இயக்கவியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் அணுக வேண்டுமா? தொடரும் விவாதத்தை பொருத்திருந்து பார்ப்போம்.

இதன் தொடர்ச்சியாக நடைபெறும் விவாதங்களால், விடுதலை இறை யியல் என்பதுபற்றி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளும்படியான முடிவிற்கு வரலாம்.

இந்து மதத்தில் உள்ள முதன்மைப் பிரிவான அத்வைதத்தை இயக்கவியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் இந்நூல் ஆராய்ந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக இந்திய மதங்கள், தத்துவங்கள் இயக்கவியல் பொருள்முதல் வாதக் கண்ணோட்டத்தில் அணுகப்பட்டு நூலாக வெளிவரும்.

மார்க்சிய ஆசிரியர்களின் கருத்தை நேரடியாக படித்து அறிந்து கொள்வது சரியாக இருக்கும் என்பதால் அவர்களின் கருத்துகள் நீண்ட மேற்கோள்களாக

www.padippakam.com

இந்நூலில் இடம் பெற்றுள்ளது. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் களின் நூல்களை நேரடியாக படிக்கத் தூண்டுவதற்கே இவ்வழிமுறை கையாளப்பட்டுள்ளது. இம்மேற்கோள்கள் புதிய வாசகர்களுக்கு எளிமையாக இருக்கும் வகையில் சிறுசிறு பத்தியாக பிரிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு "சமூக வளர்ச்சியின் அடித்தளமும் மேற்கட்டமைப்பும் பற்றி மார்க்சியம்" என்ற நூல் வெளிவந்தது. இந்த ஆண்டு "மதத்தைப் பற்றி மார்க்சியம்" வருகிறது. அடுத்து **"மார்க்சின் மாபெரும் இரு கண்டு பிடிப்புகள்"** (வரலாற்றியல் பொருள்முதல்வாதம், உபரி மதிப்பு) என்ற நூல் வரவிருக்கிறது.

**அ.கா.ஈஸ்வரன்**
அலைபேசி எண்: 9283275513
செந்தழல் வெளியீட்டகம்
மின்னஞ்சல்: marxism.eswaran@gmail.com



படிப்பகம்

www.padippakam.com

# 1. மதம் தோன்றாக் காலமும், மதத்தின் தோற்றமும்

ஆதியிலே மக்கள் இயற்கையின் தோற்றத்தையும், மாற்றத்தையும் அறிந்து கொள்வதில் திறமற்றவர்களாக இருந்தார்கள். இவ்வுலகில் இயங்கும் ஒவ்வொன்றின் பின்பும், ஒரு சக்தியிருப்பதாக நினைத்தனர். தொடர் மழை, பெருவெள்ளம், சூறாவளியால் புழுதிகளும் சருகுகளும் சுழன்றடிக்கப்படு வதைக் கண்ட மக்கள் இதற்கெல்லாம் இவற்றில் உள்ள கண்ணிற்குப் புலப் படாத ஆவிகளே காரணம் எனக் கற்பித்துக் கொண்டனர்.

அதேபோல் கொள்ளை நோய், திடீர் பெரும் உயிரிழப்பு போன்றவை நிகழும்போது மருட்சியடைந்தனர். இயற்கைப் பொருட்களின் இயக்கத்தை அறிய முடியாத அன்றைய மக்கள், இயற்கைப் பொருட்களுக்குள் ஒருவித சக்தியை உருவகப்படுத்தியும் அதனை வழிபடவும் செய்தனர்.

மனிதயினம் தோன்றுவதற்கு முன்பு மதம் இருக்கவில்லை, மனிதயினம் தோன்றியபோது மதம் காணப்படவில்லை. மனிதயினம் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தபோது மதவுணர்வு ஏற்படவில்லை, இயற்கையை வெல்வதென்பது அவ் வளவு எளிதல்ல என்ற நிலையை உணர்ந்தவுடன் (அச்சவுணர்வு) மதவுணர்வு உருவாகியது.

இது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள நிலைமையினால் உண்டான மதத்தின் தோற்றத்திற்கான பண்டைய மற்றும் தொடக்க காரணமாகும்.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியால் ஏற்பட்ட சமூக உறவுகள், சுரண்டல் தன்மையினதானபோது காணப்பட்ட சமுதாய அழிவாற்றலின் முன் மக்களின் வலுவின்மை மத இருப்பிற்கு இரண்டாம் காரணமாகிறது. இயற்கையின் அழிவாற்றலைப் போலவே இந்தச் சமூக சக்திகளும் சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன.

இயற்கை செயற்படுவது, இப்பூவுலகிற்கு அப்பாற்பட்ட சக்தியின் சங்கல்பத்தால் என்று கருதிய மக்கள், இயற்கையை கட்டுப்படுத்தும் அந்த சக்தியே, தங்களையும், சமூகத்தையும் ஒழுங்கு படுத்துவதாக நினைத்தனர். அதனால் அதன்மீது அச்ச உணர்வும், கீழப்படிதலும் உண்டாயிற்று. இதன் அடிப்படையில், அந்த அதீத சக்திகளை வணங்கவும், அதனைச் சார்ந்து இருக்கவும் வேண்டும் என்று கருதிக் கொண்டனர்.

இயற்கை மற்றும் சமூகத்தின் முன்பான மக்களின் இயலாத் தன்மையே மதத்தின் தோற்றதுக்கு முதன்மையான இரு காரணங்களாகும்.



படிப்பகம்

மதம் நிறுவனமாக உருவெடுக்கும்போது இவற்றை எல்லாம் தன்வய மாக்கிக் கொண்டது.

இயற்கை மற்றும் சமூக எதார்த்தத்தின் பிரதிபலிப்பே மதம். அதாவது மதம் இவ்வுலக வாழ்வின் பிரதிபலிப்பாகும். ஆனால் மதம் தம்மை, உலகிற்கப்பால் உள்ள சக்தியின் (இறை) வெளிப்பாடாகக் காட்டிக் கொள்கிறது.

இயற்கையின் தோற்றங்களுக்கும் மாற்றங்களுக்கும் ஆன காரணங்களை அறிந்துகொள்ள முடியாத நிலையில், தமக்குச் சாதகமாக நடப்பவற்றிற்கு இறைவனே காரணம் என்றும், சாதகமற்ற சூழ்நிலைகளுக்கு இறைவனது கோபம் அல்லது துர்தேவதைகளின் தூண்டுதல் காரணம் என்றும் ஆதி மனிதன் நினைத்துக் கொண்டான். சமூகத்தில் சுரண்டல் அமைப்பு தோன்றியபோது, சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தில் மனிதன் தமது இயலாமையின் அடிப்படையில், தமக்கு இம்மையில் கிடைக்காமல் போன, அல்லது மறுக்கப்பட்ட சிறந்த வாழ்வு மறுமையில் கிட்டும் என்ற நம்பிக்கைக்கு ஆட்பட்டான்.

இதனை லெனின் கூறுகிறார்:-

> *"காட்டு மிராண்டியாய் வாழும் மனிதன் இயற்கைக்கு எதிரான தனது போராட்டத்தில் ஏலாதவனாய் இருக்கும் அவல நிலை எப்படித் தேவதைகளிலும் சைத்தான்களிலும் அற்புதங்களிலும் பிறவற்றிலும் தவிர்க்க முடியாதவாறு நம்பிக்கையை உண்டாக்குகிறதோ அதே போல, சுரண்டப்படும் வர்க்கங்கள் சுரண்டுவோருக்கு எதிரான தமது போராட்டத்தில் ஏலாதவையாய் இருக்கும் அவல நிலையானது மறுமையில் சிறப்பான வாழ்வு உண்டென்பதில் தவிர்க்க முடியாதவாறு நம்பிக்கையை உண்டாக்குகிறது."*
>
> *—சோஷலிசமும் மதமும்*

எங்கெல்ஸ் கூறுகிறார்:-

> *"எல்லாச் சமயங்களுமே, மனிதர்களின் அன்றாட வாழ்க்கையைக் கட்டுப் படுத்துகிற அந்தப் புறம்பான சக்திகள் பற்றி மனிதர்களின் மனங்களில் ஏற்படும் கற்பனையின் பிரதிபலிப்பே தவிர வேறு எதுவுமில்லை, இந்தப் பிரதிபலிப்பில் மண்ணுலக சக்திகள், இயற்கையை மீறியதான சக்திகளின் வடிவத்தை மேற்கொள்கின்றன. வரலாற்றின் துவக்கத்தில் இயற்கையின் சக்திகளே அவ்வாறு பிரதிபலிக்கப்பட்டன, மேலும் ஏற்பட்ட பரிணாமப் போக்கில் இவை பல்வேறு மக்களிடையே மிகவும் பன்முகமான பல்வகையான உருவகத் தோற்றங்களை மேற் கொண்டன...*
>
> *ஆனால் விரைவிலேயே இயற்கையின் சக்திகளுடன் அக்கம்பக்க மாகச் சமுதாயச் சக்திகளும் செயலூக்கமடையத் தொடங்கு கின்றன. இந்த*

www.padippakam.com

*சக்திகள் மனிதனைச் சம அளவில் புறம்பாகவும் முதலில் சம அளவில் விளக்கமுடியாத வகையிலும் எதிரிடுகின்றன, இயற்கை சக்திகளைப் போலவே காணப்படுகின்ற அதே இயற்கை அவசியத்துடன் அவன்மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. முதலில் இயற்கையின் விந்தை யான சக்திகளை மட்டுமே பிரதிபலித்து வந்த கற்பனை உருவங்கள் இந்தக் கட்டத்தில் சமுதாய இயல்புகளைப் பெற்று வரலாற்று சக்திகளின் பிரதிநிதிகளாகின்றன.''*

*—டூரிங்குக்கு மறுப்பு - பக்கம் 555 - 556*

—இவ்வாறு இயற்கை, சமூகம் ஆகிய இரண்டும் மனிதயினத்திற்கு முன் பேரழிவாற்றல் பெற்றதாக இருப்பது மதயிருப்பிற்கான காரணமாகும். இதனை விளங்கிக்கொள்வதன் வழியிலேயே மார்ச்சியத்தினுடைய மதத்தின் மீதான அணுகுமுறையை அறிந்துகொள்ள முடியும்.

இன்றைய வடிவிலான மனிதயினம் கிட்டத்தட்ட எழுபதாயிரம் ஆண்டு களுக்குட்பட்ட காலத்திற்குள்தான் வாழ்ந்து வருகிறது. இதில் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை சுமார் ஐம்பதாயிரம் ஆண்டுகள் இருக்கும். அதன் பின்பே மதம் தோற்றம் பெறுகிறது. அதனால் மதம் என்பது காலவரிசையில் அண்மைக் காலத்தவையாகவும், இடையில் தோன்றியதாகவும் இருக்கிறது.

மதத்தின் தோற்றத்திற்கு முன்பான நிலைமைகளைப் பார்ப்போம்.

இயற்கையின் முன் மனிதயினம் வலுக்குன்றியிருந்த அக்காலத்தில், அசையும் ஒவ்வொன்றிற்கும் பின் ஒரு சக்தியிருப்பதாக எண்ணியது. அப் போது சமூகத்தின் உற்பத்திச் சக்திகள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தன. தொடக்கத்தில் இந்த உற்பத்திச் சக்தியின் குறைவை இட்டு நிரப்புவதற்குக் மாயவித்தையை கையாண்டனர். இது மதத்தின் தோற்றத்திற்கு முன்பிருந்த நிலையாகும். பிற்கால அறிவியல் வளர்ச்சிக்கும் இந்த மாயவித்தையின் தொடர்ச்சியே காரணமாகும்.

உற்பத்திச் சக்தியின் தாழ்ந்த நிலை, அவர்களை மாயவித்தை என்ற முறையைக் கையாள வைத்தது. மாயவித்தை என்பது தாம் விரும்புவது கிடைத்ததுபோல் பாவனை செய்து கொள்வதாகும். அதாவது இயற்கையைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததுபோல் ஒரு பொய்யான பாவனை செய்தலே மாயவித்தை எனப்படும். இதனை அச்சமூகத்தில் இருப்பவர்கள் கூட்டாகவே செய்தனர்.

வேட்டையில் விலங்கு ஏதும் கிடைக்காதபோது, எதனிடமும் வேண்டி நிற்காமல், அந்த விலங்கைப் பிடிப்பதுபோல் நடனமாடுவார்கள், கிடைப்பது அரிதான போதெல்லாம் இவ்வகையான நடனத்தையே தொடர்வார்கள். அப்போது வேட்டையாடுவதற்கான நுணுக்கத்தை ஒத்திகை செய்து பழகிக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்வார்கள். உணவு கிடைக்காதபோது இவ்வகையான நடனத்தை நிகழ்த்தி தமது சோர்வைகப் போக்கி, உற்சாகத்தை இழக்காமல் வேட்டையைத் தொடர்வார்கள்.

மாயவித்தையைப் பற்றி ஜார்ஜ் தாம்சன் கூறுகிறார்:-

> *"கடவுள் நம்பிக்கையும் வழிபாடு அல்லது பலிதானமும் மதத்தின் சிறப்பம்சங்கள். இன்றும் மிகப் பழங்குடிக் காட்டு மிராண்டிகளுக்குக் கடவுளுமில்லை, வழிபாடுமில்லை, பலிதானமுமில்லை. இன்று நாகரிகம் அடைந்தவர்களாக உள்ள மக்களின் ஆதிகாலத்தை ஆராயப் புகுந்தால் அவர்களுக்கும் அக்காலத்தில் கடவுள்கள் இருக்கவில்லை, வழிபாடும் பலிதானமும் இருக்கவில்லை என்பது தெரியவரும். அக்காலத்தில் இருந்ததெல்லாம் மாயவித்தை மட்டுமே.*
>
> *எதார்த்தத்தை, புற உலகை, தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது போல் ஒரு பொய்த்தோற்றத்தை, போலியை உருவாக்குவதன் மூலம் எதார்த் தத்தை, புற உலகை உண்மையாகவே தன்னால் கட்டுப்படுத்த முடியும் என்பதே மாயவித்தைக்கு ஆதாரமாக இருக்கும் மூலக்கருத்து. அதன் ஆரம்பக் கட்டங்களில் அது வெறும் போலச்செய்தலாகவே இருந்தது. மழை வேண்டும் என்று விரும்பினால், மேகக் கூட்டத்தையும் இடியையும் மின்னலையும் பொழியும் மழையையும்போல் நடித்து நடன மாடுவார்கள். தாம் விரும்பும் எதார்த் தத்தை, புற உலகப் பொருள்களை, நிகழ்ச்சிகளைக் கைகூடச் செய்ய அது கைகூடியது போல் கற்பனை செய்து நடிப்பார்கள். பிந்திய கட்டத்தில் போலச்செய்தலோடு கட்டளை பிறப்பித்தலும் இருக்கும். மழையே பெய் என்று கூவுவது கட்டளையிடு வதாக இருக்குமேயன்றி வேண்டுதலாக இருக்காது. இவ்வாறு கூட்டாகக் கட்டளையிடுதல் சமுதாய வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குப் பொருத்தமானது. இந்தக் கட்டத்தில் சமூகம் வர்க்கங்களாகப் பிளவு படாமல் ஒன்றாக முழுமையாக இருந்தது. சமூகம் எல்லா உறுப்பினர் களுக்கும் ஒவ்வொரு தனி உறுப்பினருக்கும் மேலான ஒன்றாக இருந்தது. அவர்களுக்குப் பகைபோல் தோன்றிய இயற்கைச் சக்திகளுக்கு எதிரான பலவீனமான ஆனால் ஒன்றுபட்ட அணியாக விளங்கியது."*
>
> *—மதத்தைப் பற்றி*

இதனை மதத்தோடு குழப்பிக் கொள்ளக் கூடாது, மாயவித்தை நடை முறையில் இருக்கும் போது மதம் தோன்றவில்லை. தோன்றுவதற்கான காரணங்கள் உருவாகவில்லை. ஏனென்றால் அப்போதைய சமூகம் வர்க்கங் களாகப் பிரிவுபடவில்லை. அன்றைய தாழ்ந்த உற்பத்திச் சக்திக்கு உட்பட்ட தொழில்நுட்ப குறைபாட்டை நிறைவு செய்வதற்கு மாயவித்தை தேவைப் பட்டது, இதனை மூடநம்பிக்கை எனவும் சொல்லிவிட முடியாது. ஏன் என்றால்



படிப்பகம்

மாயவித்தை என்பது எதனிடமும் வேண்டி நிற்கவில்லை. எந்தத் தெய்வீக சக்தியிடமும் உதவியை எதிர்பார்க்கவில்லை. இயற்கையின் முன் வலுவின்மையில் இருக்கும்போது அச்சமூகத்திற்கு நம்பிக்கை இழப்பிலிருந்து விடுபடுவதற்கு இந்த மாயவித்தை பயன்பட்டது.

இதனை தேவிபிரசாத் சட்டோபாத்யாயா கூறுகிறார்:-

> *"இவ்வாறாக, புராதன மாயவித்தைகளை பிற்கால தத்துவார்த்த சொற்களில் கூறுவதானால், அதை ஆன்மீகவாதத்திற்கு முந்தையதாகவும் கருத்துமுதல்வாதத்திற்கு முந்தையதாகவும் கூறுவதில் தவறேதுமில்லை. ஏனெனில் ஆன்மீகமும் கருத்துமுதல்வாதமும், இறையியல் ரீதியாகக் கூறுவதானால், கடவுள் என்பவரை உலகப் படைப்பாளியாகவும், உலகை வழி நடத்துபவராகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதைத் தத்துவார்த்த மொழியில் கூறுவதனால், உணர்வுகளாலும், அறிதலாலும் பாதிக்கப்படும் பொருளாயத உலகம் வெறும் தோற்றமே. அது மூலாதாரமான ஒன்றைச் சார்ந்துள்ளது. அது மனம் பிரக்ஞை, உணர்வு ஆகியவற்றைப் பொறுத்தது எனக் கூறவேண்டிவரும். புராதன மாயவித்தைக்காரன் இன்னும் அந்த உணர்வு நிலைக்குச் செல்லவில்லை."*
>
> *—இந்தியத் தத்துவவியல்*

சமூகத்தில் பயன்படுத்தும் கருவிகளுடைய வளர்ச்சியின் ஊடே உழைப்புப் பிரிவினை தோன்றியது. இந்த உழைப்புப் பிரிவினையின் காரணமாக அதுவரை கிட்டியதைக் காட்டிலும் சிறிது உபரியாகப் பொருட்கள் கிடைத்தன. அப்போது குழுத்தலைவனின் பொறுப்புகள் கூடியன. கூட்டுழைப்பும் சமப்பங்கீடும் போய், வேலைப் பிரிவினைக்கு ஏற்றபடி பங்கீடு மாறின.

இதனை அடுத்து உடலுழைப்பு சாதாரணமாகக் கருதப்படுகிறது. உழைப்பை மேற்பார்வையிடுவது மற்றும் மூளை உழைப்புப் பணிகள், தனி மதிப்பை பெற்றும் அதற்கு உபரியிலிருந்து பெரும் பங்கும் அளிக்கப்படுகிறது.

கூட்டாகச் செய்த பழைய மாயவித்தை என்பது, இப்போது சிலருக்கு மட்டும் கைவந்தவையாக மாறி, அவ்வாறு செய்பவருக்குத் தனிச்சிறப்பும் கொடுத்து, தனிச் சலுகை பெற்ற வர்க்கமாக உருப்பெற்றது. முன்பு கூட்டாக மாயவித்தை நிகழ்த்திய போது, அனைவருக்கும் ஒரேமாதிரியான மனக் கிளர்ச்சி ஏற்பட்டது, கூட்டான உணர்வுபூர்வக் கிளர்ச்சி கிடைத்தது. வளர்ச்சியுற்ற உற்பத்தி முறையினால் தோன்றிய வர்க்கச் சமூகத்தில் கூட்டுழைப்பு மாற்றம் பெற்று வேலைப் பிரிவினை ஏற்பட்டதுடன், சலுகை பெற்ற வர்க்கத்திற்காக நடத்தப்படும் சடங்காக மாயவித்தை மாறிவிடுகிறது. இவ்வாறு மதம் வர்க்கச் சார்புடன் தோற்றம் பெற்றது.

www.padippakam.com

இதனை தேவிபிரசாத் சட்டோபாத்யாயா கூறுகிறார்:-

*“.. உற்பத்தித் திறன் முன்னேறும்போது இந்தப் பழங்கால கூட்டுத் தன்மை சிதைகிறது. அது உபரி உற்பத்தியைத் தோற்றுவிக்கிறது. அதே சமயத்தில் பலருடைய உழைப்பில் ஒரு சிலர் வாழும் வாய்ப்பையும் தோற்றுவிக்கிறது. ஆனால் பழங்கால மந்திரத்தின் பயன்பாட்டின் நினைவு மறையவில்லை. அது ஒரு சிலருக்கு மட்டுமே ரகசியமாகத் தெரிந்த மர்மமான ஆன்மீக சக்தி என்னும் அறிவாகிவிடுகிறது. இதுவே மூடநம்பிக்கை. இது உண்மையான உற்பத்தி முறைக்கு தடையாகிறது. மாயவித்தை அதன் எதிர்நிலையைச் சென்றடைகிறது. அது மதமாக மாறுகிறது”.*

*—உலகாயதம் பக்கம் 119-120*

ஒவ்வொரு இனக்குழுவிற்கும் தலைவன் இருப்பதுபோல் இயற்கையின் ஒவ்வொரு சக்திக்கும் கொடுத்த உருவங்கள் இப்போது தனித்தனிக் கடவுள்களாக மாற்றம் பெற்றன. பழங்குடித் தலைவனிடம் முறையிடுவதுபோல் இப்போது தனித்தனிக் கடவுள்களிடம் முறையிடப்பட்டது.

மேலும் சமூகம் வளர்ச்சியடைந்தபோது குழுத்தலைவனின் அதிகாரமும், சக்தியும் கடவுளிடமிருந்து பெற்றதாக விளக்கப்பட்டது. சிற்றரசுகள் அழிந்து பேரரசு தோன்றியபோது பல கடவுள்கள் என்பது முழுமுதற் பெருங்கடவுளாக தனிமுதல்கடவுள் என்ற சிந்தனைமாற்றம் ஏற்பட்டது. இதற்குப் பிறகு இவ் வுலகத்தை இயக்கும் சக்தி ஒன்று இருப்பதாகவும், அதுவே அனைத்தையும் இயக்கிக் கட்டுப்படுத்துகிறது என்றும் கூறப்பட்டது. இந்தச் சக்தியை வழி பட்டுக் கீழ்ப்படிந்தால் வேண்டுவது கிடைக்கும் என நம்பப்பட்டது.

விளைநிலத்தின் சொந்தக்காரர்களுக்கும், வணிகர்களுக்கும், அரசுக் கட்டமைப்பில் உள்ள ஆயுதம் தாங்கிய படைவீரர்களுக்கும், மற்ற பணி யாளர்களுக்கும் தேவைப்படும் உணவும் மற்றும் இன்றியமையாத உற்பத்திப் பொருட்களும், சமூகத்தில் உடலுழைப்பிலிருந்து விடுபட்டவர்களான இவர்களுக்குத் தடையில்லாமல், எதிர்ப்பில்லாமல் கிடைத்திட மதச்சித்தாந்தம் தேவைப்பட்டது. உடலுழைப்பாளர்களுக்கோ உயிர் வாழ்வதற்குத் தேவையானவை மட்டுமே கிடைத்தன. இதனால் உடலுழைப்பாளர்கள் கிளர்ந்து எழாமல், சமூகக் கொந்தளிப்பு ஏற்படாமல் பாதுகாக்க மதச்சித்தாந்தக் கருத்துக்கள் வர்க்கச் சமூகத்திற்குத் தேவைப்பட்டது.

பழைய மாயவித்தை இப்போது முழுமையாக ஒரு மகாசக்திக்குள் அடக்கப்படுகிறது. இயற்கையாய்த் தோன்றிய நோய்களும், வறட்சிகளும் கடவுளின் சீற்றத்தால் ஏற்படுவதாக விளக்கம் கொடுத்து, உலகத்திற்கு அப்பாலுள்ள சக்தியின் கோபத்தைத் தணிக்கவும், கோபம் வராமல் தடுக்கவும், பழைய மாயவித்தையானது புதிய மந்திர சக்தியாக உருமாறி செயல்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப மதக் கருத்துக்களின் மாற்றம் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை எங்கெல்ஸ் கூறுகிறார்:-

> ".. அது (மதம்) பொருளாயத வாழ்க்கையிலிருந்து மேலும் விலகி நிற்கிறது, அதற்கு மிகவும் அயலானதாகத் தோன்றுகிறது. மனிதர்கள் தங்களுடைய சொந்த இயல்பு பற்றியும் தங்களைச் சூழ்ந்து நிற்கும் புறநிலையிலுள்ள இயற்கை பற்றியும் கொண்டிருந்த அறிவீனமான, தவறான, பழைய கருத்துக்களிலிருந்து மிகவும் ஆதியான காலங்களில் மதம் தோன்றியது. ஆனால் ஒவ்வொரு சித்தாந்தமும் தோன்றிய உடனே, நிலவும் கருத்தோட்டங்களுக்கு ஏற்ப, அந்தக் கருத்தோட்டங்களைத் திரும்பத் திரும்ப மறுபரிசீலனை செய்தபடி வளர்கிறது, அந்தக் கருத்தோட்டங்களை மேலும் வளர்க்கிறது. அப்படிச் செய்யாவிட்டால், அது ஒரு சித்தாந்தமாக இராது. அதாவது சுதந்திரமான வளர்ச்சிக்கும் அவ்வளர்ச்சிக்கு உரிய விதிகளுக்கும் மட்டுமே உட்பட்டிருக்கும் சுதந்திரமான சிந்தனைகளுடன் எந்தத் தொடர்பும் கொண்டதாக இராது. கடைசிப் பரிசீலனையில் பார்க்கும்பொழுது, எந்த மனிதர்களின் தலைகளுக்குள்ளே இந்தச் சிந்தனை நிகழ்வுப்போக்கு நடந்து கொண்டிருக்கிறதோ, அந்த மனிதர்களின் பொருளாயத வாழ்க்கை நிலைமைகளே அந்நிகழ்வுப் போக்கின் ஓட்டத்தை நிர்ணயிப்பது தவிர்க்க இயலாதவாறு இந்த மனிதர்களுக்குத் தெரியாமலே இருந்து விடுகிறது, அப்படி இல்லாவிட்டால், சித்தாந்தம் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்துவிடும்."
>
> —*லுத்விக் ஃபோயர்பாகவும் செம்மை ஜெர்மன் தத்துவவியலின் முடிவும்,மா.எ. தே,நூ.10 பக்கம் 271- 272*

இங்கு எங்கெல்ஸ் புறநிலையில் உள்ள இயற்கை பற்றிய, அன்றைய மக்களிடம் இருந்த தவறான, அறிவீனமான பழைய கருத்துக்களிலிருந்து மதம் தோன்றியதைக் குறிப்பிடுகிறார். தோன்றியபோது நிலவிய கருத்தோட்டங்களுக்கு ஏற்ப காணப்பட்ட மதம், சமூக வளர்ச்சிக்கு ஏற்ப தம்மை மறுபரிசீலனை செய்து வளர்ந்துவருவதையும் சுட்டிக்காட்டுகிறார். அதே நேரத்தில் பொருளாயத வாழ்க்கையின் நிகழ்வுகளே மனிதர்களின் தலைகளுக்குள்ளே நிகழும் சிந்தனைப் போக்கை நிர்ணயிக்கின்றன என்பதையும், மனிதர்களுக்குத் தெரியாமலே தவிர்க்க இயலாதவாறு நிகழ்ந்து விடுவதையும் கோடிட்டுக் காட்டுகிறார். இங்கே மதத்தின் படிநிலை வளர்ச்சியைப் பற்றி எங்கெல்ஸ் குறிப்பிட்டுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# 2. மதத்தின் வர்க்கத் தன்மை

இருப்பவர், இல்லாதவர், உடைமையுள்ளவர், உடைமையற்றவர், சுரண்டுபவர், சுரண்டப்படுபவர் எனச் சமூகம் இரண்டுபடத் தொடங்கிய காலகட்டத்தில் மதவுணர்வுகள், நிறுவனமதமாக உருப்பெற்று வர்க்கத் தன்மை அடைந்தன. மொத்தச் சமூகமும் இயற்கையை அறிய முடியாத நிலையில் இருந்தபோது காணப்பட்ட மாயவித்தை என்பது, மதம் தோற்றம் பெறும்போது மாற்றம் பெற்றது. மாயவித்தை என்பதை இப்போது சிலர் மட்டும் நிகழ்த்தும்படியான புதுவடிவம் எடுத்தது. அந்தச் சிலரால் மட்டுமே நடத்தக் கூடியதாக மாறியது.

மதம் தோற்றம் பெற்றவுடன், உலகம் கடவுளால் தோற்றுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. அரசுபுரிபவர் மற்றும் அதிகாரங்கள் அனைத்தும் இறைமயமானதாக விளக்கம் கொடுக்கப்படுகிறது. அதிகாரங்களுக்குக் கட்டுப்பட்டு, பணிந்து செல்லும்படி போதிக்கப்படுகிறது. இவ்வுலகில் காணப்படும் துன்பதுயரங்களை பொறுமையுடன், சகித்துக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டு, துயரங்கள் என்பது அவரவர் செய்த வினைப்பயன் என்றும், அதனால் சமூகத்தில் தமக்குண்டான கடமைகளை, பலனை எதிர்பார்க்காமல், தியாக உணர்வோடு செய்யும்படி வலியுறுத்துகிறது.

இவ்வாறு ஒடுக்கும் வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலித்து, மதம் சுரண்டல் வர்க்கத்தின் சார்பான கருத்துக்களைக் கூறி, மதத்தின் வர்க்கத் தன்மையை வெளிப்படுத்துகிறது. சமூகத்தில் துயரத்தோடும், பாதுகாப்பற்றும் காணப்படும் ஒடுக்கப்படும் வர்க்கத்திற்கு, அவர்களின் இகலோக துன்பங்களுக்கு மாற்றாக, பரலோக நன்மைகள் கிட்டும் என்று வழிகாட்டப்படுகிறது. இதனால்தான் லெனின் எங்கும் அழுத்திப் பிடித்திருக்கும் ஆன்மீக (அறிவு சார்) ஒடுக்குமுறையின் பல வடிவங்களில் மதம் ஒன்று என்று கூறுகிறார்.

> "தொழிலாளர்கள் மீதான இந்தப் பொருளாதார ஒடுக்குமுறை எல்லா விதமான அரசியல் ஒடுக்குமுறையையும், சமூக இழிநிலையையும், வெகு ஜனங்களது ஆன்மீக, அறநெறி வாழ்வின் நயமற்ற இருண்ட நிலையையும் உருவாக்கியவண்ணமுள்ளது. தொழிலாளர்கள் தமது பொருளாதார விடுதலைக்காகப் போராடுவதற்காக அதிக அளவிலோ குறைந்த அளவிலோ அரசியல் சுதந்திரம் பெற்றுக் கொண்டுவிடலாம், ஆனால் **மூலதனத்தின் அதிகாரம் வீழ்த்தப்படாதவரை**, எந்த அளவிலான சுதந்திரத்தாலும் அவர்களுடைய வறுமைக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் ஒடுக்கு முறைக்கும் முடிவு கட்டிவிட முடியாது. மிகப் பெருந் திரள்களான மக்களை, ஏனையோருக்காகத் தாம் செய்யும் ஓயாத வேலையாலும் மற்றும் இல்லாமையாலும் தனிமைப்பாட்டாலும்



படிப்பகம்

www.padippakam.com

நசுக்கப்படும் இம்மக்களை, **எங்கும் அழுத்தி இருத்திவைக்கும் ஆன்மீக (அறிவுசார்) ஒடுக்குமுறையின் பல வடிவங்களில் மதமும் ஒன்றாகும்."**

*—சோஷலிசமும் மதமும்*

வாழ்நாள் முழுவதும் உழைத்து, இல்லாமையில் வாடுபவர்களுக்கு, மதம் மன ஆறுதலுக்கான வழியைத்தான் காட்டுகிறது, வாழ்விற்கான விடையை அதனால் அளித்திட முடியவில்லை. அதாவது உற்பத்தி வளர்ச்சியால் ஏற்பட்ட வர்க்கச்சமூகத்தில் வலிமையிழந்து காணப்படும் மக்களுக்கு மதம் பொறுமையையும், கட்டுப்பாட்டையும் பின்பற்றும்படி வழிகாட்டி, சொர்க்கத்தில் இதற்கான விடையும் விடுதலையும் கிட்டும் என்று போதிக்கிறது. சுரண்டலாளர்களிடம் தர்மவான்களாய் வாழும்படி கேட்டுக் கொள்வதின் மூலம், அவர்களது சுரண்டலுக்கு நியாயம் அளித்திடுகிறது.

இதனை லெனின் விளக்குகிறார்:-

*"வாழ்நாள் முழுதும் உழைத்து, இல்லாமையால் துன்புறுவோர் மண்ணுலகில் அடிபணிந்து பொறுமையாய் இருக்கவும், விண்ணுலகில் நற்பேறு கிட்டுமென்ற நம்பிக்கையால் மன ஆறுதல் பெறவும் மதம் அவர்களுக்குப் போதிக்கிறது. ஆனால் ஏனையோரது உழைப்பை உண்டு வாழ்வோர் மண்ணுலகில் தர்மவான்களாய் வாழ்வதற்கு மதம் அவர்களுக்குப் போதிக்கிறது, சுரண்டலாளர்களாய் அவர்கள் நடத்தும் வாழ்க்கை அனைத்துக்கும் நியாயம் கற்பித்துக் கொள்ள இவ்விதம் அது மிக எளியமையான ஒரு வழியை அளிப்பதோடு, விண்ணுலக இன்ப வாழ்வுக்கும் மிதமான விலையில் அவர்களுக்கு டிக்கெட்டுகள் விற்கிறது. மக்களது அபினியே மதம். ஒருவகை ஆன்மீகக் குடிபோதையே மதம் - மூலதனத்தின் அடிமைகள் தமது மானுட உருவை, ஓரளவேனும் மனிதனுக்கு உகந்த வாழ்வு பெற வேண்டுமென்ற தமது கோரிக்கையை இதில் மூழ்கடித்து மாய்த்துக் கொள்கின்றனர்."*

*—சோஷலிசமும் மதமும்*

சுரண்டலுக்கு ஆளான வர்க்கத்தின் இன்பம் சொர்க்கத்தில், சுரண்டும் வர்க்கத்தின் இன்பம் இவ்வுலகத்தில் என போதிக்கும் மதத்தை மார்க்ஸ் இவ்வுலக துன்பங்களுக்கான காரணத்தை அறியமுடியாமல் மறைக்கும், மழுங்கடிக்கும் போதை என்னும் பொருள்படும்படி, மதம் என்பது மக்களின் அபின் என்று வலியுறுத்தினார்.

*மார்க்ஸ் **"ஹெகலின் உரிமைத் தத்துவம் பற்றிய விமர்சனத்துக்கு பங்களிப்பு"** என்ற நூலினுடைய முன்னுரையில் கூறுகிறார்:-*



படிப்பகம்

www.padippakam.com

*"ஜெர்மனியில் மதத்தைப் பற்றிய விமர்சனம் சாராம்சத்தில் நிறைவடைந்துவிட்டது. மதத்தைப் பற்றிய விமர்சனம் அனைத்தும் பற்றிய விமர்சனத்தின் முன்நிபந்தனையாக உள்ளது.*

*... பரலோகத்தில் வினோதார்த்தமான யதார்த்தத்தில் அதிமானுடனைக் காணவிரும்பிய மனிதன் அங்கு தனது சொந்தப் பிரதிபிம்பத்தைத் தவிர வேறு எதையுமே காணவில்லை, தான் தேடுகின்ற இடத்தில் அந்த அதிமானுடன், தன்னையே ஒத்திருக்கும் தோற்றத்தைக் காண்பதன்றி வேறு எதையும் காணு மாறு அவனை இனியும் வற்புறுத்த இயலாது.* ***மனிதன் தனது உண்மையான யதாத்தத்தையே கண்டறிந்தாக வேண்டும்.***

*...*

*மத எதிர்ப்பு விமர்சனத்தின் அடிப்படையாக இருப்பது: மனிதனே மதத்தை உண்டாக்குகிறான், மதம் மனிதனை உண்டாக்குவதில்லை. இதையே வேறு வார்த்தைகளில் கூறினால், தன்னைத்தானே இன்னும் கண்டறிந்து கொள்ளாதவன் அல்லது தன்னைத் தானே மறுபடியும் இழந்துவிட்டவனின் தன்னறிவும் தன்னுணர்வும்தான் மதமாகும். ஆனால் மனிதன் இவ்வுலகிற்கு அப்பால் அமர்ந்திருக்கும் கற்பனை யானவன் அல்ல. மனிதன் என்பவன் மனிதனின் உலகம், நாடு, சமூகம் அனைத்தும் தான். இந்த அரசும், சமூகமும் உலகம் பற்றிய தலைகீழ் உணர்வாக மதத்தைப் படைத்துள்ளன. ஏனென்றால் அவையும் தலைகீழ் உலகமே. அந்த உலகத்தின் பொதுவான கொள்கையாக வும், அறிவுத் திரட்டலாகவும், தர்க்கத்தின் பிரபல வடிவமாகவும், சமூகத்தின் ஆன்மீக கௌரமாகவும் அது மதிக்கப்படுகிறது. ஒழுக்க விதிகளைக் கட்டுப் படுத்துகிறது. மன ஆறுதலுக்கான பொதுவான சாதனமாகவும் தோன்றுகிறது. அது மனித சாராம்சத்தின் விசித்திரமான புரிந்துணர்வு ஆகும். ஏனெனில் மனித சாராம்சம் என்பது இன்னும் எந்த உண்மையான யதார்த்தத்தையும் அடையவில்லை. எனவே, மதத்திற்கு எதிரான போராட்டம் என்பது, ஆன்மீக மணம் வீசும் மதத்தைக் கொண்டு விளங்கும் மறு உலகத்தை எதிர்த்து நடத்தும் தொடர்பு மிக்க போராட்டம் தான்.*

*மதத்தின் துயரம் என்பது ஒரே நேரத்தில் உண்மையான துயரத்தின் வெளிப்பாடாகவும், அதற்கு எதிரான கண்டனமாகவும் இருக்கிறது. மதம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் பெருமூச்சாகவும், இதயமற்ற உலகின் இதயமாகவும். ஆன்மாவற்ற நிலைகளின் ஆன்மாவாகவும் இருக்கிறது. இது மக்களின் அபினியாக உள்ளது.*



படிப்பகம்

www.padippakam.com

*மக்கள் உண்மையான மகிழ்ச்சி பெறுவதற்காக, மக்களது மாயையான மகிழ்ச்சியாக அமைந்துள்ள மதத்தை அழிப்பது அவசியமாக்குகிறது. தங்களது நிலைமைகள் குறித்து மக்கள் கொண்டுள்ள பொய்த் தோற்றத்தை விட்டொழிக்கும்படிக் கோருவது, அத்தகைய பொய்த் தோற்றங்கள்•தேவையாக இருக்கும் நிலைமைகளை விட்டொழிக்கும் படிக் கோருவதே ஆகும். மதம்பற்றிய விமர்சனம் என்பது, அதன் கருவிலேயே துயரப் பள்ளதாக்கு பற்றிய, அதன் ஒளிப்பிரமையாகவுள்ள மதத்தைப் பற்றிய விமர்சனமாக உள்ளது.*

*கட்டுத்தளையின் மீதுள்ள கற்பனை மலர்களை விமர்சனம் பிடுங்கி எறிந்துவிட்டது. எந்தவிதமான மன ஆறுதலும், மனோகற்பிதமும் இல்லாமல் மனிதன் அந்தத் தளையைத் தரித்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக அல்ல, மாறாக, அவன் அந்தத் தளையை உதறித் தள்ளி, ஜீவனுள்ள மலரைப் பறித்தெடுக்க வேண்டும் என்பதற்காகத்தான். மதத்தின் விமர்சனம் என்பது மனிதனின் பிரம்மையைக் குலைத்து, அவனைச் சிந்திக்கவும், செயல் படுத்தவும், அவனது யதார்த்தத்தை அவனே உருவாக்கவும் பிரம்மையைக் குலைந்த மனிதனைப்போல் அவன் பகுத்தறிவுக்கு மீண்டு வந்து, தன்னைத் தானே அவன் சுற்றிவரவும், அதன்மூலம் அவனது உண்மையான சூரியனைச் சுற்றிவரவும் செய் கிறது. மனிதன் தன்னைத்தானே சுற்றி வராதவரையிலும், மனிதனைச் சுற்றிவரும் மாயைச் சூரியன்தான் மதம் என்பது.*

*எனவே, வரலாற்றின் கடமை என்பது, உண்மைக்குப் புறம்பான உலகம் மறைந்தவுடனேயே, இந்த உலகத்தின் உண்மையை நிலைநாட்ட வேண்டியதுதான். வரலாற்றிற்குப் பணியாற்றுவதற்காகக் காத்திருக்கும் தத்துவத்தின் உடனடிக் கடமையும், மனிதன் தன்னைத் தானே அன்னிய மாகிக் காட்டும் மகானுபாவ உருவத்தை திரைகிழித்துக் காட்டிய வுடனேயே, அதன் புனிதமற்ற உருவங்களிலுள்ள தன்னைத்தானே அன்னியப்படுத்தும் தன்மையையும் திரைகிழித்துக் காட்டவேண்டியது தான். இவ்வாறாக. பரலோகத்தைப்பற்றிய விமர்சனம் பூவுலகைப் பற்றிய விமர்சனமாக மாறுகிறது, மதத்தைப் பற்றிய விமர்சனம் உரிமையைப் பற்றிய விமர்சனமாக மாறுகிறது. இறையியலைப் பற்றிய விமர்சனம், அரசியலைப் பற்றிய விமர்சனமாக மாறுகிறது.*

...

*விமர்சனம் என்ற ஆயுதத்தை, நிச்சயமாக ஆயுதத்தின் விமர்சனத்தை அகற்ற முடியாது. பொருளாயத பலத்தைப் பொருளாயத பலத்தினால்தான் தூக்கி எறிய முடியும். ஆனால் மக்கள் மனத்தைப் பற்றிப் பிடித்தவுட னேயே, கொள்கையும் ஒரு பொருளாயத சக்தியாக மாறி விடுகிறது.*



படிப்பகம்

*கொள்கை மனித உணர்ச்சியைத் தொட்டுச் சாதித்தவுடனேயே அது மக்களைப் பற்றிப் பிடித்துவிடுகிறது, அது பகுத்தறிவு பூர்வமாக மாறிய வுடனேயே மனித உணர்ச்சியைத் தொட்டுச் சாதித்து விடுகிறது. பகுத்தறிவு பூர்வமாக ஆவதெனில், அது விஷயத்தின் ஆணி வேரையே பற்றிப் பிடிக்கவேண்டும். ஆனால் மனிதனுக்கோ மனிதன்தான் ஆணிவேர். ஜெர்மன் கொள்கையின் பகுத்தறிவு வாதத்துக்கும், அதன் காரணமாக அதன் காரியார்த்தமான சக்திக்கும் உரிய கண்கண்ட சாட்சியம் எதுவெனில், அது உறுதியாக, உறுதிப்பாடான மத ஒழிப்பி லிருந்து தொடங்குகிறது. மதத்தைப் பற்றிய விமர்சனம் மனிதனுக்கு மனிதன் தான் உன்னதமாக சாராம்சம் என்பதைப் போதிப்தோடு, எனவே கீழ்த்தரமாக, அடிமையாக, ஒதுக்கப்பட்டவனாக, வெறுக்கத்தக்க சாராம்ச மாக மனிதனை ஆக்கிவைத்துள்ள எல்லா உறவுகளையும், நாய்களின் மீது வரிபோடவேண்டும் என்று திட்டமிடப்பட்ட பொழுது 'அட, அப்பாவி நாய்களே' அவர்கள் உங்களை மனிதர்களைப்போல் நடத்த விரும்புகிறார் களே- என்று கூக்குரல் எழுப்பிய ஒரு பிரஞ்சுக்காரனைக் காட்டிலும் விளக்கமாகக் கூறிவிட முடியாத, அந்த உறவுகள் அனைத்தையும் தூக்கி எறியவேண்டிய திட்டவட்டமான அத்தியாவசியத்தையும் போதிப்பதோடு அது முடிவடைகிறது.*

...

*இதற்கிடையில், அடிப்படை பூர்வமான ஜெர்மன் புரட்சியின் பாதையில் ஒரு பெரும் தடை குறுகிட்டு நிற்பதாகத் தோன்றுகிறது.*

*ஏனெனில், புரட்சிகளுக்கு ஒரு செயலற்ற தன்மையும், ஒரு பொருளாயத அடிப்படையும் தேவை. எந்த அளவுக்கு மக்களின் தேவைகளை நிறைவு செய்வதாக இருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் அந்த மக்களிடையே கோட்பாடும் நிறைவு செய்விக்கப்படுகிறது. ஆனால், ஜெர்மானியச் சிந்தனையின் கோரிக்கைகளுக்கும், ஜெர்மானிய யதார்த்தம் அளிக்கும் விடைகளுக்குமிடையே உள்ள பூதாகரமான வேற்றுமையானது. குடிமை சமூதாயத்துக்கும் அரசுக்கும், குடிமை சமூதாயத்துக்கும் தனக்குமே இடையேயுள்ள அதேபோன்ற வேற்றுமையைக் கண்டுகொள்ளுமா? கோட் பாடார்த்தமான தேவைகளே உடனடியான காரியார்த்த தேவைகளாகி விடுமா? யதார்த்த சித்திபெறுவதற்குச் சிந்தனை மட்டும் பாடுபட்டால் போதாது, யதார்த்தமும் சிந்தனையை நோக்கிப் பாடுபட வேண்டும்.*

*ஆனால் நவீன நாடுகளைப்போல் அரசியல் விடுதலைக்கான இடை நிலைக் கட்டத்துக்கு அதே சமயத்தில் ஜெர்மனி உயர்ந்து வந்து விடவில்லை. கோட்பாடு விஷயத்தில் அது மேம்பட்டு எட்டிவிட்ட கட்டங்களுக்கு அது நடைமுறையில் இன்னும் எட்டி வந்துவிடவில்லை ..*

www.padippakam.com

....

*... ஒரு ஜெர்மன் விடுதலைக்கான உறுதிப்பாடான சாத்தியப்பாடு எங்கேயுள்ளது?*

*விடை:-*

*...இறுதியாக, சமுதாயத்தின் ஏனைய எல்லாப் பகுதிகளிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளாமல் தன்னைத்தானே விடுவித்துக் கொள்ள முடியாத ஒரு பகுதி, அதன் மூலம் ஏனைய எல்லாச் சமுதாயப் பகுதிகளையும் விடுவிக்காத ஒரு பகுதி ஒரே வார்த்தையில் சொன்னால் மனிதனின் பூரண இழப்பாக உள்ள ஒரு பகுதி அது, எனவே அந்தப் பகுதி மனிதனை மீண்டும் பூரணமாக வென்று மீள்வதன் மூலம்தான் தன்னைத்தானே வெற்றிகொள்ள முடியும். சமுதாயம் இத்தகைய ஒரு குறிப்பிட்ட பகுதியாக சீர்குலைந்து உருமாறுவதுதான் பாட்டாளி வர்க்கம்.*

*வளர்ந்துவரும் எந்திரத் தொழில் இயக்கத்தின் விளைவாகப் பாட்டாளி ஜெர்மனியில் உருவாகத் தொடங்கியுள்ளான். ஏனெனில், இயற்கையாகத் தோன்றும் ஏழையராக இல்லாமல், செயற்கையாகப் பஞ்சையராக்கப் பட்டவர்கள் .. .. .. ..*

*தத்துவம் தனது பொருளாயத ஆயுதத்தைப் பாட்டாளியிடம் காண்பது போலவே, பாட்டாளி வர்க்கம் தனது அறிவார்ந்த ஆயுதத்தை தத்துவத்திடம் காண்கிறது.*

....

*நாம் இதன் முடிவைத் தொகுத்துச் சொல்வோம்:*

*ஜெர்மனியின் நடைமுறை சாத்தியமான ஒரே விடுதலையானது, மனிதனுக்கு மனிதன்தான் மேன்மையான சாராம்சம் என்று பிரகடனப்படுத்தும் அந்தக் கொள்கையின் கருத்தோட்டத்திலிருந்து கிட்டும் விடுதலைதான்.*

....

*...ஜெர்மானிய விடுதலை என்பது மனிதனின் விடுதலைதான். இந்த விடுதலையின் மூளை தத்துவம், இதன் இதயம் பாட்டாளி வர்க்கம்."*

வழக்கம்போல் மார்க்சிய அடிப்படைகளை திரித்து விளக்கம் கொடுக்கும் மார்க்சிய அறிஞர்கள்!! மார்க்ஸ் எழுதிய இந்த முன்னுரையில் காணும் கருத்தையும் திரித்தும், புரட்டியும் விளக்கம் கொடுத்து வருகின்றனர். அதனால் இதனைச் சற்று விரிவாக ஆராய்வோம்.



படிப்பகம்

www.padippakam.com

ஜெர்மனியில் மதத்தைப் பற்றிய விமர்சனம் சாராம்சத்தில் நிறை வடைந்து விட்டது என்றும், மதத்தைப் பற்றிய விமர்சனம், அனைத்தும் பற்றிய விமர்சனத்தின் முன்நிபந்தனையாக உள்ளது என்றும் மார்க்ஸ் முதலிலேயே கூறியுள்ளார்.

பரலோகத்தில் தம்மை விடுவிக்கும் அதிமானுடனைக் காண விரும்பிய மனிதன் அங்குத் தமது சொந்தப் பிரதிபிம்பத்தையே கண்டான். அந்த அதிமானுடத்தில், தன்னையே ஒத்திருக்கும் தோற்றத்தைக் காண்பதன்றி வேறு எதையும் காணுமாறு அவனை இனியும் வற்புறுத்த இயலாது, அதனால் மனிதன் தனது உண்மையான யதார்த்தத்தைக் கண்டறிந்தாக வேண்டும்.

இதனை அடுத்து மத எதிர்ப்பின் அடிப்படையை விவரிக்கிறார். இதுவே இந்த முன்னுரையின் சாரம்சம் என்று சொல்லலாம்.

மதத்தை மனிதன்தான் படைத்தான், மதம் மனிதனை படைக்கவில்லை. இந்த அரசும், சமூகமும் உலகம் பற்றிய தலைகீழ் உணர்வாக மதத்தைப் படைத்துள்ளது. ஏனென்றால் அவையும் தலைகீழ் உலகமே. மதத்திற்கு எதிரான போராட்டம் என்பது, மதம் ஆன்மீக மணத்தோடு குறிப்பிடும் மறுஉலகத்தை எதிர்த்து நடத்தும் தொடர்பு மிக்க போராட்டம்தான்.

தம்மை விடுவிக்கும் சக்தி என்று கருதிவந்த பரலோக அதிமானுடன் என்பவன் இகலோக மனிதனின் பிரதிபிம்பம்தான் என்பதை அறிந்து, அதனிடம் நம்பியிருத்தல் பயனற்றது என்பதைத் தெரிந்து, மதத்திற்கு எதிரான போராட்டம் என்பதை, ஆன்மீக மணம் கமழும் மறுஉலகத்தை மறுதலிக்கும் போராட்டமாக மாற்றவேண்டும் என்கிறார் மார்க்ஸ்.

இதனை மேலும் விரிவாக்கி, மதத்தின் துயரம் என்பது ஒரே நேரத்தில் உண்மையான துயரத்தின் வெளிப்பாடாகவும், அதற்கு எதிரான கண்டனமாக வும் இருக்கிறது. ஒடுக்கப்பட்டவர்களின் பெருமூச்சாக விளங்கும் மதம், இதயமற்ற உலகின் இதயமாகவும், ஆன்மாவற்ற நிலைகளின் ஆன்மாவாகவும் இருக்கிறது என்கிறார் மார்க்ஸ். இது மக்களின் அபினியாக உள்ளது

இதனை சில மார்க்சிய அறிஞர்கள்!! இதயம் இழந்தவர்களுக்கு இதயமாகவும், ஆன்மாவை இழந்தவர்களுக்கு ஆன்மாவாகவும் மதம் உதவுகிறது என்று மாற்றி விளக்கம் கொடுத்துவிடுகின்றனர். இங்கு மார்க்ஸ் கூறிய **"இது மக்களின் அபினியாக உள்ளது"** என்பதற்கும், பொருள் மாற்றி விளக்குகின்றனர்.

'ஒடுக்கப்பட்ட வர்க்க சமூகத்தில், புகலற்ற மனிதன் மதத்திடம் கற்பிதமான உதவியை நாடுகிறான். தாங்க முடியாத வலியால் துடிக்கும் ஒருவனுக்கு அபினி எவ்வாறு தற்காலிக நிவாரணம் அளிக்கிறதோ அதே போல **மதமும் மனிதனுக்குத் தற்காலிகமான நிவாரணம் அளிக்**



படிப்பகம்

www.padippakam.com

**கிறது.** அந்தத் துன்பத்திற்கு உண்மையான, நிரந்தரமான நிவாரணத்திற்குத் தற்காலிக நிவாரணம் மாற்றாக முடியாது. அதேபோல், மதம் ஒடுக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக நிவாரணம் அளிக்கின்றது'

மார்க்சின் கருத்திற்கு மாறாக கூறப்படும் விளக்கம் இந்த வழியிலேயே செல்கிறது.

பல காலத்திற்கு முன்பே லெனின் இதற்கான விளக்கத்தை தெளிவோடு எழுதியிருக்கிறார். **"மக்களது அபினியே மதம். ஒருவகை ஆன்மீகக் குடிபோதையே மதம் - மூலதனத்தின் அடிமைகள் தமது மானுட உருவை, ஓரளவேனும் மனிதனுக்கு உகந்த வாழ்வு பெற வேண்டுமென்ற தமது கோரிக்கையை இதில் மூழ்கடித்து மாய்த்துக் கொள்கின்றனர்"** (***சோஷலிசமும் மதமும்***) இங்கே லெனின், மார்க்சினுடைய கருத்தான மக்களின் அபினியே மதம் என்பதற்கு மிகத் தெளிவான விளக்கம் அளித்துள்ளார்.

மேலும், தொடர்ந்து கூறுகிறார்:-

> *"வர்க்க உணர்வு படைத்த நவீன காலத் தொழிலாளி, பெருவீத ஆலைத் தொழிலால் வளர்த்து ஆளாக்கப்பட்டு நகர வாழ்வினால் ஒளியூட்டப் பெற்ற இந்தத் தொழிலாளி, மதத்தின் தப்பெண்ணங்களை வெறுத்து ஒதுக்கிவிட்டு, விண்ணுலக வாழ்வைக் குருமார்களிடத்தும் முதலாளித் துவப் பித்தர்களிடத்தும் விட்டுவிட்டு, தனக்கு இங்கே மண்ணுலகில் நல்வாழ்வைப் போராடிப் பெற முயலுகின்றான். இன்றையப் பாட்டாளி வர்க்கம் சோஷலிசத்தின் பக்கம் அணி திரளுகின்றது. சோஷலிசமானது மதத்தின் இருளுக்கு எதிரான போரில் விஞ்ஞானத்தைப் படைசேர்த்துக் கொள்கிறது. இப்பொழுதே இம்மையில், மண்ணுலகில் நல்வாழ்வுக்கான போராட்டத்தில் தொழிலாளர்களை ஒன்றுபடச் செய்வதன்மூலம், அது அவர்களை மரணத்துக்குப் பிற்பாடான மறுமையில் நம்பிக்கை வைப்பதிலிருந்து விடுவிக்கிறது"*
>
> *—சோஷலிசமும் மதமும்*

மார்க்சின் இந்த முன்னுரையின் விளக்கமாகத்தான், லெனின் சுருக்கமாகவும் தெளிவுபடவும் கூறியிருக்கிறார்.

மார்க்சின் முன்னுரைக்குச் செல்வோம்.

உண்மையான மகிழ்ச்சியை அடைவதற்கு, மாயையான மகிழ்ச்சியாக அமைந்துள்ள மதத்தை மறுதலிப்பது மக்களுக்கு அவசியமாகிறது. தங்களது நிலைமைகள் குறித்து மக்கள் கொண்டுள்ள பொய்த்தோற்றத்தை விட்டொழிக்கும்படிக் கோருவது, அத்தகைய பொய்த்தோற்றங்கள் தேவையாக இருக்கும் நிலைமைகளை (புறநிலைமைகளை) விட்டொழிக்கும்படிக்



படிப்பகம்

கோருவதே ஆகும். மதம் பற்றிய விமர்சனம் என்பது, அதன் கருவிலேயே துயரப் பள்ளதாக்குப் பற்றிய, அதன் ஒளிப்பிரமையாகவுள்ள மதத்தைப் பற்றிய விமர் சனமாக உள்ளது.

மதபிரமைகளை விலக்குவதற்காக எழுதப்பட்டதே இந்த முன்னுரை. மதபிரமையிலிருந்து விடுபட முடியாதவர்கள் இதனைப் புரிந்துகொள்ள முடியாமல் திணருகின்றனர்.

மதத்தின் மகிழ்ச்சி என்பது மாயையானதே என்பதை அறிந்து, கம்யூனிஸ்ட்டுகள் அதிலிருந்து விடுபட வேண்டும், மற்றவர்கள் விடுபடுவதற்குத் துணைபுரிய வேண்டும், இந்தப் புரிதலில் பின்தங்கியவர்கள் விடுபடுவதற்கான (புற) நிலைமைகளை விட்டொழிக்கும்படிக் கோருவது பற்றியும் தெளிவாக மார்க்ஸ் கூறுயிருக்கிறார். இதனை மறைத்துவிட்டுத் தாங்க முடியாத வலியால் துடிக்கும் ஒருவனுக்கு, அபினி எவ்வாறு தற்காலிக நிவாரணம் அளிக்கிறதோ, அதே போல **மதமும் தற்காலிகமாக கேட்கும் உதயை அளிக்கிறது என்று கருத்துரைப்பது மார்க்ஸ் கணோட்டத்திற்கு முரணானதாகும்**. மாயையான மகிழ்விலிருந்து விடுபட்டு உண்மையான மகிழ்வை அடைவதற்கான போராட்டத்தை நடத்த வேண்டியதின் அவசியம்பற்றியே இந்த முன்னுரையில் மார்க்ஸ் வலியுறுத்துகிறார்.

மனிதன் தன்னைத்தானே சுற்றி வராதவரையிலும், மனிதனைச் சுற்றிவரும் மாயைச்சூரியன்தான் மதம் என்கிறார் மார்க்ஸ்.

இந்த மாயைச் சூரியனான மதத்தைவிட்டு வெளிவந்து, மனிதன் தனக்கான விடுதலையை தனது உலகத்தில் படைத்துக் கொள்ளவேண்டும். இதற்கு மனிதன் தன்னைத்தானே சுற்றிவர வேண்டும். மனிதனைச் சுற்றிவரும் மாயைச்சூரியனான மதத்திடமிருந்து விலக வேண்டும்.

தற்போதைய வரலாற்றின் கடமை என்பது உண்மைக்கு மாறான உலகம் (பரலோகம்) மறைந்தவுன், உண்மையான உலகை இங்கு நிறுவுவதற்குப் பாடுபட வேண்டியபதுதான்.

மனிதனுக்கு அந்நியமான பரலோக அதிமானுடனின் திரை கிழிபடும் போது, அதன் புனிதமற்ற உருவங்களிலுள்ள தன்னைத்தானே அந்நியப் படுத்தும் தன்மையான திரைகிழிந்து போகிறது. இதன்படி பரலோகம் பற்றிய விமர்சனம் இந்த பூவுலகம் பற்றிய விமர்சனமாக மாற்றம் பெறுகிறது. இதனைத் தொடர்ந்து மதத்தைப் பற்றிய விமர்சனம், உரிமையைப் பற்றிய விமர்சனமாக மாறுகிறது. இறையியலைப் பற்றிய விமர்சனம், அரசியலைப் பற்றிய விமர்சனமாக மாறுகிறது என்று மதத்தைப் பற்றிய விமர்சனத்தை அனைத்தும் பற்றிய விமர்சனமாக மார்க்ஸ் கொண்டு செல்கிறார்.

பொருளாயத பலத்தை, பொருளாயத பலத்தினால்தான் தூக்கி எறிய முடியும். ஆனால் கொள்கை என்பது மக்கள் மனத்தைப் பற்றிப் பிடித்த

www.padippakam.com

வுடனேயே, அது ஒரு பொருளாயத சக்தியாக மாறிவிடுகிறது என்கிறார் மார்க்ஸ். மார்க்சின் இந்தக் கருத்தும் அதிகமாகப் புரட்டப்படுகிறது.

இங்கு மார்க்ஸ் கொள்கை என்று சொல்வது, "பொதுவாக கொள்கை" என்றுதான் புரிந்து கொள்ள வேண்டும். எந்தவிதப் பொதுவான கொள்கை என்றாலும் அது அனைத்து மக்களைப் பற்றிக்கொண்டு பொருளாயத சக்தியாக மாறிவிடுகிறது என்று கூறவில்லை. அதாவது எந்த வர்க்கத் தன்மை என்றெல்லாம் குறிப்பிடவில்லை.

எந்த வர்க்கத்தின் கருத்தாயினும் அது பொது மக்கள் அனைவரையும் பற்றிக் கொண்டால், பொருளாத சக்தியாக மாறிவிடுகிறது என்று பொருள் கொள்வோமாயின் நாம் மார்க்சியத்தைக் கொச்சைப் படுத்துபவராவோம். ஏன் என்றால், சமூகம் வர்க்கமாகப் பிளவுற்று இருக்கும்போது கருத்து என்பது அனைவருக்குமானதாக இருக்க முடியாது என்பதை மார்க்சியம் விளக்கி யிருக்கிறது. அதன்படி ஒரு வர்க்கக் கருத்து அவ்வர்க்கத்தினரிடையே மற்றும் அவ்வர்க்கச் சார்புடையவரிடத்திலே பற்றும்போது அது பொருளாயத சக்தியாகிறது என்றுதான் புரிந்து கொள்ளவேண்டும். அவ்வாறு புரிந்து கொள்ளவில்லை என்றால், ஒரு வர்க்கத்தின் சார்பான கருத்து, பரப்புரையின் மூலம் அனைத்து மக்களையும் பற்றச் செய்திட முடியும் என்ற தப்பான முடிவிற்கு வந்துவிடுவோம். மக்களைப் பற்றிக் கொண்டால் என்று இங்கு மார்க்ஸ் குறிப்பிடுவது கருத்தை அல்ல (Theory) கொள்கையைத்தான் என்பதைப்புரிந்து கொள்ள வேண்டும். கொள்கை என்பது வர்க்கச் சார்பானது. இதனைக் "கருத்து" என்று பொதுமைப்படுத்தி விளக்குவது மார்க்சியத்திற்கு எதிரான கண்ணோட்டத்திற்கே இட்டுச் செல்லும்.

லூக்காஸ், கிராம்சி ஆகியோர், ஜெர்மனியில் நாஜிக்களும், இத்தாலியில் பாசிஸ்ட்டுகளும் உருவானதின் சமூகப் பொருளாதாரப் பின்புலத்தைப் புரிந்து கொள்ளாமல், வெறும் கருத்துப் பிரச்சாரத்தின் மூலம் சர்வாதிகார அரசியலை நிலைநாட்டி விட்டதாக கருதிக்கொண்ட பண்பாட்டு மார்க்சியவாதிகள், எந்த வர்க்கத்தின் கருத்தாயினும், அது மக்களைப் பற்றிக் கொண்டால் பொருளாயத சக்தியாகிவிடும் என்று விளக்கம் கொடுத்துவருகின்றனர்.

மார்க்சின் முன்னுரையின் இறுதிப்பகுதியில் கூறியதை இவர்கள் மீறிவிடுகின்றனர். **"தத்துவம் தனது பொருளாயத ஆயுதத்தை பாட்டாளியிடம் காண்பது போலவே, பாட்டாளி வர்க்கம் தனது அறிவார்ந்த ஆயுதத்தை தத்துவத்திடம் காண்கிறது."** இங்கு பாட்டாளி வர்க்கக் கருத்தின் தோற்றத்தையும் அது கொள்கை வடிவம் பெறுவதையும், அதனைப் பாட்டாளி வர்க்கம் பற்றிக் கொண்டு செயல்பட வேண்டியதையும் வலியுறுத்துகிறது. இதே போலத்தான் அனைத்துக் கருத்துப் பிரிவுகளும், அந்தந்த வர்க்கப் பிரிவுமக்களின் மனத்தைப் பற்றுகிறது என்று விளங்கிக் கொள்ளவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

பொதுவாக இந்த முன்னுரையை ஒருங்கிணைந்து விளங்கிக்கொள்ளா மல், தமக்கு ஏற்றபடி பிரித்து உடைத்து விளக்கம் அளிக்கின்றனர். ஆனால் மார்க்ஸ் செறிவோடு தமது கண்ணோட்டத்தை இம்முன்னுரையில் வெளிப் படுத்தியிருக்கிறார்.

பொருள்மாற்றி விளக்கம் அளிப்பவர்கள், கொள்கை என்றவுடன், தாம் வகுத்தளித்த கருத்து அல்லது தாம் ஏற்றுக்கொண்ட கருத்து, பாட்டாளிகளின் மனங்களைப் பற்றிக் கொண்டால் அது பொருளாயத சக்தியாக மாறிவிடும் என்று விளக்குகின்றனர். முன்னுரையில் மார்க்ஸ், **“யதார்த்த சித்தி பெறு வதற்குச் சிந்தனை மட்டும் பாடுபட்டால் போதாது, யதார்த்தமும் சிந்தனையை நோக்கிப் பாடுபட வேண்டும்”** என்று தெளிவுபடக் கூறியுள்ளார். அதாவது சிந்தனை யதார்த்தத்திற்கு நெருங்கி இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், பாட்டாளி வர்க்கத்தின் யதார்த்த (புறநிலை) சூழலால் உருவாகும் சிந்தனை பாட்டாளி வர்க்கச் சிந்தனையாக இருக்கும். முதலாளித்துவ வாழ்நிலையில் உள்ள (புறநிலை) சூழ்நிலை முதலாளித்துவ சிந்தனையையே பிரதிபலிக்கும்.

சமூகத்தில் எவ்வளவோ வர்க்கங்கள் இருக்க சமூக விடுதலைக்குப் பாட்டாளி வர்க்கத்தை மார்க்ஸ் தேர்ந்தெடுத்தது ஏன்? சமூக விடுதலை என்பது அனைவருக்கும் ஒரே நேரத்தில் என்று சொல்லாமல் பாட்டாளி வர்க்கத்திற்கு என்று சொன்னதின் நோக்கம் என்ன? என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருப்பவர்களே இம்முன்னுரைக்குத் தம் மனம்போனபடி விளக்கம் கொடுத்து விடுகின்றனர்.

இம்முன்னுரையின் இறுதியில் உள்ளவற்றை இணைத்துப் பார்ப்போம்:-

*“.. ஒரு ஜெர்மன் விடுதலைக்கான உறுதிப்பாடான சாத்தியப்பாடு எங்கேயுள்ளது?*

*விடை:- ..*

*...இறுதியாக, சமுதாயத்தின் ஏனைய எல்லாப் பகுதிகளிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளாமல் தன்னைத்தானே விடுவித்துக்கொள்ள முடியாத ஒரு பகுதி, அதன்மூலம் ஏனைய எல்லாச் சமுதாயப் பகுதிகளையும் விடுவிக்காத ஒரு பகுதி ஒரே வார்த்தையில் சொன்னால் மனிதனின் பூரண இழப்பாக உள்ள ஒரு பகுதி அது. எனவே அந்தப்பகுதி மனிதனை மீண்டும் பூரணமாக வென்று மீள்வதன் மூலம்தான் தன்னைத்தானே வெற்றிகொள்ள முடியும். சமுதாயம் இத்தகைய ஒரு குறிப்பிட்ட பகுதியாக சீர்குலைந்து உருமாறுவதுதான் பாட்டாளி வர்க்கம்.*

*..வளர்ந்துவரும் எந்திரத் தொழில் இயக்கத்தின் விளைவாகப் பாட்டாளி ஜெர்மனியில் உருவாகத் தொடங்கியுள்ளான். ஏனெனில், இயற்கையாகத்*



படிப்பகம்

www.padippakam.com

*தோன்றும் ஏழையராக இல்லாமல், செயற்கையாகப் பஞ்சையராக்கப்பட்ட வர்கள் .. .. .. ..*

*தத்துவம் தனது பொருளாயத ஆயுதத்தைப் பாட்டாளியிடம் காண்பது போலவே, பாட்டாளி வர்க்கம் தனது அறிவார்ந்த ஆயுதத்தை தத்துவத்திடம் காண்கிறது.*

...

*நாம் இதன் முடிவைத் தொகுத்துச் சொல்வோம்:*

*ஜெர்மனியின் நடைமுறை சாத்தியமான ஒரே விடுதலையானது, மனிதனுக்கு மனிதன்தான் மேன்மையான சாராம்சம் என்று பிரகடனப்படுத்தும் அந்தக் கொள்கையின் கருத்தோட்டத்திலிருந்து கிட்டும் விடுதலைதான்.*

...

ஜெர்மானிய விடுதலை என்பது மனிதனின் விடுதலைதான். இந்த விடுதலையின் மூளை தத்துவம். இதன் இதயம் பாட்டாளி வர்க்கம்."

இதில் மார்க்ஸ் விடுதலைக்கான சாத்தியப்பாடு பாட்டாளிவர்க்கத்திடம் இருப்பதையும், பாட்டாளி வர்க்கம் தமது அறிவார்ந்த ஆயுதத்தைத் தத்துவத்திட மும், தத்துவம் தனது பொருளாயத ஆயுதத்தைப் பாட்டாளியிடத்திலும் காண்பதை மார்க்ஸ் எடுத்துக்காட்டுகிறார். அதாவது பாட்டாளி வர்க்கத்தின் தத்துவமான பொருள்முதல்வாதம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் சார்புடைய தாகும். இங்கே பாட்டாளி வர்க்கத்தின் தத்துவச் சார்பையே மார்க்ஸ் குறிப்பிட் டுள்ளார். இதனை புரிந்து கொள்ளாததால்தான், பலபேர் தமது கருத்திற்கு ஏற்ப மார்க்சின் இந்த முன்னுரைக்கு விளக்கம் கொடுக்க முனைகின்றனர்.

"கம்யூனிசம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கான சூழ்நிலைகள் பற்றிய போதனை" (*கம்யூனிசத்தின் கோட்பாடுகள்*) என்று எங்கெல்ஸ் கூறுகிறார். இதனை மேலும் விரிவாக ***கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில்*** :-

"*கம்யூனிஸ்ட்டுகள் ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சிகளுக்கு எதிரான ஒரு தனிக் கட்சியாக இருக்கவிலலை. அவர்கள் பாட்டாளி வர்க்கம் அனைத்துக்குமுள்ள நலன்களை அன்னியில் தனிப்பட்ட நலன்கள் எவையும் இல்லாதவர்கள். பாட்டாளி வாக்க இயக்கத்தை வடிவமைக்க அவர்கள் தமக்கெனக் குறுங்குழுக் கோட்பாடுகள் எவற்றையும் வகுத்துக் கொள்ளவில்லை*"

-என்று மார்க்ஸ் எங்கெல்ஸ் சேர்ந்து எழுதியிருக்கிறார்கள். இதில் குறிப்பிட்டுள்ளபடி கம்யூனிஸ்டுகள் தமது கோட்பாட்டை உருவாக்குவதற்கு



படிப்பகம்

வேண்டிய தத்துவத்தைப் பாட்டாளி வர்க்கத்திடமிருந்தே பெறுகின்றனர். இதனைத்தான் மேலே மார்க்சின் முன்னுரை கூறுகிறது:- "தத்துவம் தனது பொருளாயத ஆயுதத்தைப் பாட்டாளியிடம் காண்பது போலவே, பாட்டாளி வர்க்கம் தனது அறிவார்ந்த ஆயுதத்தைத் தத்துவத்திடம் காண்கிறது".

இவ்வாறு மார்க்சின் படைப்புகளை இணைத்துக் கருத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

மார்க்சியத்தின் தத்துவம் என்பது பொருள்முதல்வாதம்தான் என்பதை லெனின் விளக்குவதை பார்ப்போம்.

> "*பொருள்முதல்வாதம்தான் மார்க்சியத்தின் தத்துவஞானமாகும்.. பொருள்முதல்வாதம் ஒன்றுதான் முரணற்ற தத்துவஞானமாகும். இயற்கை விஞ்ஞானங்களுடைய எல்லாப் போதனைகளுக்கும் ஏற்புடையதாகும். மூட நம்பிக்கைகளுக்கும் பகட்டுக்கும் பசப்புக்கும் இன்ன பிறவற்றுக்கும் தீராப்பகையாகும் .. ..*
>
> ... ஆகவே பொருள்முதல்வாதத்தை "மறுப்பதற்கும்" பலவீனப்படுத்துவதற்கும், பழிப்பதற்கும், ஜனநாயகத்தின் எதிரிகள் முழுமூச்சுடன் முயன்று பார்த்தார்கள். தத்துவஞானக் கருத்துமுதல்வாதத்தின் பலவகை வடிவங்களை இவர்கள் ஆதரித்தனர். இவ்வகைக் கருத்துமுதல்வாதம் ஏதாவது ஒரு வழியில் எப்பொழுதும் மதத்தைப் பாதுகாக்கவோ ஆதரிக்கவோதான் செய்கிறது.
>
> *மார்க்சும் எங்கெல்சும் தத்துவஞானப் பொருள்முதல்வாதத்தை மிகுந்த மனத்திண்மையோடு ஆதரித்துப் பாதுகாத்தனர். இந்த அடிப்படையிலிருந்து விலகிச் செல்லும் ஒவ்வொரு திரிபும் மிகவும் தவறாயிருப்பதை அவர்கள் அடிக்கடி விளக்கி வந்தார்கள்.*"
>
> *--மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும்*
> *மூன்று உள்ளடக்கக் கூறுகளும்*

கம்யூனிஸ்டுகள் பொருள்முதல்வாதத்திடமிருந்து விலகிச் செல்லும் ஒவ்வொரு திரிபும் தவறாய்ப் போவதை மார்க்சும் எங்கெல்சும் அடிக்கடி விளக்கி வந்ததை லெனின் இங்கு குறிப்பிடுகிறார். மேலும் "**ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷிவிக்)யின் நகல் வேலைத்திட்டத்திலிருந்து மதத்தைப் பற்றிக் குறிப்பிடும் வேலைத் திட்டப்பகுதியில்**" தெரிவிக்கிறார். சுரண்டும் வர்க்கங்களுக்கும் நிறுவன மதப் பிரசாரங்களுக்கும் இடையில் உள்ள இணைப்பை முழுமையாக ஒழிப்பதே கம்யூனிஸ்ட் கட்சியின் குறிக்கோள். இதன் மூலமே மதக் கேடுகளிலிருந்து உழைக்கும் மக்களை உண்மையிலேயே விடுவிக்க முடியும். இதற்கான விஞ்ஞானக் கல்விக்கும், மத எதிப்புப் பிரச்சாரத்திற்கும் நிறுவன முறையில் சிறந்த

www.padippakam.com

ஏற்பாடுகளைக் கட்டாயம் கம்யூனிஸ்ட் கட்சி செய்து தர வேண்டும் என்கிறார் லெனின். **மதத்தை அரசிலிருந்தும், கல்வி நிலையங்களை மதத்திலிருந்தும் பிரித்துவிடுவதற்கு பூர்ஷ்வா ஜனநாயகவாதிகள் கூட வாக்குறுதிகள் கொடுத்தார்கள்.** ஆனால் உலகில் எங்கும் இவற்றை முழுமையாக நிறைவேற்றவில்லை. **இதற்குக் காரணம் என்று லெனின் கூறுகிறார் :-**

> "மூலதனத்திற்கும் மதப் பிரச்சாரத்திற்கும் இடையில் உண்மையில் பல்வேறு வகைகளில் இணைப்புகள் இருப்பதுதான்."

இதன் மூலம் மதத்திற்கு உரித்தான வர்க்கச் சார்பை புரிந்துகொள்ள வேண்டும். இதனை லெனின் வேறோர் இடத்தில் மேலும் விவரிக்கிறார். எதிர்ப் புரட்சி பூர்ஷ்வா வர்க்கத்தின் பிரிதிநிதி மதத்தைப் பலப்படுத்தவே விரும்புகிறார். மக்களுக்கிடையில் மதத்தின் செல்வாக்குப் பெருகவேண்டும், அதற்கு இன்றைய மதம் போதாக் குறையானதாகவும், காலம் கடந்துவிட்ட தாகவும் இருக்கிறது என்று கருதுகிறார். மதம் சமூக வளர்ச்சிக்கு ஏற்ப மாற்றிக் கொள்ள வேண்டும் என்று பூர்ஷ்வா வார்க்கத்தின் பிரதிநிதி விரும்புகிறார்:-

> *"குறிக்கோள்களைச் சாதிப்பதற்கு லாயக்கற்ற முறையில் கந்தல் கந்தலாகி விட்டன. எனவே சற்று அதிகமாக அபிவிருத்தி செய்யப்பட்ட மெருகிடப்பட்ட சாதனங்கள் தேவைப்படுகின்றன. மக்களை வெறிமயக்க முறச்செய்வதற்குப் போலீஸ், மதம் இனிமேல் சரிப்பட்டு வராது. அதிகமான அளவில் பண்புள்ள, சற்று நவீனமான தேர்ச்சித் திறம் அதிகமான மதத்தை எங்களிடம் கொடுங்கள். சுய நிர்வாகம் நடத்தும் மத நிறுவன வட்டாரங்கள் சிறந்தவையாக இருக்கும். **இதைதான் எதேச்சாதிகாரத்திடமிருந்து மூலதனம் வேண்டிக் கொண்டிருக்கிறது.**"*
>
> *—வர்க்கங்களும் கட்சிகளும் மதம் மற்றும் மாதா கோவில்களின் பால் அவர்களுடைய மனப்பான்மையும்*

மூலதனத்திற்கும் மதஒடுக்குமுறைக்கும் உள்ள நெருக்கத்தை ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டும் புரிந்திருக்க வேண்டும், அப்போதுதான் மதத்தின் வர்க்கச்சார்பை அறிந்தவர்களாவார்கள். மதத்திற்கும் சுரண்டுபவர்களுக்கும் இடையேயுள்ள உறவையும் சார்பையும் உணராதவர்கள், பாட்டாளி வர்க்க உணர்வை முழுமையாக பெற்றவர்களாகமாட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# 3. மதத்தைப் பற்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் அணுகுமுறை

### (மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர்களின் படைப்புகள் மிகுந்தளவிற்கு இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளன)

மதம் தனிநபரின் சொந்த விவகாரமாய்ப் பிரகடனம் செய்யப்பட வேண்டும், அதாவது அரசைப் பொறுத்த மட்டில் மதம் தனிநபரின் சொந்த விவகாரமாக்கப்பட வேண்டும். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த மட்டில் எவ்விதத்திலும் மதத்தைத் தனிநபரின் சொந்த விவகாரமாக்கக் கூடாது. மார்க்ஸ் எங்கெல்ஸ் ஆகியோரின் இந்தக் கருத்தை லெனின் எந்தவித குழப்பமும் நேர்ந்திடக்கூடாது என்பதற்காக மிகத் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

*"சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சியைப் பொறுத்தமட்டில், மதம் தனிநபரது சொந்த விவகாரமல்ல. நமது கட்சி தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்காகப் போராடும் வர்க்க உணர்வு கொண்ட, முன்னேறிய வீரர்களை ஒருசேர இணைக்கும் கழகமாகும். இப்படிப்பட்ட ஒரு கழகம் மத நம்பிக்கை களின் வடிவிலாகிய வர்க்க உணர்வின்மை, அறியாமை அல்லது மூடத்தனம் குறித்துப் பாராமுகமாய் இருக்க முடியாது, இருக்கவும் கூடாது.*

*மதத்தின் இருளை முற்றிலும் சித்தாந்த ஆயுதங்களைக் கொண்டு, சித்தாந்த ஆயுதங்களை மட்டுமே கொண்டு, நம்முடைய எழுத்தும் பேச்சுமாகிய பிரச்சாரத்தைக் கொண்டு போராடும் பொருட்டு, மதச்சபையானது அரசால் நிறுவப்பட்டதாய் இருக்கும் நிலை அறவே நீக்கப்பட வேண்டுமெனக் கோருகிறோம். மதத்தின் மூலமான எல்லாவித மாய்மாலங்களாலும் தொழிலாளர்கள் ஏய்க்கப்படுவதை எதிர்த்து இப்படி ஒரு போராட்டம் நடத்தும் பொருட்டே ருஷ்யாவின் சமூக - ஜனநாயகத் தொழிலாளர் கட்சியாகிய நமது கழகத்தை நாம் நிறுவிக் கொண்டோம். ஆகவே நமக்குச் சித்தாந்தப் போராட்டம் தனிநபரது சொந்த விவகாரமல்ல, கட்சி அனைத்துக்கும், பாட்டாளி வர்க்கம் அனைத்துக்கும் உரிய விவகாரமாகும்."*

*—சோஷலிசமும் மதமும்*

தொழிலாளர்கள் தங்களது பொருளாதார விடுதலைக்காக அதிகமாக அல்லது குறைவாக அரசியல் சுதந்திரம் பெற்றுவிடலாம், ஆனால் மூலதனத்தின் அதிகாரம் வீழ்த்தப்படாதவரை, எந்த அளவிலான சுதந்திரத்தினாலும்



படிப்பகம்

அவர்களுடைய வறுமைக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் ஒடுக்குமுறைக்கும் முடிவுகட்டிவிட முடியாது என்கிறார் லெனின்.

இதனைத் தொடர்ந்து கூறுகிறார்:-

> "மிகப் பெருந்திரள்களான மக்களை, ஏனையோருக்காகத் தாம் செய்யும் ஓயாத வேலையாலும் மற்றும் இல்லாமையாலும் தனிமைப்பாட்டாலும் நசுக்கப்படும் இம்மக்களை, எங்கும் அழுத்தி இருத்திவைக்கும் ஆன்மீக ஒடுக்குமுறையின் பல வடிவங்களில் மதமும் ஒன்றாகும்.
>
> ...
>
> *மதம் மக்களுக்கு அபினியைப் போன்றது. மதம் ஒரு வகையான ஆன்மீக பெரும் போதை கொண்டது. அதில் மூலதனத்தின் அடிமைகள் மூழ்கி அவர் களுடைய மனித உருவத்தையும், மனிதப் பிறப்புக்குகந்த முறையி லான வாழ்க்கை நடத்துவதற்கான உணர்வையும் கோரிக்கைகளையும் மழுங்கடித்து மூழ்கடித்து வருகிறார்கள்."*
>
> —*சோஷலிசமும் மதமும்*

பொதுவாகக் கம்யூனிஸ்டுகள் மதத்தைப் பற்றி தங்களது கருத்தை "மக்களது அபினியே மதம்" என்றே அறிவிக்கின்றனர். ஆனால் இதனை விளக்குகையில், அவரவரது புரிதலுக்கு ஏற்ப விளக்கம் அளிக்கும் போது மார்க்ஸ் எந்த பொருளில் இதனை கூறினாரோ அதற்கு எதிராக சென்று விடுகின்றனர்.

மதம் மக்களுக்கு அபினி என்றவுடன், சுரண்டப்படும் மக்கள் தங்களது வேதனையைக் குறைப்பதற்கான மருந்தாக சிலர் மதத்தை விளக்கப்படுத்து கின்றனர். அதாவது மதம் என்பது கம்யூனிச சமூகத்தில்தான் முழுமையாக மறைந்து போவதற்கான புறநிலை வளர்ச்சி காணப்படும், அதுவரை மதம் சுரண்டப்படுபவர்களுக்குத் தற்காலிக நிவாரணமாக செயல்படும் என்று மதத்தைப் பற்றிய மார்க்சிய முதலாசிரியர்களின் கருத்திற்கு முரணாக 'மதத்திற்கு ஒரு நல்ல அம்சமுண்டு. அது தற்காலிக நிவாரணம்' என்று விளக்கம் கொடுக்கின்றனர்.

இவ்வழியில் மார்க்சியக் கண்ணோட்டத்திற்கு எதிராகவும் முரணாகவும் மதத்தைப் பற்றிய கருத்து முன்வைக்கப்படுகிறது. மதத்தின் தோற்றத்தையும் அதன் வர்க்கத் தன்மையையும் புரிந்து கொள்ளாமையே இவ்வகையான முடிவெடுப்பதற்குக் காரணமாகும்.

மக்கள் தங்களது சித்தத்தை சாராத புறநிலையான சூழலிலே உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். அந்தப் பொருளாதார வாழ்வே, சமூகத்தின் அடித்தளமாக அமைகிறது. இந்த அடித்தளத்திற்கு ஏற்பவே சட்டம், அரசியல், மதம், கலை,

www.padippakam.com

தத்துவவியல் போன்ற அறிவுத்துறைகள் அனைத்தும் மேற்கட்டமைப்பாகச் செயல்படுகின்றன.

சமூக உணர்வுநிலை என்பது சமூகத்தை அப்படியே பிரதிபலிக்கிறது என்று பொருள்கொள்ளக் கூடாது. அது மனிதர்களின் நடத்தைக்கு வடிவம் கொடுத்து அவர்களை ஒரு குறிப்பிட்ட வழியில் செயலாற்றுகிறது. இவ்வகையில் மதம் என்பது பொருளியல் வாழ்வின் திரிந்த, பொய்யான வகையில் பிரதிபலிக்கிறது. இதனால்தான் மார்க்ஸ் கூறுகிறார்:-

> *''மதத்தின் துயரம் என்பது ஒரே நேரத்தில் உண்மையான துயரத்தின் வெளிப்பாடாகவும், அதற்கு எதிரான கண்டனமாகவும் இருக்கிறது. மதம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் பெருமூச்சாகவும், இதயமற்ற உலகின் இதயமாகவும், ஜீவனற்ற நிலைகளின் ஜீவனாகவும் இருக்கிறது. அது மக்களுக்கு அபினியாக இருக்கிறது.''*
>
> *—ஹெகலின் உரிமைத் தத்துவம் பற்றிய விமர்சனத்துக்கு பங்களிப்பு- முன்னுரை*

மக்களின் உண்மையான மகிழ்ச்சிக்காக, மாயையான மகிழ்ச்சியாகத் திகழும் மதத்தை அழிப்பது இன்றியமையாததாகும் என்கிறார் மார்க்ஸ். மாயையான மகிழ்விலிருந்து விடுபட்டு உண்மையான மகிழ்வை அடைவதற்கான போராட்டத்தைப் பற்றி மார்க்ஸ் கூறியிருக்கிறார். ஏனவே மதத்திற்கு எதிரானப் போராட்டம் என்பது கம்யூனிஸ்டுகளின் கடமையாகிறது.

இதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள், மதம் என்பது மக்களுக்குத் தற்காலிக நிவாரணம் கிடைக்கிறது என்று கூறிவிட்டு, அந்தக் குழப்பத்தின் ஊடே மதம் தனிநபர்களின் சொந்த விவகாரம் என்று மார்க்சியம் கூறுவதை, பாட்டாளி வர்க்கக் கட்சிக்கும் மதம் என்பது சொந்த விவகாரம் என்று தவறாக விளக்குகின்றனர்.

அன்று காணப்பட்ட இத்தகைய போக்கை எதிர்த்து லெனின் கூறுகிறார்:-

> *''ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் சீரழிந்து மேலும் மேலும் சந்தர்ப்பவாதிகளாகிய போது, ''மதம் தனிநபரின் விவகாரமென்று அறிவிக்கப்படுகிறது'' என்னும் புகழ்பெற்ற சூத்திரத்துக்கு அற்பத்தனமான முறையில் பொய்யான வியாக்கியானம் தரும் நிலைக்கு மேன்மேலும் சரிந்து சென்றது தெரிந்ததே. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சிக்குங்கூட மதம் தனிநபரின் விவகாரம் என்பதாய்ப் பொருள்படும்படி இந்தச் சூத்திரம் திரித்துக் கூறப்பட்டுவிட்டது!! பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர வேலைத்திட்டத்துக்கு இழைக்கப்பட்ட இந்த அப்பட்டமான துரோகத்தை எங்கெல்ஸ் வன்மையாய்க் கண்டித்தார்.*



படிப்பகம்

www.padippakam.com

*1891ல் அவர் தமது கட்சியில் சந்தர்ப்பவாதத்தின் மிக பலவீனமான துவக்கம் மட்டுமே தலைதூக்கக் கண்டார். ஆகவே அவர் தமது கருத்தை மிகுந்த எச்சரிக்கையோடு எடுத்துரைத்தார்:*

*"... முற்றிலும் கோழைத்தனம் காரணமாய்க் குடியரசுவாத முதலாளித்துவ வர்க்கம் முன்பு செய்யத் தவறிவிட்ட சீர்திருத்தங்கள், தொழிலாளி வர்க்கத்தின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு இன்றியமையாத அடித்தளத்தை அமைத்திடும் சீர்திருத்தங்கள் -அரசைப் பொறுத்தமட்டில் மதம் முற்றிலும் தனிநபரின் விவகாரமாகும் என்ற கோட்பாடு செயல்ப்படுத்தப்படுவது போன்றவை- செயல்படுத்தப்பட கம்யூனின் தீர்மானங்கள் ஆணையிட்டன.."*

*வேண்டுமென்றேதான் எங்கெல்ஸ் "அரசைப் பொறுத்தமட்டில்" என்னும் சொற்களுக்கு அழுத்தமிட்டுக் காட்டினார், கட்சியைப் பொறுத்த மட்டில் மதம் தனிநபரின் விவகாரம் என்பதாய்ப் பிரகடனம் செய்துவிட்ட ஜெர்மன் சந்தர்ப்பவாதம் இவ்வாறு புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சியைச் சமயச் சார்பற்ற நிலைக்கு இடமளிக்கத் தயாராயிருக்கும், ஆனால் மக்களை மதிமயங்கச் செய்யும் மதமெனும் அபினியை எதிர்த்துக் கட்சி நடத்த வேண்டிய போராட்டத்தைக் கைவிட்டுவிடும் மிகக் கொச்சையான "கட்டற்ற சிந்தனைக்குரிய" குட்டி முதலாளித்துவ அற்பவாதத்தின் இழிநிலைக்குச் சீரழியும்படிச் செய்துவிட்டது"*

*—அரசும் புரட்சியும்*

மார்க்சியம் என்பது பொருள்முதல்வாதம், இது பதினெட்டாம் நூற்றாண்டுக் கலைக்களஞ்சியவாதிகளின் பொருள்முதல்வாதம் அல்லது ஃபாயர்பாக்கின் பொருள்முதல்வாதத்தைப்போல மதத்துக்குக் கடுமையான எதிரியாகும். இதில் சந்தேகம் ஏதுமில்லை. ஆனால் மார்க்ஸ் ஏங்கெல்சின் இயக்கவியல் பொருள்முதல்வாதம் இவர்களின் பொருள்முதல்வாதத்தைக் காட்டிலும் அப்பால் செல்கிறது. அது பொருள்முதல்வாதத் தத்துவஞானத்தை வரலாறு மற்றும் சமூக அறிவியல்களின் துறைக்கும் கையாள்கிறது என்று லெனின் கூறித் தொடர்கிறார்:-

*"நாம் மதத்தை எதிர்க்க வேண்டும். அதுதான் அனைத்துப் பொருள் முதல்வாதத்தின் அரிச்சுவடியாகும். ஆனால் மார்க்சியம் அரிச்சுவடியோடு நின்றுவிட்ட பொருள்முதல்வாதம் அல்ல. மார்க்சியம் அதற்கும் அப்பால் செல்கிறது. மதத்தை எதிர்ப்பது எப்படியென்று நாம் அறிந்திருக்க வேண்டும், அதற்காகப் பெருந்திரளான மக்களிடையில் நம்பிக்கை மற்றும் மதத்தின் தோற்றுவாயைப் பொருள்முதல்வாத முறையில் நாம் விளக்க வேண்டும் என்று அது கூறுகிறது.*



படிப்பகம்

*மதத்தை எதிர்த்தல் என்பது சூக்குமமான - சித்தாந்த போதனை என்ற அளவில் நின்றுவிடக் கூடாது, அத்தகைய போதனையாக அதைச் சுருக்கி விடவும் கூடாது. மதத்தின் சமூக வேர்களை அகற்றுவதை நோக்கமாகக் கொண்ட வர்க்க இயக்கத்தின் ஸ்-லமான நடைமுறை யோடு இப்போராட்டம் இணைக்கப்பட வேண்டும். நகரப் பாட்டாளி வர்க்கத்தின் பின்தங்கிய பகுதி யினரிடமும் அரைப் பாட்டாளி வர்க்கத் தின் விரிவான பகுதியினரிடமும் பெருந்திரளான விவசாயிகளிடமும் மதம் தன் பிடிப்பை வைத்திருப்பது ஏன்? அதற்குக் காரணம் மக்களின் அறியாமை என்று பதிலளிக்கிறார் முதலாளி வர்க்க முற்போக்காளர், தீவிரவாதி அல்லது முதலாளி வர்க்கப் பொருள்முதல்வாதி. ஆகவே, மதம் ஒழிக, நாத்திகம் நீடூழி வாழ்க, நாத்திகக் கருத்துக்களைப் பரப்புவதே நமது தலையாய கடமை. இது உண்மை அல்ல, இக்கருத்து மேலெழுந்த வாரியான, குறுகிய முதலாளித்துவ உயர்த்துவோருடை கருத்து என்று மார்க்சியவாதி கூறுகிறார். இக்கருத்து மதத்தின் வேர்களைப் போதிய அளவுக்கு ஆழமாக விளக்கவில்லை. அவற்றைப் பொருள்முதல்வாத முறையில் அல்ல, கருத்துமுதல்வாத முறையில் விளக்குகிறது. நவீன முதலாளித்துவ நாடுகளில் இந்த வேர்கள் முக்கியமாக சமூகத் தன்மை மயானவை."*

*—மதத்தைப் பற்றித் தொழிலாளர் கட்சியின் அணுகுமுறை - லெனின்*

லெனின் கூற்று மிகத் தெளிவாக இருக்கிறது. இதில் கூறியவற்றை தொகுத்துக் கொள்வோம்.

முதலிலேயே கூறிவிட்டார் லெனின், நாம் மதத்தை எதிர்க்க வேண்டும். அடுத்து மார்க்சியம் மதத்தை எதிர்க்க வேண்டும் என்ற அரிச்சுவடிப் பாடத்திற்கு அப்பால் செல்கிறது. அதாவது மதத்தை எப்படி எதிர்க்க வேண்டும் என்பதை வரையறுத்து அதன்படி செயல்படுகிறது. மத எதிர்ப்பென்பது சூக்கும மான சித்தாந்த அளவில் சுருக்கிக் கொள்ளக் கூடாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மத இருப்பிற்கான சமூக வேர்களை அகற்றும் நோக்கத் துடன் அதாவது வர்க்க போராட்டத்துடன் இணைத்து நடத்தப்பட வேண்டும்.

பாட்டாளிகளில் பின்தங்கிய பகுதியினரிடமும் பெருந்திரளான விவசாயி களிடமும் மதம் தம் பிடிப்பை வைத்திருப்பதற்குக் காரணம் அறியாமை என்று முதலாளி வர்க்க முற்போக்காளர், முதலாளித்துவ பொருள்முதல்வாதிகள் பதிலளிக் கின்றனர். இதன் அடிப்படையில் மதம் ஒழிக, நாத்திகம் நீடூழி வாழ்க, நாத்திகக் கருத்துக்களைப் பரப்புவதே நமது தலையாய கடமை, என்ற முடிவிற்கு வருகின்றனர். மார்க்சிய பார்வையில் இது சரியல்ல. இவர்கள் மதத்தின் சமூக வேர்களை விளங்கிக் கொள்ளவில்லை. அதனால் மதத்தை பொருள்முதல்வாத முறையில் அல்லாது கருத்துமுதல்வாத முறையில் அணுகுகின்றனர் என்று லெனின் கூறியுள்ளார். இதனைத் தொடர்ந்து அக்கட்டுரையில் கூறியிருக்கிறார்.

www.padippakam.com

பெருந்திரளான உழைக்கும் மக்களிடம் சமூக முறையில் அழுத்தமும், முதலாளித்துவ குருட்டுச் சத்தியினால் உருவான அச்சமும் தற்கால மதத்தின் வேர்களாக இருக்கின்றன. "அச்சம் கடவுள்களைப் படைத்தது" மூலதனத்தின் குருட்டுச் சக்தியை (பெருந்திரளான மக்கள் அதை முன்னறிய முடியாது என்பதால் அது குருட்டுத் தனமானது) பற்றிய அச்சம் பாட்டாளி மற்றும் சிறிய உடைமையாளரின் வாழ்க்கையின் ஒவ்வொரு காலடியிலும் "திடீரென்ற", "எதிர்பாராதவிதமான", "தற்செயலான" அழிவை, நாசத்தை, ஏழையாகவும் விபச்சாரியாகவும் மாற்றுவதாகவும், பட்டினிச் சாவை ஏற்படுத்தப் போவதாகவும் பயமுறுத்துகிறது, அப்படியே ஏற்படுத்துகிறது - இதுதான் நவீன மதத்தின் வேர்.

முதலாளித்து அமைப்பில் கடும் உழைப்பினால் நசுக்கப்படுகின்ற பெருந்திரளான மக்கள் மதத்தின் இந்த வேரையும் மூலதன ஆதிக்கத்தின் எல்லா வடிவங்களையும் எதிர்த்து ஒற்றுமையான, அமைப்பு ரீதியான, திட்டமிட்ட மற்றும் உணர்வு பூர்வமான வழியில் தாங்களே போராடக் கற்றுக் கொள்கின்றவரை எந்தக் கல்வி புகட்டலும், புத்தகமும் அவர்களுடைய மனங்களிலிருந்து மதத்தை ஒழித்துவிட முடியாது. என்பதை மனதிலிருத்திக் கொண்டே மார்க்சியவாதிகள் மதத்தைப் பற்றிய தமது அணுகுமுறையை அமைத்துக் கொள்கின்றனர்.

இதற்கு மதத்துக்கு எதிரான கல்வி புகட்டும் நூல்கள் தீங்கானவை என்றோ அவசிமற்றவை என்றோ அர்த்தப்படுத்திக் கொள்ளக்கூடாது. கம்யூனிஸ்ட்டின் நாத்திகப் பிரச்சாரம் என்பது தமது கடமையான, சுரண்டல்காரர்களுக்கு எதிராகச் சுரண்டப்படுகின்ற பெருந்திரளான மக்களின் வர்க்கப்போராட்டத்திற்கு, கீழ்பட்டதாக பொருள்கொள்கிறது. ஏன் இவ்வாறு கூறுகிறது என்றால் உண்மையான வாழ்க்கையில் பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டிருக்கும் மதத்தைப் பலாத்காரமான முறையில் பிரிக்க முயற்சிப்பது இயக்கவியலுக்கு முரணானதாகும் என்கிறார் லெனின்.

ஒர் உதாரணம் மூலம் லெனின் இதனை விளக்குகிறார். வட்டாரப் பொருளாதாரப் போராட்டம் நடைபெறும்போது இப்போராட்டம் வெற்றி யடைவதற்குத்தான் முதன்மை கொடுக்க வேண்டும். இங்கே பாட்டாளிகளை நாத்திகர் என்றும் மத நம்பிக்கையுள்ளவர் என்றும் பிரிப்பது வர்க்கப் போராட்டத்தை மட்டுப்படுத்துவதற்கு சமமாகும். மொட்டையான நாத்திக பிரச்சாரம் என்பது, மதகுருமார்களின் 'தொழிலாளர்கள் போராட்டத்திலிருந்து விலகியிருக்க வேண்டும்' என்ற மதநம்பிக்கை கொண்ட பாட்டாளிகளிடம் பரப்பும் திட்டத்துக்கே உதவும். வர்க்கப் போராட்டத்தின் உண்மையான முன்னேற்றத்தை மனதில் கொண்டு இவற்றைக் கூறியதாக லெனின் தெரிவித்துள்ளார்.


படிப்பகம்

www.padippakam.com

லெனின் கூறுகிறார் :-

*"ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில், ஒரு குறிப்பிட்ட தொழிற்கூடத்தில் உள்ள பாட்டாளிகள் இரண்டு பிரிவாகக் கீழ்க்கண்டவாறு பிரிந்து நிற்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஒரு பிரிவு முன்னேற்றமான, நல்ல வர்க்க உணர்வு பெற்றுள்ள சமூக ஜனநாயகாவாதிகள், அவர்கள் நாத்திகர்கள் என்று வைத்துக் கொள்வோம். முற்றொரு பகுதி பின் தங்கிய தொழிலாளர்கள், கடவுள் நம்பிக்கை உடையவர்கள், மாதா கோவிலுக்குச் செல்பவர்கள் அல்லது ஸ்தல மதகுருவின் நேரடியான ஆதிக்கத்தின் கீழ் கூட [அவர் ஒரு கிறிஸ்தவத் தொழிலாளர்களின் சங்கத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார் என்றும் வைத்துக் கொள்வோம்] இருப்பவர்கள் - என்று பிரிந்திருப்பதாகக் கருதுவோம். இந்த ஸ்தலத்தின் பொருளாதாரப் போராட்டத்தின் விளைவாக ஒரு வேலை நிறுத்தம் ஏற்பட்டிருப்பதாகவும் மேலும் கருதுவோம். மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் வேலை நிறுத்த இயக்கத்தின் வெற்றிக்கு முக்கியத்துவமளிப்பது, இந்தப் போராட்டத்தில் தொழிலாளர்களை நாத்திகர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் என்று பிரிப்பதை உறுதியாக மட்டுப்படுத்துவது, அத்தகைய பிரிவினையைச் சுறுசுறுப்பாக எதிர்ப்பது ஒரு மார்க்சியவாதியின் கடமையாகும். இத்தகைய சூழ்நிலையில் நாத்திகப் பிரச்சாரம் செய்வது அவசியமற்ற தாகவும் தீமையளிப்பதாகவும் இருக்க முடியும். பின்தங்கிய பகுதியினரை விரட்டி விடலாம், தேர்தல்களில் ஒரு மாண்டேட்டை இழந்து விடலாம் என்ற ஃபிலிஸ்டீனிய அச்சம், இதரவை காரணமாக இப்படிக் கூற வில்லை, மொட்டையான நாத்திகப் பிரச்சாரத்தைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு சிறப்பான முறையில் கிறிஸ்தவத் தொழிலாளர்களைச் சமூக - ஜனநாகத்துக்கும் நாத்திகத்துக்கும் மாற்றக் கூடிய நவீன முதலாளித்துவச் சமூகத்தின் நிலைமைகளில் வர்க்கப் போராட்டத்தின் உண்மையான முன்னேற்றத்தை மனதில் கொண்டு இதைக் கூறுகிறோம்."*

*—மதத்தைப் பற்றித் தொழிலாளர் கட்சியின் அணுகு முறை*

ஒரு மதகுரு கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக சேர்க்கலாமா, கூடாதா, என்பதற்கு நிபந்தனையற்ற முறையில் ஆம் என்று பதிலளிப்பது சரியாக இருக்காது. கட்சியின் திட்டத்தை எதிர்க்காமல் இருக்கும் நிலையில் கம்யூ னிஸ்ட் கட்சியில் அவரை அனுமதிக்கலாம். கட்சித் திட்டத்தினுடைய உணர் விற்கும் கோட்பாட்டிற்கும் மறுபக்கம் மதகுருவின் உணர்விற்கும் இடையே முரண்பாடு உள்ளது. அது அவரது சொந்தத் தனிப்பட்ட முரண்பாடாகப் பார்க்கவேண்டும். ஆனால் கட்சியில் சேர்ந்த பின் கட்சிக்குள் மதக்கருத்துக் களைச் செயலூக்கத்துடன் பிரச்சாரம் செய்தால், அதுவே அவரது வேலையாக



படிப்பகம்

www.padippakam.com

இருந்தால், அவரைக் கட்சியிலிருந்து நீக்கவேண்டும். இதில் மாற்று கருத்துக்கு இடமில்லை.

லெனின் கூறுகிறார்:-

*"..அடிக்கடி ஒரு பிரச்சினை எழுப்பப்படுகிறது. ஒரு மதகுரு சமூக-ஜனநாயகக் கட்சியில் உறுப்பினராக இருக்கலாமா, கூடாதா என்பது. இந்தக் கேள்விக்குப் பொதுவாகவே ஒரு நிபந்தனையற்ற முறையில் ஆம் என்று பதிலளிக்கப்பட்டிருக்கிறது.*

...

*..எனவே, எந்தவித நிபந்தனையுமற்ற முறையில் 'ஆம்' என்னும் விடை, இந்த இடத்தில் சரியாக இருக்காது. சமூக-ஜனநாயகக் கட்சியில் பாதிரிமார்கள் எப்போதுமே உறுப்பினர்களாக வர முடியாது என்று அறுதியிட்டுக் கூற முடியாது. ஆனால் அதற்கு எதிரிடையான விதியையும் கடைப்பிடிக்க முடியாது. ஒரு மதகுரு நம்மிடம் வந்து நமது பொதுவான அரசியல் வேலையில் பங்குகொண்டு, கட்சியின் திட்டத்தையும் எதிர்க் காமல் இருந்தால் அவர் சமூக-ஜனநாயகவாதிகளின் அணியில் சேர்ந்து கொள்ள அனுமதிக்கப்படலாம். ஆனால் நமது கட்சியின் வேலைத் திட்டத்தின் உணர்வுக்கும் கோட்பாடுகளுக்கும் மறுபக்கம் அந்த மதகுரு வின் மத உணர்வுக்கும் இடையில் முரண்பாடு உள்ளது. அது அந்தச் சந்தர்ப்பச் சூழ்நிலையில் அந்த மதகுருவை மட்டும் பொருத்த விஷய மாகவும் அது அவருடைய சொந்தத் தனிப்பட்ட முரண்பாடாகவும் இருக்கும்.*

...

*.. ஆனால், அவ்வாறு ஒரு மதகுரு, உதாரணத்திற்கு சமூக ஜனநாயகக் கட்சியில் சேர்ந்துவிட்டால், அவ்வாறு சேர்ந்து கட்சிக்குள் மதக் கருத்துக்களைச் செயலூக்கமாகப் பிரச்சாரம் செய்வதை தனது பிரதான வேலையாக, அநேகமாக அது ஒன்றே வேலையாக எடுத்துக் கொண்டால், பின்னர் கேள்விக்கிடமில்லாமல் அவரைக் கட்சியின் அணியிலிருந்து நீக்கித்தானாக வேண்டும். கடவுள்மீது நம்பிக்கை கொண்டிக்கக் கூடிய தொழிலாளர் களைச் சமூக ஜனநாயகக் கட்சியில் அனுமதிக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, நாம் திட்டமிட்டு அத்தகைய தொழிலாளர்களைக் கட்சிக்குள் சேர்க்க வேண்டும். அவர்களுடைய மத உணர்வுகளைக் கொஞ்சங்கூட புண்படுத்தக் கூடாது. அவர்களை நாம் நமது கட்சிக்குள் சேர்ப்பது அவர்களை நமது கட்சியின் வேலைத் திட்டத்தினது உணர்வின் அடிப்படையில் கல்வி புகட்டிப் பயில்விப்பதாகும். அதற்கு எதிரான போராட்டத்தை நடத்த அனுமதிப்பதற் காகவன்று, கட்சிக்குள் நாம் கருத்துச் சுதந்திரத்தை அனுமதிக்கிறோம். ஆனால், அதற்கு ஓர்*



படிப்பகம்

*எல்லையுண்டு. அது குழுசேரும் சுதந்திரத்தால் நிர்ண யிக்கப்படுகிறது. கட்சியில் பெரும்பான்மையோரால் நிராகரிக்கப்பட்ட கருத்துக்களைத் தொடர்ச்சியாக செயலூக்கத்துடன் பிரச்சாரம் செய்து கொண்டிருப்பவர் களுடன் நாம் சேர்ந்தே செல்லவேண்டிய அவசியமில்லை.''*

*—மதத்தைப் பற்றித் தொழிலாளர் கட்சியின் அணுகு முறை*

லெனினது கூற்று மிகத்தெளிவாகவே இருக்கிறது.

கடவுள்மீது நம்பிக்கை கொண்ட தொழிலாளர்களைக் கண்டிப்பாகக் கட்சியின் அணிகளுக்குள் கொண்டுவரவேண்டும். அவரது கடவுள் நம்பிக்கையைப் புண்படுத்தாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அவரைக் கட்சியில் சேர்ப்பதென்பது கட்சித் திட்டத்தின் அடிப்படையில் அவருக்குக் கல்வி புகட்டுவதற்கேயாகும். கட்சியில் கருத்துச் சுதந்திரத்தை அனுமதிப்பது என்பது ஓர் எல்லைக்குட்பட்டது. கட்சியின் பெரும்பான்மையோர் நிராகரிக்கும் கருத்தைச் செயலூக்கத்துடன் பிரச்சாரம் செய்துகொண்டிருப்பவருடன் சேர்ந்து செல்லவேண்டிய தேவையில்லை என்று லெனின் விளக்கியுள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சியைப் பொருத்தளவில் மதத்தை தனிப்பட்ட விவகாரமாக கருதவில்லை என்பது பற்றி லெனினின் கூற்றை நேரடியாகப் பார்ப்போம்:-

*''மதம் தனிப்பட்ட விவகாரம் என்று அரசு அறிவிக்க வேண்டுமென்று பாட்டாளி வர்க்கத்தின் கட்சி கோருகிறது. ஆனால் மக்களுடைய அபினுக்கு எதிரான போராட்டம், மதச் சார்பான மூட நம்பிக்கைகளுக்கு எதிரான போராட்டம், இதரவற்றைத் ''தனிப்பட்ட விவகாரம்'' என்று அது கருதுவதில்லை. சமூக - ஜனநாயகக் கட்சி மதத்தைத் தனிப்பட்ட விவ காரமாகக் கருதுகிறது என்று அர்த்தப்படும்படியாக இந்தப் பிரச்சினையைச் சந்தர்ப்பவாதிகளே திரித்துக் கூறுகிறார்கள்!''*

*—மதத்தைப் பற்றித் தொழிலாளர் கட்சியின் அணுகு முறை*

*''மதம் தனிநபரின் சொந்த விவகாரமாய்ப் பிரகடனம் செய்யப்பட வேண்டும் - இச்சொற்களின் வாயிலாய், சோஷலிஸ்டுகள் மதத்தின்பால் தமக்குள்ள போக்கை வழக்கமாய்ப் பிரகடனம் செய்கின்றனர். ஆனால் எவ்விதமான தப்பு அபிப்பிராயமும் ஏற்படாமல் தடுப்பதற்காக, இச் சொற்களின் பொருளைத் துல்லியமாய் வரையறுத்துக் கூறியாக வேண்டும். அரசைப் பொறுத்தமட்டில் மதம் தனிநபரின் சொந்த விவகாரமாக்கப்பட வேண்டுமென நாம் கோருகிறோம். ஆனால் நமது கட்சியைப் பொறுத்தமட்டில் எவ்விதத்திலும் நாம் மதத்தைத் தனிநபரின் சொந்த விவகாரமாய்க் கருத முடியாது. மதம் அரசின் கருத்துக்குரியதாய் இருக்கக் கூடாது, மத நிறுவனங்கள் அரசாங்க அதிகாரத்துடன் எந்த சம்பந்தமும் கொண்டிருக்கக் கூடாது. ஒவ்வொருவரும் தம் விருப்பம்*

www.padippakam.com

*போல் எந்த மதத்தையும் கடைப்பிடித்து ஒழுகவும், எம்மதத்தையும் சேராத வராய் இருக்கவும் - அதாவது பொதுவாய் ஒவ்வொரு சோஷலிஸ்டும் இருந்து வருவதுபோல, நாத்திகராய் இருக்கவும் - முழுமையான உரிமை பெற்றிருக்க வேண்டும். குடிமக்களின் மத நம்பிக்கைகள் காரணமாய் அவர்களிடையே எவ்விதமான பாகுபாட்டுக்கும் இடமளிப்பது ஒருபோதும் அனுமதிக்கப்படலாகாது. அரசாங்கப் பத்திரங்களில் குடிமகனுடைய மதத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவதுங்கூட நிச்சயமாய் விட்டொழிக்கப்பட வேண்டும். அரசாங்க மதச்சபைக்கு மான்யங்கள் வழங்கப்படலாகாது, மதச்சபை, சமயக் கழகங்களுக்கு அரசாங்க உதவித் தொகை எதுவும் அளிக்கப்படலாகாது. இவை யாவும் அரசைச் சாராத நிறுவனங்களாகி விட வேண்டும். ஒத்த மனத்தோராகிய குடிமக்களது முற்றிலும் சுதந்திரமான நிறுவனங்களாகிவிட வேண்டும். இந்தக் கோரிக்கைகள் பூரணமாய் நிறைவேற்றப்படும் போதுதான், அவமானகரமான, கேடுகெட்ட அந்தக் கடந்த காலத்துக்கு முடிவு கட்ட முடியும்''*

*—சோஷலிசமும் மதமும்*

லெனினின் இந்தக் கருத்தில் மற்றொன்றும் அடங்கியிருக்கிறது. ஒவ்வொருவரும் தம் விருப்பம்போல் எந்த மதத்தையும் கடைப்பிடித்து ஒழுகு வதையும், குடிமக்களின் மத நம்பிக்கைகள் காரணமாய் அவர்களிடையே எவ்விதமான பாகுபாட்டிற்கும் இடமளிப்பது ஒருபோதும் அனுமதிக்கப்படலா காது என்பதையும் தெளிவாக்கியுள்ளது. நாத்திகத்தை ஏற்றுக்கொண்ட தமிழக கம்யூனிஸ்டுகள் ஏன் கோயில் நுழைவுப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் என்று இங்கு பலரால் கேட்கப்படும் கேள்வியாகும். அதற்கு லெனின் இங்குக் கூறிய கருத்தின் அடிப்படையில்தான் இப்படிப்பட்ட போராட்டம் நடைபெறுகிறது என்பதே பதிலாகும்.

அடுத்து இரண்டு கேள்விகளை எழுப்பி லெனின் பதிலளிப்பதைப் பார்ப்போம்,

*"நாம் நாத்திகர்கள் என்று நமது வேலைத்திட்டத்தில் நாம் ஏன் அறிவிக்கவில்லை? கிறிஸ்தவர்களும் தெய்வ நம்பிக்கையுடைய ஏனையோரும் நமது கட்சியில் சேரக்கூடாதென்று நாம் ஏன் தடை போடவில்லை?''*

*—சோஷலிசமும் மதமும்*

இதற்கான பதிலை மதத்தைப் பற்றிய பிரச்சினையில் முதலாளித்துவ ஜனநாயகவாதிகளுக்கும், கம்யூனிஸ்டுகளுக்கும் இடையில் உள்ள வேறு பாட்டின்மூலம் விளக்குகிறார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத்திட்டம் முற்றிலும் விஞ்ஞான வழிப்பட்ட தாகவும், பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலும்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டது. எனவேதான் கட்சியினுடைய வேலைத்திட்டத்தின் விளக்கத்தில் மதத்தாலான இருளின் மெய்யான வரலாற்று, பொருளாதார வேர்களைப்பற்றிய விளக்கமும் இன்றியமையாதவாறு உள்ளடங்கியிருக்கிறது. கட்சியின் பிரச்சாரத்தில் நாத்திகப் பிரசாரமும் இன்றியமையாதவாறு உள்ளடங்கி யிருக்கிறது என்பதை லெனின் வலியுறுத்துகிறார்.

இதனோடு மற்றொன்றையும் லெனின் வலியுறுத்துகிறார். முதலாளித்துவ தீவிர ஜனநாயகவாதிகள் செய்வதுபோல், மதத்தை ஒரு கருத்தியலான, கருத்துமுதல்வாதப் பாணியில், வர்க்கப் போராட்டத்திற்குத் தொடர்பில்லாத அறிவுத்துறைப் பிரச்சினையாய் பார்க்கும் தவற்றை செய்யக் கூடாது என்கிறார். மேலும் கூறுகிறார்:-

*''தொழிலாளி வெகுஜனங்கள் முடிவின்றித் தொடர்ந்து ஒடுக்கப்படு வதையும் நயம் கெடுக்கப்படுவதையும் அடிப்படையாய்க் கொண்ட ஒரு சமுதாயத்தில், மத மூடநம்பிக்கைகளை வெறும் நுகத்தடியின் கீழ் வதைபடுவது, சமுதாயத்திலுள்ள பொருளாதார நுகத்தடியின் விளைவும் பிரதிபலிப்புமே ஆகுமென்பதை மறப்பது முதலாளித்துவக் குறுகிய பார்வையையே குறிக்கும். முதலாளித்துவத்தின் இருண்ட சக்திகளை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் தானே போராடுவதன் மூலம் அது அறிவொளி பெறாத வரை, எத்தனைப் பிரசுரங்களை வெளியிட்டாலும், எவ்வளவுதான் உபதேசம் செய்தாலும் அதை அறிவொளி பெறச் செய்துவிட முடியாது. மண்ணுலகில் ஒரு சுவர்க்கத்தைப் படைக்கும் பொருட்டு நடைபெறும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினுடைய மெய்யான இந்தப் புரட்சிப் போராட்டத்தில் ஒற்றுமை ஓங்குவது, விண்ணுலகச் சுவர்க்கம் குறித்துப் பாட்டாளி வர்க்கத்தோரிடையிலான கருத்து ஒற்றுமையைக் காட்டிலும் நமக்கு மிகவும் முக்கியமானது.*

*எனவேதான் நாத்திகத்தை நமது வேலைத்திட்டத்தில் நாம் அறிவிக்க வில்லை, அறிவிக்கவும் கூடாது, எனவேதான் தமது பழைய தப்பெண்ணங்களில் இன்னமும் மீதமிச்சங்கள் சிலவற்றை விட்டொழிக்காது வைத்திருக்கும் பாட்டாளிகள் நமது கட்சியுடன் வந்து இணைவதற்கு நாம் தடைபோடவில்லை, போடவும் கூடாது. எப்பொழுதும் நாம் விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தையே பிரசாரம் செய்வோம். பல்வேறு ''கிறிஸ்தவப் பிரிவினரது'' முரணான கருத்துக் களை நாம் எதிர்த்துப் போராடுவது அவசியமே. ஆனால் மதப் பிரச்சினையை அதற்குச் சிறிதும் உரித்தாய் இராத முதல் நிலைக்கு முன்கொண்டுவர வேண்டுமென்று ஒருபோதும் இதற்கு அர்த்தமல்ல. மூன்றாம் தர அபிப் பிராயங்கள் அல்லது மூடக் கருத்துக்களை முன்னிட்டு, வேகமாய் அரசியல் முக்கியத்துவத்தை அறவே இழந்து, பொருளாதார வளர்ச்சியின் போக்கினாலேயே வேகமாய்க் குப்பை குழியிலே ஒதுக்கித்*



படிப்பகம்

*தள்ளப்பட்டு வரும் இவற்றை முன்னிட்டு, மெய்யாகவே புரட்சிகரமான பொருளாதார, அரசியல் போராட்டத் தின் சக்திகள் பிளவுபடுவதற்கு நாம் அனுமதிக்க வேண்டுமென்றும் இதற்கு அர்த்தமல்ல.*

*பிற்போக்குவாத முதலாளித்துவ வர்க்கத்தினர் மதப் பூசலைத் -ண்டி விடுவதில் எங்குமே கருத்துச் செலுத்தி வந்துள்ளனர் ..''*

*—சோஷலிசமும் மதமும்*

கம்யூனிஸ்ட் கட்சி வேலைத்திட்டத்தில் நாத்திகர்கள் என்று குறிப்பிடாமல் இருப்பதற்கான விளக்கமாக இவற்றை லெனின் கூறுகிறார். மதப் பூசலைத் தூண்டி தொழிலாளர்களிடையே பிளவை ஏற்படுத்தத் துணியும் முதலாளிகளின் எண்ணம் நிறைவேறாமல் தடுப்பதற்கே இந்த அணுகுமுறையை லெனின் முன்வைக்கிறார்.

மதத்திற்கு எதிரான போராட்டத்தை முதல்நிலைக்கு கொண்டு வருவதைத்தான் லெனின் மறுக்கிறார்.

வர்க்கப் போராட்டத்திற்கு உட்பட்ட வகையில் மதத்தை எதிர்ப்பது பற்றி இந்தச் சிறுகட்டுரையின் முடிவில் வலியுறுத்துகிறார்:-

*"அரசு சம்பந்தப்பட்ட மட்டில் மதத்தை மெய்யாகவே தனிநபரது சொந்த விவகாரமாக்குவதில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் வெற்றி வாகை சூடும். மத்திய காலத்தியப் பூசணம் துடைத்து அகற்றப்பட்டு சுத்த மாக்கப்பட்ட இந்த அரசியல் அமைப்பில், பாட்டாளி வர்க்கமானது மதத்தின் மாய்மாலத்தால் மனிதகுலம் ஏய்க்கப்படுவதற்கு மெய்யான மூல காரணமாகிய பொருளாதார அடிமை நிலையை ஒழிப்பதற்காக விரிவான, பகிரங்கமான போராட்டம் நடத்தும்.''*

*—சோஷலிசமும் மதமும்*

மதத்திற்கான எதிர்ப்பை இரண்டாம் நிலையில் வைக்கவேண்டும் என்றவுடன், சிலர் மதத்தில் உள்ள தீய அம்சங்களை நீக்கி, நல்ல அம்சங்களை மேலோங்கச் செய்து, கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய அணுகுமுறையாக அதனை முன்வைக்கின்றனர்.

இருக்கும் மதங்களை சீர்திருத்துவதும், புதிய தூய்மையான மதங்களை உருவாக்குவதும் பெரும் தீங்கானவை என்றே மார்க்சிய முதலாசிரியர்கள் கருதிவந்துள்ளனர்.

புகழ்பெற்ற ஜெர்மன் விஞ்ஞானி ஆர்தர் டிரூஸ் தமது "கிறிஸ்துவ கட்டுக் கதைகள்'' என்ற நூலின் இறுதியில் மதத்திற்குச் சாதகமான கருத்தைத் தெரிவித்துள்ளதை லெனின் கடுமையாகச் சாடுகிறார். புதுப்பிக்கப்பட்ட சுத்தப் படுத்தப்பட்ட, சூட்சுமமான மதம் ஒன்றை "நாளுக்குநாள் பெருகிவரும் பொருள் முதல்வாதப் பெரு வெள்ளப்பெருக்கை''த் தாங்கித் தப்பிநிற்கும் திறன்வாய்ந்த ஒரு மதம் படைத்தளிக்கும் அவரது முயற்சியை எதிர்த்து லெனின் கூறுகிறார்:-

www.padippakam.com

*“இங்கு வெளிப்படையாகவும், வேண்டுமென்றும் பேசுகின்ற ஒரு பிற்போக்காளனைக் காண்கின்றோம். அவர் பழைய சீரழிந்து போன மூடநம்பிக்கைகளுக்குப் பதிலாகப் புதிய மேலான அதிக அருவறுப்பான இழிவான மூடநம்பிக்கைகளை முன் வைப்பதற்குச் சுரண்டல் கும்பலுக்கு வெளிப்படையாக உதவி செய்கிறார்”*

*—போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் முக்கியத்துவம் குறித்து*

இங்கே பொருள்முதல்வாதத்திற்கு எதிராக வைக்கும் தூய்மையான புதிய மதத்தை உருவாக்கும் போக்கை லெனின் மிகவும் வன்மையாக கண்டிக்கிறார்.

மதத்துறையின் மாற்றங்கள் மூலமாக மட்டுமே மனிதயினத்தின் கால கட்டங்கள் வேறுபடுத்திப் பார்க்கப்படுகின்றன என்று கூறும் ஃபாயர்பாக்கைக் கடுமையாக டூரிங்குக்கு மறுப்பு என்ற நூலில் எங்கெல்ஸ் விமர்சித்து, அது திண்ணமான பொய்யாகும் என்று எழுதியுள்ளார். ஃபாயர்பாகின் அன்பு வழிப்பட்ட தமது புதிய மதத்தைப் போற்றிய அவரது “மிகச் சிறந்த நூற்பகுதிகள்” இன்று முற்றிலும் படிக்கவொண்ணாதனவாக ஆகிவிட்டன என்கிறார் எங்கெல்ஸ்.

இதனை மேலும் லெனின் விளக்குகிறார்:-

*“ஃபாயர்பாக்கைப் பற்றி எங்கெல்ஸ் எழுதியுள்ள கட்டுரையில், அவர் ஃபாயர்பாக்கை இடித்துக் கூறுகிறார். காரணம் ஃபாயர்பாக் மதத்தை எதிர்த்துப் போராடுவது அதை ஒழிப்பதற்காக அல்ல? ஆனால் மதத்தைப் புதுப்பிக்கவும். ஒரு புதிய “மேன்மையான” மதத்தைக் கண்டுபிடிக்கவும் போன்றவற்றுக்கே. மதம் மக்களுக்கு அபின் என்ற காரல் மார்க்சின் இந்த ஆணை மதத்தைப் பற்றிய மார்க்சியக் கண்ணோட்டம் முழுவதற்கும் அடித்தளமாகும். எல்லா நவீன கால மதங்களையும் சர்ச்சுகளையும். அனைத்து மதநிறுவனங்களையும் பூர்ஷ்சுவாப் பிற்போக்கின் கைக்கருவிகளாக, சுரண்டலைப் பாதுகாப்பதற்கும், தொழிலாளி வர்க்கத்தை வெறி மயக்கமுறச் செய்வதற்குமான கருவிகளாகவே மார்க்சியம் எப்போதும் கருதியது”*

*—மதத்தைப் பற்றித் தொழிலாளர் கட்சியின் அணுகுமுறை*

மதம் என்பதை, தொழிலாளி வர்க்கத்தை வெறி மயக்கமுறச் செய்வதற்கான பிற்போக்கின் கருவியாகவே மார்க்சியம் எப்போதும் கருதுகிறது என்று தெளிவான முடிவான முடிவாக லெனின் கூறியிருக்கிறார்.

மாக்சிம் கார்க்கியினுடைய கடவுளை நிர்மாணித்தல் என்ற கருத்திற்குப் பதிலாக லெனின் “கடவுள் என்பது சிக்கல் நிறைந்த கருத்து என்பதும் அது தான் சமூக உணர்வுகளை விழிப்படையச்செய்து உருவாக்குகின்றது என்பது



படிப்பகம்

www.padippakam.com

உண்மையல்ல. அது போக்தனோவின் கருத்துமுதல்வாதம். அது எண்ணங்களின் பௌதிக மூலாதாரத்தை ஒடுக்குகிறது'' என்று அவருக்குக் பதில் கடிதம் எழுதுகிறார்.

லெனின் கார்க்கிக்கு, ''கடவுள் கருத்தை அழகுபடுத்துவதன் மூலம் படிப்பு வாசனை இல்லாத தொழிலாளிகளையும் விவசாயிகளையும் அடிமைத் தளைகளில் பிணைத்து வைத்துள்ள சங்கிலிகளை அழகுபடுத்தியுள்ளீர்கள்'' என்று எழுதியிருக்கிறார்.

மேலும் கூறுகிறார், எந்தவித மதக்கருத்தும், கடவுள் கருத்தும் (நோய்) தொற்றை (infection) விட ஆபத்தான அருவறுக்கத் தக்கதாகும் என்று எழுதியிருக்கிறார்:-

*''எந்த மதக்கருத்தும், எந்தவிதக் கடவுள் பற்றிய எந்த விதமான கருத்தும், கடவுளைப் பற்றிய லேசான கண் சிமிட்டலும்கூட ஒரு சொல்ல முடியாத அளவிலான அருவறுக்கத் தக்க பொருளாகும். குறிப்பிட்ட வகையில் பொறுத்துக் கொள்ளக் கூடிய வகையில் (சில சமயங்களில் சாதகமான முறையில்) ஜனநாயக பூர்சுவாக்களால் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. அந்த ஒரு காரணத்திற்காகவே இது மிகவும் ஆபத்தான ஓர் அருவறுக்கத்தக்க பொருளாக, மிகவும் வெட்கக்கேடான ஒரு (நோய்) ''தொற்று'' (infection) இருக்கின்றது. ஒரு கோடி நேரடியான பாவங்கள், அசிங்கமான சூழ்ச்சிகள், வன்முறைச் செயல்கள், (நோய்) தொற்று (infections) மக்களால் ஓரளவு சுலபமாகக் கண்டு பிடிக்கப்படுகின்றன. எனவே அவை மிகவும் கவர்ச்சிகரமான ''சித்தாந்த'' ஆடை அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட கடவுளைப் பற்றிய சூட்சுமமான ஆன்மீகக் கருத்துக்களைக் காட்டிலும் மிகவும் குறைவான ஆபத்து களைக் கொண்டதேயாகும்.''*

*—1913 நவம்பர் (கடிதம்)*

எந்த மதக் கருத்தும், கடவுள் பற்றிய லேசான கண் சிமிட்டலும்கூட, அளவிலாத அருவருக்கத் தக்கதாகும் என்கிறார் லெனின். கடவுள் பற்றிய சிறு கருத்தும் ஜனநாயக பூர்சுவாக்களால் ஒப்புக் கொள்ளப்படுகிறது என்ற ஒரே காரணத்துக்காகவே இது மிகவும் ஆபத்தானதாகி விடுகிறது. அத்தோடு வெட்கக்கேடான (நோய்) தொற்று இருக்கிறது. (நோய்) தொற்று மக்களால் சுலபத்தில் கண்டுகொள்ள முடிகிறது. மிகவும் கவர்ச்சிகரமான சித்தாந்த ஆடையணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட மதம், கடவுள் பற்றிய கருத்துகளைவிட (நோய்) தொற்று குறைந்த ஆபத்தைக் கொண்டதாக இருக்கிறது.

மதத்தில் உள்ள நல்ல தன்மைகள் ஏதுமில்லையா? எதுவும் கண்ணில் படவில்லையா? என்று கேட்பவர்களின் கருத்து, உண்மையில் மதத்தைக் கண்டு பயந்து சாகிறவர்களின் கூற்றாகவே இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

லெனின் கூறுகிறார் :-

*"அராஜகவாதிகள் வறட்டுத் தனமான, அருவமான, பேச்சளவிலான, ஆனால் உண்மையில் வெத்துவேட்டுப் "புரட்சி"க் கூச்சல்களுக்கோ, குட்டி பூர்ஷ்வாக்கள் அல்லது மிதவாதப் படிப்பாளிகள் மதத்திற்கு எதிரான போராட்டத்தைக் கண்டு பயந்து சாகிறார்கள். இது தன்னுடைய கடமை என்பதை மறந்து விடுகிறார்கள். கடவுள் நம்பிக்கையுடன் சமரசப்படுத்திக் கொள்கிறார்கள். வர்க்கப் போராட்டத்தின் நலவுரிமைகளை வழிகாட்டியாகக் கொள்ளவில்லை. ஆனால் யார் மனதும் புண்பட்டுவிடக் கூடாது, யாரையும் வெறுத்து ஒதுக்கக் கூடாது, யாரையும் பயமுறுத்தி விரட்டக் கூடாது "வாழு, வாழவிடு" என்னும் சாமியார்களின் மந்திரத்தைக் கூறுவது போன்ற மிகக் குறுகிய மனப் போக்குடன் நடந்து கொள்ளும் இந்த நபர்களுக்கு மார்க்சிய வாதிகள் இடமளித்துவிடக் கூடாது"*

*—மதத்தைப் பற்றித் தொழிலாளர் கட்சியின் அணுகுமுறை*

இவ்வாறு மார்க்சிய முதலாசிரியர்கள் பொருள்முதல்வாதத்தை மிகுந்த மனத்திண்மையோடு ஆதரித்துப் பாதுகாத்தனர். இந்திய கம்யூனிஸ்டுகளும், இந்தியப் பாட்டாளிகளும் அவ்வழியைப் பின்பற்றி ஆதரித்துப் பாதுகாத்துச் செயல்பட வேண்டும்.

சமூகத்திலுள்ள வர்க்கத்தின் மறைவோடு மதத்தின் இருப்பிற்கான தேவையும் மறைந்து, மதம் உலர்ந்துவிடும். அதுவரை மதம் வர்க்கத் தன்மையோடே செயல்படும். கம்யூனிஸ்ட் கட்சி வர்க்கப் போராட்டத்துக்கு உள்ளடங்கிய வகையில் மததைத் எதிர்த்துப் போராடி, மத மாய்மாலத்திலிருந்து மக்களை விடுக்கும்.



படிப்பகம்

# 4. இந்து மதத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

இந்து மதம் என்று அழைக்கப்படுகிற மதத்திற்குத் தொடக்க காலத்தி லிருந்து இப்பெயர் பெற்று வழங்கிவரவில்லை. இடையில் பிற நாட்டவர்களால் வழங்கப்பட்டதாகும். பாரசீகர்களால் சிந்து நதிக்கு அப்புறம் வாழ் மக்களை இந்துக்கள் என்று வழங்கினர், பாரசீகர்கள் 'சி' என்ற எழுத்தை 'இ' என்று உச்சரிப்பர். அதன்படி இந்துக்கள் என்றனர். பிறகு சிந்துக்கு அப்புறம் உள்ள இடங்களை இந்துஸ்தான் என்று வழங்கி வரலாயினர்.

எது இந்து மதம், யார் இந்து என்ற கேள்விக்குத் தெளிவான ஒரேமாதிரி யான அதாவது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளும்படியான பதிலை அளிப்பது என்பது எளிதான செயல் அல்ல. இதற்குக் காரணம் இந்து மதம் முழுமையான நிறுவனப்படுத்தப்படவில்லை, ஆனால் இதனை நிறுவனப்படுத்தப்பட்ட மதமாகக் கருத முடியாது என்று பொருள்கொள்ள முடியாது. முழுமையாக நிறுவனப்படுத்தவில்லை என்றுதான் கூறமுடியும்.

குறிப்பாக சைவம், வைணவம் என்ற இரண்டையும் உள்ளடக்கியதே நிறுவனப்படுத்தப்பட்ட இந்து மதத்தில் பெரும் பிரிவாக ஏற்றுக் கொள்ளப்படு கிறது. இதில் நாட்டுப்புற கடவுளும் அவர்களுக்கான வழிபாட்டு முறைகளும் இந்து மதமாக இணைத்துக் கூறப்பட்டாலும், நாட்டுப்புற மதக் கருத்துக் களையோ, கடவுள்களையோ இந்து மதம் அங்கீகரித்ததாகச் சொல்ல முடியாது.

இந்து மதத்திற்கு என்று குறிப்பிட்ட நூல்களை மக்கள் பின்பற்று கிறார்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும், இந்து மதத்திற்குக் குறிப்பிடும் படியான மதநூல்கள் பல்லாயிரம் இருக்கின்றன. அவற்றில் நாட்டுப்புற வழிப்பாட்டு முறைகள், கடவுள்கள் பற்றிய விவரிப்பு ஏதும் கிடையாது, சிறுதெய்வ வழிபாடு என்று அவற்றின் வழிமுறைகளை ஏளனப்படுத்தும் படியான கருத்துகளையே நிறுவனப்படுத்திய இந்து மதங்களின் கண்ணோட்ட மாகப் பார்க்க முடிகிறது.

இந்தியாவில் இன்று வணங்கப்படும் நாட்டுப்புற வழிபாடுகளிலும், வேத காலத்திற்கு முந்திய குறிப்பாக சிந்துவெளி மக்களால் பின்பற்றப்பட்ட தாய்தெய்வ வழிபாடுகளிலும் இந்து மதத் தொடக்கக் கூறுகளை காண முடிகிறது. இன்றைய இந்து மத சிலை வழிபாட்டுடன், ஆரியர்களின் வருகைக்கு முன்பாக இங்கிருந்த வட்டார மக்களின் வழிபாட்டு முறைகளில் காணப்பட்ட தாய்த்தெய்வ வழிபாட்டுடன் இணைத்துப் பார்க்க முடியும். வேத கால மக்கள் தங்களது வேண்டுதல்களை அக்கினி வளர்த்து வெளிப் படுத்தினர். அதனால்தான் அக்கினியைத் தேவர்களின் புரோகிதர் என்று வேத

கவிகள் புகழ்ந்தனர். வேதமுறைக்கு மாறான வட்டார மக்கள் சிலை வழிபாட்டை கடைப்பிடித்தனர்.

வேதங்களிலேயே மிகவும் பழைமைப் பகுதியான ரிக் வேத சங்கிதையில் முழுமை பெற்ற கடவுள்களைப் பார்க்க முடியாது. இயற்கையை உருவகப்படுத்திப் பார்த்தனர் அவ்வளவே, ஆனால் அந்தக் காலகட்டத்தில் வட்டார மக்கள் தாய்த் தெய்வ வழிபாடும், சிலை வழிபாட்டுமுறையையும் கடைப்பிடித்து வந்தனர். இந்தச் சிலைவழிபாட்டு முறைகளையே பின்னைய இந்து மதம் ஏற்றுக் கொண்டது.

இதனை முதலில் புரிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். அதாவது இன்றைய இந்து மதம் என்பது வேதத்தின் தொடர்ச்சி அல்ல. வேதத்தோடு, வட்டார மக்களின் சிலை வழிபாடும் இணைந்ததின் விளைவே என்பதை ஏற்றுக் கொண்டால் தான் இன்றைய வடிவிலான இந்து மதத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

தேவி பிரசாத் சட்டோபாத்தியாயா "***மதமும் சமூகமும்***" என்ற நூலில் எழுதுகிறார்:-

*"பிற்காலத்தில் இந்துமதம் என அழைக்கப்பட்டதில் இருந்து வந்த பல முக்கிய காரணிகள் தாய்த்தெய்வங்கள், சிவ வழிபாடு. சில சமயங்களில் பசுபதி (விலங்குகளின் கடவுள்) யாகவும், வேறு சில சமயங்களில் சாதாரண லிங்கக் குறியீடாகவும் இருப்பது, கடவுளை மிருகங்களாகப் பல வடிவங்களில் காண்பது போன்ற பல குறிப்பிடத்தக்க அளவுக்கு இடம் பெற்றிருந்ததாலும். இவை இந்து மதத்திற்கான முக்கிய அடிப்படைகளாக இருப்பினும் வேத நூல்களில் இவற்றுக்கான ஆதாரங்கள் ஏதுமில்லை. ஹரப்பாப் பகுதிகளை அகழ்வாய்வு செய்த பின்னரே, இவற்றுக்கு ஹரப்பா நாகரிகத்துடன் உண்மையான வேர்கள் இருந்ததையும், அது பிற்கால இந்தியர்களின் மத நம்பிக்கைகளிலும், மரபுகளிலும் ஓரளவுக்கு உயிர்வாழ்ந்து வந்ததையும் நம்மால் உணரமுடிகிறது"*

*—பக்கம் 49*

*"இறுதியில், வேதத்தின் மீது பெரும் மரியாதை இருந்தபோதிலும் இந்தியாவின் மத வரலாற்றில் வேதக் கடவுள்களுக்கு உண்மையில் ஏன் எவ்வித எதிர்காலமும் இல்லை என்ற மிகவும் சிக்கலான அம்சம் குறித்தும் விவாதிக்க முயல்வோம்.*

*.. நமது உணர்வில் உள்ள எத்தகைய மத உணர்வையும் அல்லது ஆன்மிக மதிப்பையும் அசல் ரிக் வேதத்தின் பழைமை வாய்ந்த பக்கங்களில் எந்த அளவுக்குக் காணமுடியும் என்பது உண்மையில் கேள்விக்குரியதாக உள்ளது"*

*—பக்கம் 95*

www.padippakam.com

கிராமங்களில் காலனியாக ஒதுக்கப்பட்டவர்கள் தமக்கென சில கடவுள்களை வழிபட்டனர், அவர்கள் மிகவும் பழைய வழிபாட்டு முறையைப் பின்பற்றி வந்தனர். எப்படி ஊருக்குள் அவர்களை அனுமதிக்கவில்லையோ, அதே போல், மாற்றம் பெற்றுவரும் மதத்தை அவர்களுக்கு அளிக்காமல் அல்லது அவர்கள் பின்பற்ற விடாமல், பழைய முறையையே கடைப்பிடிக்க வைத்தனர். நகரத்தில் உள்ள பெரிய கோயில்களில் கிராமங்களில் உள்ள ஆதிக்கசாதி மக்கள் மட்டுமே செல்ல அனுமதிக்கப்பட்டனர். பிற கிராம மக்களைக் கோயிலுக்குள் அனுமதிக்கவில்லை. கோயில் நுழைவுப் போராட்டம் இன்னும் தொடர்கிறது.

இன்று கிராமங்களில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக பழைய மத வழிபாட்டு முறைகள் மாற்றம் பெற்று, நிறுவனமான சைவ, வைணவ மதத்தை நோக்கி வருவதைப் பார்க்க முடிகிறது. சைவ வைணவ மதத்தவர்கள் இதனை புரிந்து கொண்டு, இந்தப் போக்குகளை உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

இந்து மதத்தவர்கள் என்று அழைக்கப்படுபவர் அனைவரும் அனைத்து இந்துக் கோயில்களுக்குள் செல்லவும், இந்து வழிபாட்டு முறையும் பின்பற்றவும் அனுமதிக்கப்பட வேண்டும். இந்து மதத்தவர்கள் அனைவருக்கும் சம உரிமை அளிக்கப்படுவது இந்து மதத்திற்கு இன்றைய தேவையாகிவிட்டது.

## மூவகை வேதாந்தம்

மேலை நாடுகளில் தத்துவஞானிகளும், மத அறிஞர்களும் தனித்தனியாக செயல்படுவது வெளிப்படையாகத் தெரிகிறது, இந்தியாவைப் பொருத்தளவில் இரண்டும் இணைந்து, பின்னிப்பிணைந்து உள்ளன. வேத சம்கிதையில் சடங்குகள் (கர்ம காண்டம்) மட்டுமே காணமுடிகிறது. பின்னால் தோன்றிய உபநிடதங்களின் (ஞான காண்டம்) சில பகுதியில் தத்துவஞானம் தனிப் போக்கில் செல்ல முயற்சித்துள்ளதைப் பார்க்க முடிகிறது. ஆனால் இந்து தத்துவஞான உலகில் அதன் போக்குத் தொடரவில்லை. பின்னால் வந்த தத்துவஞானிகளான சங்கரர், ராமாநுசர், மத்துவர் ஆகியோர் தத்துவ ஞானத்தையும், மதத்தையும் இணைத்தே கொண்டு சென்றனர்.

இந்து மதம் பல்வேறு தத்துவஞானப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றில் முதன்மையானவை என்று முதல் வரிசையில் வைத்து பேசப்படும் தத்துவப் பிரிவுக்கு மூவகை வேதாந்தம் என்று அழைக்கப்படுகிறது. இது துவைதம், விசிட்டாத்வைதம், அத்வைதம் என்ற மூன்று வேதாந்த கண்ணோட்டத்தை குறிப்பதாகும்.

மூன்று வேதாந்தத்திற்கும் ஆதார நூல்கள் ஒன்றாய் இருக்க, இதன் தத்துவ போக்குகள் மட்டும் எப்படி வேறுபடுகிறது என்பதை பார்ப்போம். வேதம், உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை ஆகிவற்றின் காலகட்டங்கள்



படிப்பகம்

www.padippakam.com

மிகவும் நீண்டநெடியதாகும். இதனுள் பல்வேறு கருத்துப்போக்கை பார்க்க முடிகிறது. ஆதார நூல்களில் காணப்படும் சில வாக்கியங்களை மகா வாக்கியங்களாகக் கொண்டு அதற்கு விளக்கம் அளிக்கும்போது, வேறுபட்டு வேதாந்த மதம் மூன்று வகையாகிறது.

உபநிடதங்களில் சில வாக்கியங்கள் சீவாத்மா வேறு பரமாத்மா வேறு என்று **'பேத' (வேறுபட்ட)** சுருதியாகவும், சீவாத்மாவும் பரமாத்மாவும் வேறாக இருந்தாலும், வேறானவற்றில் ஒன்றி அந்தர்யாமியாய் பரமாத்மா இருப்பதாக **'பேத அபேத' (வேறுபட்டும் வேறுபடாத)** சுருதியாகவும், சீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே என்று **'அபேத' (வேறுபாடற்ற)** சுருதியாகவும் அமைந்துள்ளது.

பேத சுருதியை வலியுறுத்தி துவைத வேதாந்தத்தை மத்துவரும், பேதஅபேத சுருதியை வலியுறுத்தி விசிட்டாத்வைத வேதாந்தத்தை ராமாநுசரும், அபேத சுருதியை வலியுறுத்தி அத்வைத வேதாந்தத்தை சங்கரரும் தத்தமது தத்துவஞானத்தையும் மதத்தையும் அமைத்தனர். இந்தக் கருத்துப் போக்குகள் இதற்கு முன்பு மத, தத்துவஞானத்தில் காணப்பட்டாலும் இதனை இம் மூவரும் மேம்படுத்தி விரிவாக்கி வளர்த்தனர்.

## அ. துவைத வைணவம்

மதத்தின் தோற்றம் அனைத்தும் துவைதமே. அதுமட்டுமல்ல உலகில் நடைமுறையிலுள்ள மதம் அனைத்தும் துவைத போக்கைக் கொண்டவையே.

இவ்வுலகைப் படைத்த கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் இயற்கையிலிருந்தும் மனிதனிடத்திலிருந்தும் வேறுபட்டவர். இவற்றில் இயற்கையும், மனிதனும் மாற்றத்திற்குட் பட்டவையாகும். கடவுள் மாற்றமேதும் அடையாமல், என்றும் நிலைத்திருப்பவர். இதுவே துவைதத்தின் அடிப்படைக் கருத்தாகும். இந்த இரட்டையை வலியுறுத்துவதனால் இம்மதச் சித்தாந்தத்துக்கு துவைதம் (இரண்டு-ரெட்டை) என்று அழைக்கப்படுகிறது.

கடவுள் சகுணமானவர், அதாவது குணங்களைப் பெற்றவர். அருள் மயமானவர், நியாயமானவர், சக்தி வாய்ந்தவர், சர்வ வல்லமை படைத்தவர். கடவுளிடம் அன்பு செலுத்தலாம், பிரார்த்தனை செய்யலாம். ஆனால் அவரது சக்தியை முழுமையாக அறிந்திட முடியாது. அவரே உலகை படைத்தவர். அவர் ஏன் படைத்தார் என்றால், அது அவரது லீலை, அதாவது விளையாட்டு. விளையாட்டு என்றால் மனிதன் விளையாடும் விளையாட்டைப் போன்றதல்ல. அவர் விளையாடுவது விருப்பு வெறுப்புக்கு உட்பட்டதல்ல. அவர் லீலை புரிவது, மனிதன் விளையாட்டில் இன்பம் அடைவதுபோல் தேவையின் பொருட்டல்ல. அவரது லீலையை மனித அறிவால் அறியமுடியாது. கட்டுண்டு கிடக்கும் மனிதன், கட்டற்ற ஆளுமை பெற்ற கடவுளின் சக்தியை முழுமையாக



படிப்பகம்

www.padippakam.com

அறிந்திட முடியாது. மனிதன் சீவாத்மா, கடவுள் பரமாத்மா. மனிதனின் அறிவு சிற்றறிவு, கடவுள் பேரறிவாளர்.

ஆத்மாவைப் பெற்ற மனிதன் (உயிர்), இயற்கையை உள்ளடக்கிய இப் பிரபஞ்சம், அனைத்தையும் ஆளும் கடவுள் ஆகிய முப்பொருள் உண்மையை ஏற்கிறது துவைதம்.

இதனைத் துவைதம் "ஸ்வரூபத்தைப்போல் காலம், ஆகாயம் நித்யமானவை. அகியவற்றைப் பரமாத்மாவால் அழிக்க முடியாதோ எனில், அவை நித்திய வஸ்துகளாக இருப்பதே பரமாத்மாவின் இச்சைப்படியே ஆகும். எனவே ஸ்வரூபம் நித்யமாயினும், அது பரமாத்மாவின் இச்சைக்கு உட்பட்டது. பரமாத்மாவின் சக்தியை யாராலும் ஏதும் செய்ய முடியாது." (**துவைத சித் தாந்த வைஜயந்தி.. பக்கம் 220**) என்கிறது. உயிரும், பிரபஞ்சமும் உள்பொருளே, ஆனால் பரமாத்மாவின் இச்சைக்கு உள்ளங்கியவையாக இருக்கிறது. அவற்றின் சுதந்திரம் பரமாத்மாவின் இச்சைக்கு உட்பட்டது.

> *"விஷ்ணுவின் எல்லா குணங்களும் ஸத்யமானவை. ஜீவனுக்கும் ஈஸனுக்கும் உள்ள பேதம் (வேற்றுமை) ஸத்யமானவை. ஜீவஜீவர்களுக் குள் உள்ள பரஸ்பர பேதமும் ஸத்யமானவை, இந்த ஜகத்தும் ஸத்யமானவை"*
>
> *—ஸ்ரீமன் மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் , அத்தியாயம்। -68, (பக்கம் 81)*

துவைதம் மனித உடலில் ஆத்மா உறைவதாகக் கூறுகிறது.

மனித உடல் கரைந்த பின்பு, மனிதனின் உயிர்ச்சக்திகள் மனத்திற்குச் செல்கிறது, மனம் பிராணனில் ஒடுங்குகிறது, பிராணன் ஆத்மாவில் ஒடுங்குகிறது என்பது ஆத்மாவைப் பற்றிய கருத்தாகும்.

கர்ம பூமியான, இங்கே மனிதன் கர்மங்களைச் செய்திட வேண்டும். அவ்வாறு கர்மங்கள் செய்திடும்போது புண்ணியத்தையும், பாவத்தையும் சேர்க்கின்றனர். புண்ணிய கர்மத்தால் சொர்க்கம் சென்று சொர்க்க போகத்தை அனுபவிக்கின்றனர். புண்ணியத்தின் பலன்களான போகத்தை சொர்கத்தில் கழிந்த பின்பு, முன்பு செய்த பாவங்களின் பலனால் மறுபடியும் பூமியில் பிறந்து கர்மங்களில் ஈடுபடுகின்றனர். பூமியில் செய்திடும் பாவங்களால் நரகம் சென்று பாவத்திற்கான தண்டனையை அனுபவிக் கின்றனர்.

கடந்த கால வினைகளால் நிகழ்காலம் தீர்மானிக்கப்படுகிறது. அதே போல் நிகழ்காலத்தால் எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது. பிறப்பிற்குப்பின் இறப்பு, இறப்பிற்குப் பின் பிறப்பு என்ற தொடர்ச்சியில் பாவ புண்ணியங்கள் சேர்ப்பதும், தீர்ப்பதும் தொடர்கிறது.



படிப்பகம்

இந்த வினைக் கோட்பாட்டால், மக்கள் பாவ, புண்ணியத்திற்குப் பயந்து அல்லது கட்டுப்பட்டு நடப்பதின்மூலம் சமூகத்தின் ஒழுங்கு நிலைநிறுத்தப் படுவதாக மதக் கண்ணோட்டம் கூறுகிறது. ஆனால் உண்மையில் இன்று சமூகத்தில் காணும் ஏற்றத்தாழ்வின் காரணமாக, பாதிக்கப்பட்டவர்கள் கிளர்ந்து எழாமல், நடைமுறையில் உள்ள சமூகத்துக்கு கட்டுப்பட்டு இருப்ப தற்கே, மதம் இவ்வகையான கருத்துக்களை நிலைநிறுத்துகிறது.

தீயவர்கள் மகிழ்வோடு வாழ்வதை சமூகத்தில் பார்க்க முடிகிறது. நல்லவர்கள் அல்லது தீயசெயலில் ஈடுபடாதவர் துன்பத்திலேயே மூழ்கி இருப்ப தையும் சமூகத்தில் பார்க்க முடிகிறது. இதற்குக் காரணம் என்ன? இதனை மாற்றுவது எப்படி? என்று கேட்கப்படும் கேள்விக்கு துவைதம் பொதுவாக இந்திய மதங்கள் அனைத்தும், அவரவர் முற்பிறவியில் செய்த வினைப் பயனே என்று காரணம் காட்டுகிறது. இன்று தீய செயல் செய்பவர்கள் தண்டிக்கப் படாமல், சுதந்திரமாக நடமாட முடிகிறதே? என்ற கேள்விக்கு, அடுத்த பிறவியில் கண்டிப்பாக இதற்குத் தண்டனை கிடைக்கும் என்று பதில் அளிக்கப்படுகிறது. நடைமுறையில் உள்ள சமூகத்தில் செய்த செயற்பாட்டிற்கு அடுத்த பிறவியில் பதில் கிடைக்கும் என்பது இன்றை சமூகத்தை கட்டிக் காக்கும் முயற்சியே யாகும். இந்தப் போக்கு, இன்றைய சுரண்டல் சமூகத்தில் சுரண்டுபவருக்கு சாதகமாகவும், சுரண்டப்படுபவருக்கு பாதகமாகவும் இருக்கிறது.

இன்று வாழும் வாழ்க்கை அவரவர் செய்த வினைக்கு ஏற்ப கிடைத்தவை, அதனால் கிடைத்ததைக் கொண்டு, பொறுமையுடன் வாழ்ந்து சுயதர்மத்தை அதாவது பிறப்பால் உண்டான கடமையினை மனம் கோணாமல் செய்து - வினையைக் கழித்து- அடுத்த பிறவியில் நல்வாழ்வு கிட்டும் என்பதை வலியுறுத்துவதே இந்தக் கோட்பாட்டின் நோக்கமாகும்.

இன்று நல்லவர்கள் அல்லது உழைப்பவர்கள் பாடுபட்டும் வேதனைக்கு ஆளாவது முற்பிறவியின் பயன் என்றும், தீயவர்கள் அல்லது பாடுபடாதவர்கள் சிறப்பான வாழ்வு கிடைத்திருக்கிறது என்றால் அடுத்த பிறவியில் அவர் களுக்கு தக்க தண்டனை கிடைக்கும் என்கின்றனர்.

இன்றைய வாழ்வின் சிக்கலுக்கு முற்பிறவியை காரணம் காட்டுவதும், இதற்கான தீர்வை அடுத்தபிறவிக்கு கொண்டு செல்வதும், இன்றைய சமூகத்தை தக்கவைப்பதற்கேயாகும்.

> *"சாஸ்திரங்களில் கூறியுள்ளபடி, உனக்கு என்று விதிக்கப்பட்டுள்ள (சுயதர்ம) கடமைகளைச் செய், அவற்றின் பலன்களை எதிர்பார்த்து மாய்ந்து போகாதே. பகவானே அதற்கான பலன் அளிப்பான். அதை அனுபவி. தர்மங்களை புரியும்போதும், அதற்கான பலன்களை அனுபவிக்கும்போதும் பகவானுடைய நினைவோடு செய்."*
>
> —*ஸ்ரீ மத்வ தர்சனம் (சத்யா ஸ்ரீனிவாசன்)* பக்கம் 140

மதம் என்ற பெயரால் பல்வேறு சடங்குகளைச் செய்வதென்பது, தம் வாழ்வில் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்கேயாகும். இச் சடங்குகளில் பிரார்த்தனை என்பது முதன்மை பெற்றதாகும். வாழ்வில் துன்பங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கும் மக்கள் பிரார்த்தனையின் மூலம், அதாவது தங்களின் வினையால் உருவான, இந்தத் துன்பகரமான வாழ்வில் இருந்து வேண்டுதலின் மூலம் விடுதலை கிட்டும் என்று நம்புகின்றனர்.

மக்கள் வாழ்வில் சந்தித்த இன்பங்கள், கடவுள் தந்த வரம் அல்லது கடவுள் தந்த வாழ்வு என்கிறது மதம். ஆனால் துன்பத்தை மட்டும் அவரவர் பெற்றது என்று காலங்காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது.

இதுவரை மக்களுக்கு கிடைத்தவை பிரார்த்தனையின் மூலம் அல்ல என்று, துவைத மத வேண்டுதலை, அத்வைத மதவாதியான சுவாமி விவேகானந்தர் அவரது கண்ணோட்டத்தில் மறுக்கிறார்.

*"உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்வது, கற்பனைத் தெய்வங்களை நோக்கிப் பிரார்த்திப்பது என்று உங்கள் குறுகிய எண்ணங்களுள் பலவும் மூடநம்பிக்கைகளே என்பது உங்கள் உள்ளத்திற்கே தெரியும். உங்கள் பிரார்த்தனை நிறைவேறியது என்று ஒரு சம்பவத்தை எனக்குக் காட்டுங்கள் பார்க்கலாம். நீங்கள் பெறும் விடைகள் அனைத்தும் உங்கள் இதயங்களிலிருந்தே பிறந்தவை."*

*—ஞானதீபம் 4 - பக்கம் 233-234*

*".. இந்தக் கர்ம வலையை நாமே நம்மைச் சுற்றிப் பின்னியிருக்கிறோம். அறியாமை காரணமாக பந்தப்பட்டவர்களைப்போல் நம்மைக் கருதிக்கொண்டு உதவிக்காகக் கதறி அழுகிறோம். ஆனால் உதவி வெளியிலிருந்து வருவதில்லை. நமக்கு உள்ளிருந்தே வருகிறது. இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா கடவுள்களிடமும் கதறி அழுங்கள். நான் வருடக்கணக்காகக் கதறி அழுதேன். கடைசியில் உதவி வந்தது. ஆனால் அது எனக்கு உள்ளிருந்துதான் வந்தது. நான் செய்த தவற்றை விலக்க வேண்டியதாயிற்று. இதுதான் ஒரே வழி."*

*—ஞானதீபம் 4 - பக்கம் 295-296*

## அத்வைதத்துக்கு எதிராக மத்துவரின் துவைதம்

மத்துவர் சிறப்பாகத் தமது துவைத மதச் சித்தாந்தத்தை நிலைநிறுத்தியுள்ளார். பொதுவாக இந்திய சித்தாந்தத்தை விளக்கும் அனைத்து அறிஞர்களுமே துவைதத்தை விரிவாக விளக்குவதில்லை. துவைத சித்தாந்தம் மிகவும் எளிமையானது. புரிந்து கொள்வதற்கு சிரமம் ஏதுமில்லை, விரிவான விளக்கம் தேவையில்லை என்று கருதுவதாகத் தெரிகிறது. ஆனால் மத்துவர்



படிப்பகம்

www.padippakam.com

தமது சித்தாந்தத்தை நிலைநிறுத்த, அத்வைதம் கூறும் உலகம் மாயை என்பதை மிகச் சிறப்பாக மறுத்து நிறுவியுள்ளார்.

பிற்கால பவுத்தர்கள் (மாத்யமிகர்கள்) என்று கூறப்படுகின்ற சூனிய வாதிகளின் கருத்தும், ஆதிசங்கரரின் அத்வைதக் கருத்தும் நெருங்கிய ஒன்றாக துவைதிகள் பார்க்கின்றனர்.

மாத்யமிகர்கள் வேதங்களையும், ஆகமங்களையும் மறுக்கும் புத்தமதப் பிரிவினர் ஆவர்.

சூன்யம் என்ற ஒரே தத்துவம்தான் உண்டு என்பது இவர்களது கொள்கை. இதனை இவர்கள் வெளிப்படையாக உரைப்பர். ஆனால் வெளிப்படையாகக் காண்பித்துக்கொள்ளாமல் உள்ளுக்குள் மறைத்து வைத்திருப்பவர்கள் மாயாவாதிகள் (அத்வைதிகள்) என்கின்றனர் துவைதிகள்.

பவுத்தர்களுக்கும், மாயாவாதிகளுக்கும் இடையே சிறிதளவு கூட வேறுபாடு இல்லை. எதைப் பவுத்தர்கள் சூன்யம் என்று கூறுகிறார்களோ, அதையே மாயாவாதிகள் (அத்வைதிகள்) குணமில்லாத (நிர்குண) பிரம்மம் என்று கூறுகிறார்கள். பவுத்தர்கள், சூனியத்திற்கு உருவம் இல்லை என்றும் மாறுதல் அடையாது என்றும் கூறுவர். இதனையே மாயாவாதிகள் குணங்களற்ற பிரம்மம் என்று கூறுகிறார்கள்.

மாயாவாதிகளுக்கும், சூன்யவாதிகளுக்கும் இடையே எந்த விதமான வேறுபாடும் கிடையாது, ஆதலால் மாயாவாதிகளை (அத்வைதிகள்) மாறுவேடம் பூண்ட பவுத்தர்கள் (பிரசன்ன பவுத்தர்கள்) என்று துவைதிகள் அழைக் கின்றனர்.

மேலும் பவுத்தர்கள் பானை செய்வதற்கு குயவன் இருப்பது போல், உலகத்திற்கு இந்த சூன்யம் காரணம் ஆகாது. யாரோ ஒருவருடைய அறியாமையால் உலகம் உண்டாக்கப்பட்டது. அதுதான் காரணம்.

சூன்யம் என்பது வார்த்தைகளால் விளக்கப்பட முடியாத ஒன்று. மாயத் தோற்றத்தால் போர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது இல்லாத ஒரு பொருளை இருப்பதாக கருதுவது இந்த மாயத் தோற்றம். சூன்யம் அறியாமையால் மறைக்கப்பட்டிருக்கிறது.

உதாரணமாக, சூரிய ஒளியின் காரணமாக சிப்பி வெள்ளிபோலத் தோன்றுவது மாதிரி, இருள் காரணமாக, கயிறு பாம்புபோல தோன்றுவது மாதிரி, அறியாமை காரணமாகப் பிரம்மம் (சூன்யம்) உலகம்போல் தோன்றுகிறது.

இதற்கு மறுப்பாக துவைதம் தமது வாதத்தை வைக்கிறது. கயிறு, பாம்புபோலக் காணப்பட்டால், பாம்பு என்ற ஒரு பொருள் உண்மையாகவே இருக்கவேண்டும். குழந்தை பாம்பைப் பார்த்திராததால், பயமின்றி கயிறைத்



படிப்பகம்

www.padippakam.com

தொடுகிறது. ஆனால் பாம்பை பார்த்த பெரியவர்கள், கயிறைத் தொடுவதற்குப் பயப்படுகின்றனர்.

சூன்யவாதத்திற்கும் மாயாவாதத்திற்கும் இடையே எந்த விதமான வேறுபாடும் இல்லை. சூன்யவாதம் முதலில் தோன்றியது. எனவே சூன்ய வாதத்திற்கான கண்டனமே, மாயாவாதத்திற்கும் உரியதாகிறது என்கின்றனர் துவைதிகள்.

தனிப்பட்ட முறையில் மாயாவாதத்தை கண்டிக்கும் முகமாக துவைதிகள் கூறுவதைப் பார்ப்போம். பிரம்மத்திற்கு இருத்தல் உண்டு என்பதை ஒப்புக் கொண்டால் பிரம்மத்துக்கு குணங்கள் இல்லை (நிர்குண) என்ற மாயாவாதி களின் வாதம் பொய்யாகிறது. மாயாவாதிகளின் வாதம் தோற்றுப்போகிறது. பிரம்மம் 'அசத்' (இல்லாமல் இருப்பது) என்பதை ஒப்புக்கொண்டால், அங்கும் மாயாவாதிகள் மண்ணைக் கவ்வுகின்றனர். 'அசத்' என்றால் சூன்யம். ஒரு பொருள் இருக்க வேண்டும் அல்லது இல்லாமல் இருக்கவேண்டும். இதை விடுத்து வேறு வழியில்லை. 'சத்' என்றால் பிரம்மனின் நிர்விசேஷத்வம் அடிப்பட்டு போகிறது. 'அசத்' என்றால் பிரம்மம் இல்லை என்றாகிறது. இரண்டு வழிகளிலும் மாயாவாதிகளுடைய வாதம் தோற்றுப்போகிறது.

மேலும் மத்துவர் கூறுகிறார், ஆகாயத்தில் மரம் இல்லை. செடி, கொடிகள் இல்லை. அப்படியிருக்கும்போது, ஆகாயத்தில் ஒரு அழகிய புஷ்பம் இருக் கின்றது என்று ஒருவன் சொன்னால், அதே நிலைதான் மாயாவாதிகளுக்கும். ஏனென்றால் அந்த புஷ்பம் எப்படியிருக்கும் என்று கேட்டால் விடை கிடைக் காது. அதே மாதிரி மாயாவாதிகளின் பிரம்மம் என்பது அசத் இவற்றுக்கு எந்தவிதமான குணங்களும் இல்லை. அப்படிப்பட்ட பிரம்மம் அவர் களின் யூகத்திற்கு ஏற்றவாறே அமையும் என்பதே துவைதிகளின் கருத்தாகும்.

இதுவரை பார்வையிட்ட பகுதிகள் **"ஸ்ரீஸுமத்வ விஜய மஹா காவ்யம்"** என்ற நூலின் பதினைந்தாம் சர்க்கத்திலிருந்து எடுத்தாளப் பட்டுள்ளது.

## ஆ. விசிஷ்டாத்வைத வைணவம்

ராமாநுசர் தமது வைணவ மதத்தின் தத்துவப் போக்கை விசிஷ்டாத் வைதம் என்று அழைக்கிறார். இதற்குச் சிறப்புப் பொருந்திய அத்வைதம் என்று பொருள்கொள்கின்றனர். ஆனால் இதனைச் சிறப்புப் பொருந்திய துவைதம் என்று அழைப்பதே பொருத்தமானதாகும்.

பரம்பொருளைத் தத்துவமசி என்று அகத்தில் வைத்துப் பார்ப்பது அகநிலைக் கருத்துமுதல்வாதம். பரம்பொருளைத் தமக்கு வேறான புறத்தில் வைத்து பார்ப்பது புறநிலைக் கருத்துமுதல்வாதம். பரம்பொருள் புறத்தில்தான் இருக்கிறது என்கிறார் ராமாநுசர், மேலும் அந்தர்யாமியாய் அனைத்திலும்



படிப்பகம்

www.padippakam.com

உறைகிறார் என்றும் குறிப்பிடுகிறார். அந்தர்யாமியாய் இருக்கும் பரம்பொருள் சாட்சியாகத்தான உள்ளார். எந்தச் செயற்பாட்டிற்கும் அந்தர்யாமியாய் இருக்கும் பரம்பொருள் பொறுப்பாக மாட்டார்.

புறநிலைக் கருத்துமுதல்வாதமான துவைதம் புறத்தில் உள்ள பரம் பொருளின் ஆற்றலை அறிந்திட முடியாது. அதன் லீலையைப் புரிந்து கொள்ள முடியாது. நமது சிந்தனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது. பரம்பொருளின் ஆற்றலை அளந்தறிய முடியாது என்கிறது. விசிஷ்டாத்வைதம் பரம்பொருள் வேறு, ஆத்மா வேறு முக்தி பெற்ற ஆத்மாவும் வைகுண்டத்தில் பெருமாளுக்குக் கைங்கரியம் செய்திடுவதே பணியாகும் என்று பரமாத்மாவையும் ஜீவாத்மாவையும் வேறுபடுத்தியே பார்க்கிறது.

தத்துவ அடிப்படையில் துவைதமும் விசிஷ்டாதவைதமும் ஒன்றானாலும், வழிபாட்டில் பக்தியைவிட பரபக்தியை விசிஷ்டாத்வைதம் ஏற்கிறது. பக்தி என்பது முக்தியடையும் வரை கடைப்பிடிக்க வேண்டியதாகும்.

பலன்கிடைக்க நெடுங்காலமாகும் என்பதாலும், அதனைப் பின்பற்றுவது கடினமானது என்பதாலும் பரபக்தியையே நாடுகின்றனர். பரபக்தி என்பது சரணாகதி அடைதலாகும். பரமாத்மாவிடம் ஜீவாத்மா முழுமையாகச் சரணடைவதையே இது குறிப்பிடுகிறது. துவைதமும் சரணடைதல் பற்றிக் கூறினாலும், இதனை முதன்மைப்படுத்திச் சிறப்பித்து கூறுவது விசிஷ்டாத்வைதமே.

ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வேறுவேறு என்பது மட்டுமல்லாது, பரமாத்மா விடம் ஜீவாத்மா சரணடைவதே சிறந்ததாகக் குறிப்பிடுவதால், விசிஷ்டாத் வைதத்தைச் சிறப்புப் பொருந்திய துவைதம் என்றழைப்பதே பொருத்தமான தாகும்.

சித்து, அசித்து, ஈஸ்வரன் என்ற மூன்று உண்மைப் பொருளை துவைதம் போன்றே விசிஷ்டாத்வைதமும் ஏற்கிறது.

சித்து உயிர்களின் தொகுதியையும். அசித்து என்பது உயிரற்ற பொருட் தொகுதியையும், ஈஸ்வரன் என்பது பரம்பொருளையும் குறிக்கிறது.

*".. எம்பெருமான், அவரவர்க்கு ஏற்ற வகையில் அருள்புரிந்து காப்பதை இயல்பாகக் கொண்டவன். உடலையே ஆன்மாவாகக் கருதி, அதன்மீது விருப்பம் கொண்டு வாழும் மக்களும், அவனைச் சரண் அடைந்தால், பகை, பிணி முதலியவற்றை நீக்கி, அவரவர்கள் வேண்டிய, உண்டி, உடை போன்ற உலகியல் இன்பங்களையும் அருள்வான். முக்தியில் விருப்பமுடைய முமுட்சுக்களுக்கு உலகத் தொடர்பை நீக்கி, பரமபதத்தை அளிப்பவன் இவன்"*

*—வைணவம் தந்த வளம், பக்கம் 122 டாக்டர்.ஆ.இராமபத்திரன்*



படிப்பகம்

அவரவர்க்கு ஏற்ற வகையில் அருள்புரிந்து காப்பதை இறைவன் இயல் பாய்க் கொண்டுள்ளான் என்றுரைப்பதின் மூலம், அந்தந்த மனிதனின் வினைக்கு ஏற்ப இவ்வுலக வாழ்க்கை அமைந்துள்ளது என்று விளக்குகிறது. இன்றைய உலகில் மக்கள் படும் துன்பங்களுக்கு மாற்றாக சுயதர்மத்தை ஒழுங்காகக் கடைபிடித்துப் பழைய வினையை நீக்கினால், அடுத்த பிறவியில் சிறந்த வாழ்வு கிட்டும் என்று வழிகாட்டுகிறது இத் தத்தவம்.

துவைதத்தைப் போல் இதுவும், உலகத்தை விளக்குகிறதே தவிர மாற்ற முயலவில்லை.

## இ. அத்வைதம்

துவைதம் பதிலளிக்க முடியாமல் தவிக்கும் இடத்திலிருந்து அத்வைதம் தொடங்குகிறது. இறைவனின் படைப்பில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பது ஏன்? மனிதர்களில் சிலர் பிறக்கும்போதே செல்வந்தர்களாகவும், சிலர் ஏழையர் களாகவும் இருப்பது ஏன்? இதற்குப் பதில் அளிப்பதில் உண்டான சங்கடத்தை நீக்குவதற்குத் தோற்றம் பெற்றவையே அத்வைதம் என்ற தத்துவப் போக்காகும்.

இதனை சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

> *“இந்தப் பிரம்மம் என்பது என்ன? அவர் என்றும் இருப்பவர், என்றும் தூய்மையானவர், என்றும் விழிப்போடு இருப்பவர், எல்லா ஆற்றலும் கொண்டவர், எல்லாம் அறிந்தவர், கருணைமயமானவர், எங்கும் நிறைந் தவர், உருவமற்றவர், பிரிவு இல்லாதவர். அவர் இந்தப் பிரபஞ்சத்தைப் படைக்கிறார்.*
>
> *அவர் எப்போதும் படைத்துக் கொண்டும் காத்துக் கொண்டும் இருப் பதாகச் சொன்னால் இரண்டு சங்கடங்கள் எழுகின்றன. நாம் இந்தப் பிரபஞ் சத்தில் ஏற்றத்தாழ்வுகளைப் பார்க்கிறோம். ஒரு மனிதன் பிறந்த திலிருந்தே மகிழ்ச்சியாக இருக்கிறான், மற்றொருவன் துயருறுகிறான். ஒருவன் பணக்காரனாக இருக்கிறான், மற்றொருவன் ஏழையாக இருக்கிறான். இது ஓரவஞ்சனையையே காட்டுகிறது. அதோடு, படைப் பில் கொடூரம் இருக்கிறது. வாழ்க்கையின் நியதியே மரணமாக அல்லவா உள்ளது. ஒரு மிருகம் மற்றொரு மிருகத்தை நார்நாராகக் கிழிக்கிறது. ஒவ்வொருவனும் தன் சொந்தச் சகோதரனிடமிருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு பறித்துக் கொள்ள முயல்கிறான். இந்தப் போட்டி, கொடூரம், பயங்கரம், ஏக்கப் பெருமூச்சுகள் எல்லாம் இரவும் பகலும் இதயங்களைக் கிழித்துக் கொண்டே இருக்கின்றன. இதுதான் நமது உலகத்தின் நிலைமை. இது கடவுளின் படைப்பு என்றால், அந்தக் கடவுள் கொடூரத்தைவிட மோசமானவர், மனிதனால் கற்பனை செய்ய முடிவதைவிட மிகவும் பயங்கரமான பிசாசு அவர்.*

*ஆனால் இங்கே ஓரவஞ்சனை இருக்கிறது என்றால், போட்டி நிலவுகிறது என்றால் தவறு கடவுள் மீது இல்லை என்கிறது வேதாந்தம். அப்படி என்றால் இவற்றை உண்டாக்குவது யார்? நாமே. மேகம் எல்லா நிலங்களின் மீதும் சமமாகவே மழையைப் பொழிகிறது. ஆனால் நன்றாக உழுது பண்படுத்தப்பட்ட நிலம் மட்டுமே அந்த மழையால் பயன் பெறுகிறது. பண்படுத்தப்படாத நிலமோ, நல்ல முறையில் கவனம் செலுத்தப்படாத நிலமோ மழையின் எந்தப் பலனையும் பெற முடியாது. அது மேகத்தின் குற்றம் அல்ல. அதுபோல் கடவுளின் கருணை நிரந்தரமானது, மாறாதது. நாம்தான் வேற்றுமைகளை உண்டாக்கு கிறோம். ஆனால் பிறந்ததிலிருந்தே சிலர் மகிழ்ச்சியோடு இருப்பதையும், சிலர் துன்பத்தில் வாடுவதையும் எப்படி விளக்குவது? இந்த வேற்றுமையை உண்டாக்க அவர்கள் எதுவும் செய்யவில்லை, இந்தப் பிறவியில் ஒன்றும் செய்யவில்லை. சென்ற பிறவியில் செய்தவை இந்தப் பிறவியின் நிலைமைக்கான காரணங்கள் என்பதே வேற்றுமைகளின் விளக்கம்"*

—*ஞானதீபம் 5 , பக்கம் 26-27*

பண்பட்ட நிலத்தில் பொழிந்த மழையால் விளைச்சலுக்கும், பண்படாத நிலத்தில் பொழிந்த மழையால் பயன் ஏதும் கிட்டாததற்கும், மழையைக் குற்றம் சாட்ட முடியாததைப் போலவே, சிலர் செல்வந்தர்களாகவும், பலர் ஏழைகளாகவும் சமூகத்தில் காணப்படுவதற்குக் கடவுளின் கருணையை குற்றம்சாட்டக் கூடாது. கடவுளின் கருணை நிரந்தரமானது, மாறாதது என்று சுவாமி விவே கானந்தர் விளக்கம் கொடுக்கிறார். அது மட்டுமல்லாது, சமூகத்தில் காணும் ஏற்றத் தாழ்வுக்கு அவரவரே காரணம். செல்வம் கிடைத்திருக்கிறது என்றால், அவர் பண்பட்ட நிலத்திற்கு ஒப்பாவார், ஏழையாக இருப்பதற்கு அவன் பண்படாததே காரணம் என்று சொல்வதின் மூலம், செல்வந்தர்களுக்குக் கிடைத்த சொத்திற்கு ஆன்மீக அங்கீகாரம் அளித்திடுகிறது, இந்த அத்வைதக் கூற்று. மேலும் இதற்கு முற்பிறவியில் செய்த வினையே இந்தப் பிறவியின் நிலைமைகளுக்கு காரணமாகக் காட்டுவதன்மூலமும் சமூகத்தில் சுரண்டுபவர்களுக்கும் சுரண்டப்படுவர்களுக்கும் காணப்படுவது முற்பிறவியின் அடிப்படையில் என்று சுட்டுவதின் மூலமும் சுரண்டல் சமூகத்தை அங்கீகரிக் கிறது. இதனைப் புரிந்து கொண்டு அத்வைத தத்துவத்தை ஆராயும் போது அதன் வர்க்கச் சார்பு முழுவதும் வெளிப்பட்டுவிடுகிறது.

அத்வைதம் தனித்த மதக்கருத்து எதையும் கொண்டிருக்கவில்லை, அது தத்துவக் கண்ணோட்டத்தையே பெற்றிருக்கிறது. அத்வைதத்திற்கு மதச சடங்குகள் என்று ஏதும் கிடையாது. ஆனால் அத்வைதம் என்பதை எடுத்த யெடுப்பிலேயே அடைந்திடக் கூடியதாக கூறப்படவில்லை, அது படிநிலை வளர்ச்சியில் அடையக்க கூடியது. இந்த வளர்ச்சியில் துவைதம் முதல்படி,

www.padippakam.com

விசிட்டாத்வைதம் இடைப்படி, அத்வைதம் இறுதிநிலை என்பதே சுவாமி விவேகானந்தர் போன்றோர்களின் கருத்து. சமூகத்தில் மதத்தின் படிநிலை வளர்ச்சியும் இந்த வழியில் வந்தடைந்துள்ளது என்பது மெய்யே.

*".. சாதகன் துவைதத்தில் ஆரம்பிக்க வேண்டும். அதாவது நன்மை எல்லாம் இறைவனால் செய்யப்படுகின்றன, தீமையைச் செய்பவன் நான் என்று கொள்ள வேண்டும். மனத்தைத் தூய்மைப்படுத்த இதுவே எளிய வழி. அதனால்தான் வைணவரிடையே துவைதம் மிகவும் பின்பற்றப்படுகிறது. ஆரம்பத்திலேயே அத்வைதத்தைக் கைக்கொள்வது மிகவும் கடினம். துவைத நிலை படிப்படியாக அத்வைதத்திற்கு இட்டுச் செல்கிறது"*

*—ஞானதீபம் 6 - பக்கம் 314*

படிநிலை வளர்ச்சியாக ஏற்றுக் கொள்ளாததால், மூவகை வேதாந்தத்தின் விளக்க ஆசான்காளான மத்துவர், ராமாநுசர், ஆதிசங்கரர் ஆகியோர்களின் விளக்கத்தை சுவாமி விவேகானந்தர் விமர்சிக்கிறார்.

*"உபநிடதங்கள் மட்டுமே பிரமாணம் என்றுதான் ஒவ்வொருவரும் கருதினர். ஆனால் அவை ஒரே ஒரு விஷயத்தை, ஒரே ஒரு வழியை மட்டுமே காட்டுவதாக எண்ணினர். உபநிடதங்கள் அத்வைதத்தைத் தவிர வேறு எதையும் போதிக்கவில்லை என்று சங்கராச்சாரியார் எண்ணினார், தெளிவாகத் துவைதக் கருத்துப் பற்றிக் கூறும் வாக்கியங்களைத் திரித்துச் சிதைத்துத் தமது கோட்பாட்டிற்கு ஏற்ற பொருள் வருமாறு செய்தார். அதே போல்தான் ராமாநுசரும் மத்வரும் அத்வைதப் பகுதிகளைத் திரித்துக் கூறினர். உபநிடதங்கள் ஒன்றையே போதிக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் படிப்படியாக அந்த உண்மைக்குச் செல்வதையே அவை கூறுகின்றன."*

—ஞானதீபம் 5 , பக்கம் 404-405

பொதுவாக மக்கள் மதம் என்பதை வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கருதி வருகின்றனர். அதனால்தான் மதத்தை மார்க்கம், நெறிமுறை, வழிமுறை என்றெல்லாம் கூறிவருகின்றனர்.

அத்வைதம் காட்டும் வாழ்விற்கான வழிமுறை அல்லது விடுதலை என்ன என்பதைப் பார்ப்போம்.

*"உலக வாழ்வின் நிலையாமையைக் கண்ட பிறகு, அனுபவித்த பிறகு அதை விட்டுவிட வேண்டும். இதுதான் லட்சியம் என்பதை நாம் அறிவோம். பொருள்களால் அமைந்த போக வாழ்க்கை வெறுமையானது, வெற்றுச் சாம்பல் என்பதை இதய பூபூர்வமாக அறிந்தும் அதைவிட்டு விலகு. புலன்களை நோக்கிச் சுற்றிவரும் மனம் பின்னால் திரும்பிச் சுற்ற வேண்டும். பிரவிருத்தி "உலக வாழ்க்கை" நிறுத்தப்பட வேண்டும்,*



படிப்பகம்

www.padippakam.com

*நிவிருத்தி "ஆன்மீக வாழ்க்கை" துவக்கப்பட வேண்டும். இது தான் லட்சியம்".*

—*ஞான தீபம் 1, பக்கம் 76*

அத்வைதம் இவ்வாறு உலகில் இரண்டு வாழ்க்கை இருப்பதாகக் கூறுகிறது. இதில் ஒன்றைத் துறந்து மற்றதைத் தேர்ந்தெடுக்கும்படி கோருகிறது. அதாவது உலக வாழ்கையை நிறுத்திவிட்டு ஆன்மீக வாழ்க்கையைத் துவக்க வேண்டும் என்பதை லட்சியமாக காட்டுகிறது. இதற்கான விளக்கமாகவே அத்வைதம் தமது தத்துவக் கண்ணோட்டத்தை அமைத்துள்ளது.

இதன் அடிப்படையில்தான் சுவாமி விவேகானந்தர் கூறிய பசியைப் பற்றியும், கால்பந்து விளையாடுவது பற்றியும் புரிந்துகொள்ள வேண்டும்.

*"முதலில் நமது இளைஞர்கள் வலிமை பெற்றவர்களாக வேண்டும். மத உணர்ச்சி அதற்குப் பின்னரே வரும். என் வாலிப நண்பர்களே, வலிமை பெறுங்கள். இதுவே நான் உங்களுக்குக் கூறும் அறிவுரை. நீங்கள் கீதையைப் படிப்பதைவிட கால்பந்தாடுவதன்மூலம் சொர்க்கத்திற்கு மிக அருகில் செல்ல முடியும். இவை தைரியமான வார்த்தைகள். இருப்பினும் இவற்றை நான் சொல்லியாக வேண்டியிருக்கிறது. ஏனெனில் நான் உங்களை நேசிக்கிறேன்."*

—*ஞான தீபம் 5, பக்கம் 209*

*"பசியால் வாடும் மக்களிடம் மதப் பிரச்சாரம் செய்வது அவர்களை அவமதிப்பதாகும். பசியால் துடிப்பவனுக்குத் தத்துவ போதனை செய்வது அவனை அவமதிப்பதாகும்."*

—*ஞான தீபம் 1, பக்கம் 53*

*"பசிக்கே உணவில்லாத ஒரு நாட்டு மக்கள் மதத்தை எவ்வாறு கடைப்பிடிக்க முடியும்? போகங்களுக்காக ஆசைப்பட்டு, அதைச் சற்றும் திருப்திப்படுத்த முடியாத மக்களிடம் துறவு என்பதை எப்படி எதிர்பார்க்க முடியும்? எனவே முதலில் மனிதன் உண்ணவும் வாழ்வின் இன்பங்களைச் சற்று அனுபவிக்கவும் வழி செய்யுங்கள். அப்போதுதான் படிப்படியாக வைராக்கியம் வரும். அதன்பிறகே அவர்கள் ஆன்மீக வாழ்வில் ஈடுபட முடியும்."*

—*ஞான தீபம் 6, பக்கம் 283*

இந்தக் கால்பந்து விளையாட்டு, பசிப்பிணி போன்ற சுவாமி விவேகானந்தரின் கூற்றெல்லாம் வைராக்கியம் ஏற்பட வேண்டும் என்பதற்கேயாகும். ஆரோக்கியம் மற்றும் பசியைப் போக்குவதற்கு அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

உலக வாழ்வை அனுபவித்து படிப்படியாக வைராக்கியம் பெற்று, அதன் பிறகு ஆன்மீக வாழ்வில் ஈடுபட வேண்டும் என்கிறார் சுவாமி விவேகானந்தர். உணவிற்காக பாடுபடுவதையும், உண்பதையும் பற்றிய சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களைப் பார்க்கும் போது இதனை மேலும் புரிந்து கொள்ளலாம்.

*"..வெறும் உணவும் பணமும் உடையும்தான் கடவுள் என்று போதிக்கின்ற உங்கள் அளவுகோலைக் கொண்டுதான் ஒவ்வோர் உண்மையும் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று சொல்ல உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?*

*மதம் உணவை உட்கொண்டு உயிர் வாழ்வதில்லை. ஒரு வீட்டிலும் வசிப்பதில்லை. 'மதத்தினால் என்ன நன்மை? அது ஏழைகளின் வறுமையைப் போக்குமா? அவர்களுக்கு நிறைய ஆடைகள் கொடுக்குமா? என்று திரும்பத்திரும்ப மறுப்புகள் எழுப்பப்படுவதை நீங்கள் கேட்கிறீர்கள். அவற்றைச் செய்ய முடியவில்லை என்றால் அதனால் மதம் உண்மையல்ல என்று ஆகிவிடுமா?"*

*—ஞான தீபம் 4 , பக்கம் 315-316*

*"முட்டாள்கள்தான் புலனின்பங்களை நாடி ஓடுகிறார்கள். புலனின்பங்களில் உழல்வது எளிது. உண்பது, உறங்குவது என்ற பழைய பாதையிலேயே செல்வது எளிது. நவீனத் தத்துவவாதிகளின் கருத்து என்ன? புலன்களின் திருப்திக்குக் காரணமான கருத்துக்களைக் கூறி அதற்கு மதம் என்ற முத்திரை குத்துவதுதான். இது ஆபத்தானது. புலன்வழிச் செல்லும் வாழ்வில் மரணம்தான் இருக்கிறது. ஆன்ம நிலையில் நிலை பெற்று வாழ்வதே வாழ்க்கை. வேறு எந்தவிதமான வாழ்க்கையும் மரணமே. வாழ்க்கை முழுவதுமே ஓர் உடற்பயிற்சிக் கூடம் எனலாம். உண்மையான வாழ்வை அனுபவிக்க வேண்டுமானால் இதைக் கடந்து அப்பால் செல்ல வேண்டும்."*

*—ஞானதீபம் 1, பக்கம் 468*

உண்பதையும், உறங்குவதையும் தாண்டி, அதாவது புலன்வழிச் செல்லும் வாழ்வை விடுத்து மரணமற்ற ஆன்மீக வாழ்கைக்கு நம்மை அழைத்துச் செல்கிறார் சுவாமி விவேகானந்தர். புலன்களின் திருப்திக்கு மதம் வழிகாட்டும் என்பது ஆபத்தான கருத்தாகும் என்றும் கூறுகிறார்.

அத்வைதம் என்பது வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் செயல்படவில்லை. வாழ்க்கையை விளக்கவே செய்கிறது.

ஜீவன் முக்தி அடைய வேண்டுமென்றால் அத்வைத வழியில் செல்லலாம். வாழ்க்கைக்கு வழி வேண்டுமானால் அத்வைதத்தை விட்டு விலக வேண்டும். அதாவது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தத்துவத்தை தேர்ந்தெடுக்க வேண்டும், சமூகத்தை மாற்றுவதற்கான வழிகாட்டும் தத்துவத்தை நாடவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

உலக வெறுப்பையும், வாழ்க்கை வெறுப்பையும் ஊட்டி வைராக்கியம் பெற்று, ஆன்மீக பாதையில் செல்ல வேண்டும் என்று மக்களுக்கு முக்தியடைய வழிகாட்டுகிறது அத்வைதம்.

*"துன்பம் இல்லாத இன்பமோ, தீமை இல்லாத நன்மையோ ஒருபோதும் இருக்க முடியாது. வாழ்வு என்பது சமச்சீர் நிலையை இழந்த ஒரு நிலை. நாம் விரும்புவது முக்தியே தவிர வாழ்வு அல்ல. இன்பம் அல்ல, நன்மையும் அல்ல."*

*—ஞானதீபம் 2 ,பக்கம் 377*

*"இந்த உலகத்தை விரும்பாதே. எதை நீ விரும்புகிறாயோ அது உனக்குக் கிடைக்கும். இறைவனை, இறைவனை மட்டுமே நாடு. அதிகாரம் அதிகரிக்கப் பந்தமும் பயமும் அதிகரிக்கிறது"*

*—ஞானதீபம் 2, பக்கம் 439*

*"நன்மையை உலகில் ஏன் தேட வேண்டும்? அப்படி என்ன நன்மையைத் தான் உலகம் தந்துவிட முடியும்? சேற்றில் விளையாடும் குழந்தை களுக்குக் கிடைக்கின்ற சில கண்ணாடி மணிகளைப்போல் ஏதோ அற்பமான சிலவற்றைத்தான் அது நமக்குத்தர முடியும். அவற்றையும் நாம் இழக்கிறோம். மீண்டும் தேடுகிறோம்."*

*—ஞானதீபம் 2 பக்கம் 493*

*"ஒவ்வோர் இன்பத்திற்குப் பின்னரும் துன்பம் வருகிறது. அது விரைந்தும் வரலாம், காலம் தாழ்ந்தும் வரலாம். ஆன்மா பக்குவமடையுந் தோறும் ஒன்று மற்றொன்றைத் தொடர்கின்ற வேகமும் அதிகரிக்கிறது. நமக்கு வேண்டுவது இன்பமும் அல்ல, துன்பமும் அல்ல. இரண்டும் நமது உண்மை இயல்பை மறக்கச் செய்கின்றன, இரண்டும் சங்கிலிகளே. ஒன்று இரும்புச் சங்கிலி, மற்றொன்று பொன் சங்கிலி. இரண்டின் பின்னணியிலும் இருப்பது ஆன்மா. அது இன்பம், துன்பம் இரண்டையும் அறியாதது. இவை இரண்டும் குறிப்பிட்ட நிலைகளே இவை, நிலைகள் எப்போதும் மாறியே ஆகவேண்டும். ஆனால் ஆன்மாவின் இயல்பு மாற்றமில்லாத ஆனந்தம், மாற்றமில்லாத அமைதி. நாம் அதை அடைய வேண்டுவதில்லை. அது நம்மிடமே உள்ளது. மாசுகளைக் கழுவுங்கள். அது தெரியும்."*

*—ஞானதீபம் 2 பக்கம் 375*

இவ்வாறு துன்பத்திற்கு விளக்கமும், ஆன்ம இன்பத்திற்கு வழியும் அத்வைதம் நமக்குக் காட்டுகிறது. உலகில் காணும் இன்பத்திற்குப் பின் துன்பம் வந்தே தீரும். அதனால் நிலையற்ற துன்ப மயமான உலகிலிருந்து விடுபட்டு, மாற்றமில்லாத ஆனந்தத்தை நிரந்திரமாகக் கொண்ட ஆன்மாவில்



படிப்பகம்

www.padippakam.com

நிலைத்திருப்பதே அமைதி என்று மரணமில்லாப் பெருவாழ்விற்கு வழி காட்டுகிறது அத்வைதம்.

சமூகம் சுரண்டல் மயமானது என்பதை அறிந்த அத்வைதம், இதனை நீக்குவதற்கு வழி காணமுடியாமல், இதிலிருந்து தப்புவதற்கு, இவ்வுலகம் என்பது துன்பமயமானது என்றும், நிலையற்றது என்றும் கூறி ஆத்மாவின் அடிப்படையில் அனைவரையும் ஒன்றுபடுத்திக் காட்டுகிறது.

*".. மொத்தம் சமமாகவே இருக்கிறது.* ***எனவே ஒருவனை இன்புறச் செய்வது என்பது மற்றொருவனைத் துன்புறுத்துவதே.*** *புற இன்பம் ஜடமயமானது, அளவுக்கு உட்பட்டது,* ***துளியளவாக இருந்தாலும் அது பிறரிடமிருந்து எடுக்கப்பட்டது.*** *ஜட உலகிற்கு அப்பால் இருக்கும் பேரின்பம் மட்டுமே பிறருக்கு இழப்பு ஏற்படாமல் பெறக் கூடியது. ஜட உலகம் இன்பம், ஜட உலகத் துன்பத்தின் மாற்று வடிவமே தவிர வேறல்ல."*

*"தீமை இல்லாது போய்விட்டால் உயர்ந்த எதையும் நம்மால் பார்க்க முடியாது. இருக்கும் நிலையிலேயே நாம் திருப்தி அடைந்து விடுவோம். முக்தி பெற முயல மாட்டோம். ஜடப் பொருட்களில் இன்பத்தைத் தேடுவது மடத்தனம் என்பதும் மனிதனுக்குப் புலப்படும்போதுதான் மதம் தொடங்குகிறது."*

*—ஞானதீபம் 2, பக்கம் 485 - 486*

ஒருவன் இன்பம் பெறவேண்டுமானால், மற்றொருவனுக்குத் துன்பம் ஏற்படவே செய்யும் என்று சொல்வதின் மூலமும், சமூகத்தில் காணும் ஏற்றத் தாழ்வைப் போக்குவதற்கு வழியில்லை என்றுரைப்பதின் மூலமும், இன்பம் அனுபவித்து வருபவருக்குத் துணைபுரிகிறது. அத்துடன் நில்லாமல், சமூகத்தில் தீமை இல்லாது போனால், உயர்ந்ததை அடைய வேண்டும் என்ற எண்ணம் தோன்றாமல், இருக்கும் நிலையிலேயே திருப்தி அடைந்து விடுவோம் என்று கூறுவதின் மூலம் சமூகத்தில் காணும் தீமைக்குப் புனிதத் தன்மையை ஊட்டுகிறது அத்வைதம்.

சுவாமி விவேகானந்தர் தான் உலகத்தைத் தாழ்த்திப் பேசவில்லை என்று சாதிக்கிறார். வேதாந்தம் வறட்டு அழிவு போதனை செய்யவில்லை என்று கூறி, துறத்தல் என்பதற்கு உலகை தெய்வீகமாக்குதல் என்று பொருள் கொள்ளும்படி கூறுகிறார். இதற்கு ஈசா உபநிடதத்தின் தொடக்கத்தை மேற்கோள் காட்டுகிறார்.

*" 'பிரபஞ்சத்திலுள்ள அனைத்துமே இறைவனால் சூழப்பட வேண்டும்' என்று மிகவும் பழைய ஓர் உபநிடதத்தின் ஆரம்பத்தில் காண்கிறோம். அனைத்தையும் இறைவனால் மூட வேண்டும், ஒருவகை போலியான*



படிப்பகம்

*இன்ப நோக்காகவோ இல்லை, துன்பங்களைக் கண்டும் காணாததுபோல் இருக்கும் பாசாங்காகவோ அல்ல. உண்மையிலேயே எல்லாவற்றிலும் இறைவனைக் காண்பதன்மூலம் இதைச் செய்ய வேண்டும்''*

-ஞானதீபம் 3, பக்கம் 286

ஈசா உபநிடதத்தின் முதல் மந்திரம்

*''ஓம், பூமியில் காணும் அனைத்தும் இறைவனால் சூழப்பட்டுள்ளது. தியாகத்தால் உன்னை காப்பாற்றிக்கொள். பிறருடைய செல்வத்திற்கு ஆசைப்படாதே.''*

ராமகிருஷ்ண மடம் வெளியிட்டுள்ள அண்ணா அவர்களின் இந்த மந்திரத்திற்கான உரையைப் பார்ப்போம்:

*''ஓம், (தோன்றி மறையும்) இவ்வுலகில் தோன்றி மறைவதாயுள்ளது எது உண்டோ அது அனைத்தும் ஈசனால் வியாபிக்கப்பட்டதாக (காண) வேண்டும் (ஈசுவர பாவனையால் ஏற்பட்ட) அந்த தியாகத்தால் உன்னை ரட்சித்துக்கொள் - (உயிரை ரட்சிப்பதற்கு மட்டும் அவசியமான பொருளை ஈசுவரன் கொடுத்ததென ஏற்றுக் கொண்டு வாழ்வாயாக) எவருடைய பொருளுக்கும் பேராசைப் படாதே''*

துன்ப, துயரங்களோடு வாழ்வோர்களுக்கு, ''உயிரை ரட்சிப்பதற்கு மட்டும் அவசியமான பொருளை ஈசுவரன் கொடுத்ததென ஏற்றுக் கொண்டு வாழ்வாயாக'' என்று அறிவுறுத்துகிறது. ஆனால் சமூகத்தில் சமமாக வாழ முடியாமல் போனதற்கு, செல்வம் ஓரிடத்தில் சேர்ந்ததே காரணமாகும். செல்வத்தைச் சேர்த்தவர்களிடம் உள்ள பொருளாசையை தடுக்காமல், கடுமையாக உழைத்தும் துயர்ப்படுபவர்களிடம் இத்தகைய தியாகத்தை எதிர்ப்பார்க்கிறது இம் மந்திரம்.

செல்வம் சேர்த்தவர்களைக் காப்பதற்காகவும், இல்லாமையில் அவதிப்படுவர்களின் கோபத்தைத் தணிப்பதற்காகவும் தோன்றியதே ஆளும் வர்க்கத் தத்துவம். பாடுபட்டு உழைத்து அவதிப்படும் மக்களுக்கான தத்துவம் இதுவல்ல என்பதையும், இம் மந்திரம் உணர்த்திவிடுகிறது.

பிரம்மம் சத்தியம் ஜகத் மித் என்று கூறும் அத்வைதம், ஜகத்தை எவ்வாறு மித் அதாவது மாயை என்று கூறுகிறது என்பதைப் பார்ப்போம்.

கனவில் காணும் பொருட்கள், நிகழ்வுகள் போன்று நாம் நனவில் காணும் பொருட்களும் நிகழ்வுகளும்கூட, முற்றிலும் நமது உணர்வில் மட்டுமே தோன்றுகிறது. பொருட்கள் உணர்வுகளின் தொகுப்பு. இதுவே அகவய கருத்துமுதல்வாதத்தின் கண்ணோட்டமாகும்.

www.padippakam.com

இதனை சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்:-

*"உலகம் இருக்கிறது என்று கூறுவதற்கு என்ன பொருள்? இந்த உலகம் இல்லை என்பதன் பொருள் என்ன? உலகத்திற்குத் தனியான இருப்பு இல்லை என்பதன் பொருள் என்ன? உலகத்திற்குத் தனியான இருப்பு இல்லை என்பதுதான். என் மனம். உங்கள் மனம் என்று எல்லோருடைய மனங்களையும் சார்ந்து தான் உலகம் இருக்கிறது."*

*—ஞான தீபம் 3, பக்கம் 232,*

*"நாம் நமது கற்பனையால், நமது அனுமானத்தால் உருவாக்கிக் கொண்டிருக்கும் உலகத்தைத் துறந்துவிட வேண்டும். ஏனென்றால் இந்த அனுமானம் முழுமையற்ற அனுபத்வதை, ஆழமற்ற அறிவை நமது சொந்த பலவீனத்தை அடிப்படையாகக் கொண்டது. இதைத் துறந்துவிடுங்கள். நாம் இதுவரை நினைத்துவந்த, எல்லோரும் உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்ற உலகம். அதை விட்டுவிடுங்கள். நன்றாகக் கண்களைத் திறந்து பாருங்கள். இப்படிப்பட்ட ஓர் உலகம் எப்போதுமே இருக்கவில்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அது ஒரு கனவு, மாயை. இருந்தது கடவுள் மட்டுமே. குழந்தையில், மனைவியில், கணவனில் எல்லாவற்றிலும் இருப்பவர் அவரே. நல்லவரில் இருப்பதும் அவரே. தீயவரில் இருப்பதும் அவரே. வாழ்விலும் அவரே இருக்கிறார். சாவிலும் அவரே இருக்கிறார்.*

*உண்மையிலேயே துணிச்சலான கருத்துதான். ஆனாலும் வேதாந்தம் இந்தக் கருத்தைத்தான் பிரச்சாரம் செய்ய, செயலில் காட்ட விரும்புகிறது. போதிக்க விரும்புகிறது.* ***இது வெறும் ஆரம்பம் மட்டுமே, இவ்வாறு நாம் வாழ்க்கையின் அபாயங்களையும் தீமைகளையும் விலக்குகிறோம்."***

*—ஞான தீபம் 3, பக்கம் 286 -287*

இந்தியாவின் அகநிலைக் கருத்துமுதல்வாதமான அத்வைதத்தை இங்கே சுவாமி விவேகானந்தர் விளக்குகிறார். இதன் மூலம் அத்வைதமான அகநிலைக் கருத்துமுதல்வாதத்தின் நோக்கமும் புரிந்துவிடுகிறது. அதாவது வாழ்க்கையில் காணும் தீமைகளுக்குத் தோற்றம் புறத்தில் இல்லை, அகத்தில் காணும் பொய்த்தோற்றமே என்று வலியுறுத்துவதின் மூலம், தீமைகளின் மூலத்தை அறிந்திடும் முயற்சியைத் தடுக்கிறது.

*"அகப்பொருளைப் புறப்பொருளில் கலப்பதல்ல, அது புறப்பொருளை அகப்பொருளில் இரண்டறக் கலப்பது. உண்மையில் அந்த நிலையில் இந்த உலகம் அழிகிறது, நான் இருக்கிறேன். உண்மையில் அப்போது இருப்பது நான் மட்டுமே."*

*—ஞான தீபம் 4 பக்கம் 16*



படிப்பகம்

www.padippakam.com

ஆக, செயல்படும் உலகத்தை, அதாவது உலக வாழ்க்கையை மறுத்து, உலகத்தை அழித்து, தான்மட்டும் உண்மையில் உள்ளதான ஒற்றை முடிவிற்கு வருகிறது. உலக வாழ்க்கை நிறுத்தப்பட்டு, ஆன்மீக வாழ்க்கையைத் தொடங்குவதே லட்சியம் என்று, சமூக முரண்பாடுகளுக்கு அத்வைதக் கண்ணோட்டத்தில் தீர்வாக வைக்கிறார் சுவாமி விவேகானந்தர்.

தனிப்பொருளான சத் என்பது மாறாதது என்று அத்வைதிகள் ஏற்கின்றனர். அவ்வாறெனில் சத் எப்படி மாறுதலுக்கும் அழிவுக்கும் உட்படுகிறது என்பதற்கு, அத்வைதிகள் விவர்த்த வாதத்தை கையாள்கின்றனர். விவர்த்த வாதம் என்பது தோற்றம் பற்றிய கொள்கையாகும். இதற்கு அத்வைதிகள் காட்டும் உவமை "இரவில் இருட்டில் கீழே கிடக்கும் கயிறு பாம்பு போல் தோற்றம் கொள்கிறது." உண்மையில் கயிறு பாம்பாக மாறவில்லை. மாறியதாக அறிவது தோற்றத்தில் மட்டுமே. அதே போல்

*"இப்போது நாம் காண்கின்ற பிரபஞ்சமும் அந்தப் பரம்பொருள்தான். அது மாறவே இல்லை, அதில் நாம் காணும் மாற்றங்களெல்லாம் வெறும் தோற்றங்கள் மட்டுமே. இந்த மாறுதல்கள் தேசம், காலம், நிமித்தம் இவற்றால் தோன்றுபவை, இன்னும் உயர்ந்த மனத் தத்துவப் பொதுமையில் சொல்வதானால் நாமரூபங்களால் ஆனவை. நாமரூபங்கள் ஒரு பொருளை மற்றொன்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. நாமரூபத்தினால்தான் வேறுபாடு உண்டாகிறது. உண்மையில் அவை ஒன்றே. தோற்றம், உண்மை என்ற இரண்டு நிலைகளே இல்லை என்றுதான் வேதாந்திகள் கூறுகிறார்கள்"*

*—ஞான தீபம் 4 பக்கம் 9*

*"பிரபஞ்சம் முழுவதையும் ஒன்றாக, அதாவது, எது உண்மையாகவே இந்தப் பிரபஞ்சம் முழுவதுமாக இருக்கிறதோ, அதுவாகப் பொதுமைப் படுத்துவதே அத்வைதிகளின் நோக்கம்"*

*—ஞான தீபம் 4 பக்கம் 8*

*"அறியாமையில் இருக்கும்போது, தோற்றத்தை மட்டுமே ஒருவன் காண்கிறான். இறைவனைக் காண்பதில்லை. இறைவனைக் காணும் அந்தக் கணமே அவனைப் பொறுத்தவரையில் பிரபஞ்சம் மறைந்துவிடுகிறது. மாயை என்று சொல்லப்படும் அறியாமையே இந்தத் தோற்றங்களுக்கெல்லாம் காரணம், தனிப்பொருளான, மாறுதல் இல்லாத, என்றும் ஒரே தன்மையாக உள்ள ஒன்றை, பிரபஞ்சமாகத் தோன்றச் செய்வது இந்த மாயையே."*

*—ஞான தீபம் 4 பக்கம் 9*



படிப்பகம்

www.padippakam.com

சுவாமி விவேகானந்தர் விவர்த்த வாதம், மாயா வாதம், அநிர்வசனீயம் போன்ற கோட்பாட்டின் அடிப்படையில் தமது அத்வைத தத்துவத்தை நிறுவு கிறார்.

பிரபஞ்சம் இறைவனின் பரிணாமம், ஆனால் அது வெறும் தோற்றம் மட்டுமே, உண்மையான பரிணாமம் அல்ல என்று விவரிப்பது விவர்த்த வாதம். கயிறு பாம்பு உவமையில், பாம்பு என்பது தோற்றம் மட்டுமே உண்மை அல்ல, அதே போல், பிரபஞ்ச பரிமாணம் என்பது தோற்றம் மட்டுமே உண்மையல்ல. அறியாமையில் வீழும்போதுதான் தோற்றம் எனத் தோன்றுகிறது. தோற்றம் என்பது மாயை, இந்த நோக்கில் மாயை என்பது இல்லாதது.

> *"இதை (மாயையை) இல்லாதது என்றும் கூறமுடியாது. ஏனெனில் இல்லாத ஒன்றானால் தோற்றப் பிரபஞ்சத்தை உண்டாக்க அதனால் இயலாது. எனவே மாயை என்பது இது இரண்டும் அல்லாத ஒன்று. வேதாந்தத் தத்துவத்தில் இதை அநிர்வசனீயம் அல்லது விளக்க முடியாதது என்கிறார்கள்"*
>
> *—ஞான தீபம் 4 பக்கம் 9*

இது போன்ற கோட்பாடுகளின் மூலமே அத்வைதத்தை நிறுவ முடிகிறது, அதாவது பிரபஞ்சம் என்பது பிரம்மத்தின் தோற்றமே, இந்த தோற்றம் என்பது மாயையே, இந்த மாயை எனபதை இருக்கிறது என்றும் இல்லாதது என்றும் கூறமுடியாது. அதனால் விளக்க முடியாதது என்று பொருள்படும் படியாக அநிர்வசனீயம் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

விளக்க முடியாத அத்வைதத்தை விளக்குவதின் நோக்கத்தை சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

> *"ஒருவருக்கும் தீங்கு செய்யாதே. உன்னை நேசிப்பது போலவே எல்லோரையும் நேசி, ஏனெனில் பிரபஞ்சம் முழுவதுமே ஒன்றல்லவா? பிறருக்குத் தீங்கு செய்வதால் நமக்கே நாம் தீங்கு செய்து கொள் கிறோம். இதிலிருந்துதான் அத்வைத நீதிநெறியும் உண்டாகிறது."*
>
> *—ஞான தீபம் 4 பக்கம் 10*

> *"உண்மையான தனிப்பொருள் பரம்பொருளே. மாயை காரணமாகவே பல்வேறு தனித்துவங்கள் காணப்படுகின்றன. இந்தப் பன்மை வெறும் தோற்றம், உண்மையில் அவை தனிப் பரம்பொருளே. உண்மையில் ஒன்றே உள்ளது, மாயையால் அது பலவாத் தோன்றுகிறது. இந்தப் பன்மை மாயையிலேயே உள்ளது. எனினும் ஒருமையை நோக்கித் திரும்புகின்ற போக்கும் மாயையில் உண்டு. இந்த முயற்சியே எல்லா நாடுகளின் நீதிநெறிகளிலும் ஒழுக்க நெறிகளிலும் வெளிப்படுகிறது. அப்படித் திரும்புவது என்பது ஆன்மாவின் இயல்பிலேயே அமைந்துள்ள*



படிப்பகம்

*ஒரு தேவையாகும் ஒருமையை அடைவதற்கான போராட்டத்தையே நாம் நீதிநெறி என்றும் ஒழுக்கநெறி என்றும் கூறுகிறோம்.''*

*—ஞான தீபம் 4 பக்கம் 27*

உலக வாழ்க்கையே துன்பமயமானது என்று உணர்ந்து, வைராக்கியம் பெற்று, இந்த உலகம் என்பது பொய்த் தோற்றமே என்பதை அறிந்து, தோற்றத்தில் காணும் பன்மையே தீமைகளுக்கு காரணம் என்பதை புரிந்து, நாம் அனைவரும் பிரம்மநிலையில் ஒருமை பெற்றவர்களே -என்பதை நிறுவுவதே அத்வைதத்தின் சாரம்.

அத்வைதம் தமது தத்துவத்தை இவ்வாறு அமைத்துக்கொள்வதின் மூலம், சமூக முரணிற்கான காரணத்தையும், அதனை நீக்க வேண்டிய கடமை யையும் மறுதலித்து, அத்தோடு இந்த முரண்பாடான சமூகத்தை அங்கீகரித்து, அந்தச் சமூகம் அவ்வழியிலேயே தங்குதடையின்றி தொடர்ந்து நடைபெற வழி வகுக்கிறது.

அத்வைதத்தின் லட்சியமாக சுவாமி சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்:-

*''எப்போது ஒரு மனிதன் ஒரு பூச்சிக்காகக்கூடத் தன் உயிரையே கொடுக்கும் தியாக நிலையை அடைகிறானோ, அந்தக் கணமே அவன் அத்வைதிகளின் லட்சியமான பூரண நிலையை அடைகிறான். அப்படி அவன் தயாராகின்ற அந்தக்கணமே அவனது அறியாமைத் திரை கழன்று வீழ்கிறது, அவன் தன் உண்மை இயல்பை உணர்கிறான். தான் பிரபஞ்சத்துடன் ஒன்றுபட்டிருப்பதை இந்தப் பிறவியிலேயே உணர்கிறான். அந்த நேரத்திற்கு இந்தத் தோற்றப் பிரபஞ்சம் அவனுக்கு மறைந்தேவிடும். தான் தான் யார் என்பதை அவன் உணர்வான். ஆனால் அவனுடைய வினைப்பயன் செயலாற்றும் வரையில் அவன் வாழ்ந்தேயாக வேண்டும். அறியாமைத் திரை விலகிய பின்னரும், உடம்பு சில காலம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த நிலையைத்தான் வேதாந்திகள் ஜீவன்முக்தி அல்லது வாழும்போதே முக்தி என்கிறார்கள். கானல் நீரைப்பற்றிய உண்மை தெரிந்த மனிதன் அதில் ஏமாறுவதில்லை. அது மறுநாளோ வேறொரு நாளோ மீண்டும் அவன் முன் தோன்றினாலும் அவன் அதை உண்மை என்று நினைத்து மயங்க மாட்டான். முதலில் அந்த உண்மை தெரியும்வரையில் உண்மை எது, பொய் எது என்று பிரித்தறிய அவனால் முடியவில்லை. ஒருமுறை அதன் உண்மை தெரிந்த பிறகு அவனது கண்களும் புலன்களும் வேலை செய்யும் வரையில் அவன் அந்தக் கானல்நீரைப் பார்ப்பான், ஆனால் ஏமாற மாட்டான். உண்மைப் பிரபஞ்சத்திற்கும் அதன் தோற்றத்திற்கும் உள்ள வேறுபாடு அவனுக்கு விளங்கிவிட்டது. பிரபஞ்சத் தோற்றம் அவனை இனி ஏமாற்ற முடியாது. எனவே வேதாந்தி தன் உண்மை இயல்பை என்று உணர்கிறானோ,*

www.padippakam.com

*அன்றே அவனுக்குப் பிரபஞ்சம் மறைந்து விடுகிறது. தோற்றம் மறுபடியும் அவன் முன்வரும். ஆனால் அது இப்போது துயர் மண்டிக் கிடக்கின்ற பிரபஞ்சமாக இருக்காது. துன்பச் சிறையாக இருந்த அது இப்போது சத்-சித்-ஆனந்தமாக, தனியிருப்பாக, தனியறிவாக, தனி ஆனந்தமாக மாறிவிட்டது. இந்த நிலையை அடைவதுதான் அத்வைத வேதாந்தத்தின் லட்சியம்."*

*—ஞான தீபம் 4, பக்கம் 11*

அத்வைதத்தின் லட்சியத்தை காட்டுவதின் நோக்கத்தை புரிந்து கொள்ள வேண்டும். சிறு பூச்சிக்காக உயிரைக் கொடுக்கும் தியாகத்தை செய்யும்போது அத்வைத லட்சியத்தின் முழுமையை அடைந்தவனாகிறான் என்று கூறிவிட்டு, தோற்றப் பிரபஞ்சத்துடன் ஒன்றுபட்டிருப்பதை இந்தப் பிறவியிலேயே உணர்ந்தவனாக சுட்டிக் காட்டி, கூறுகிறார் "வினைப்பயன் செயலாற்றும் வரையில் அவன் வாழ்ந்தேயாக வேண்டும்". ஜீவன் முக்தி அடைந்த பின்பும், வினைபுரிய வேண்டும் என்று சொன்னால் பரவாயில்லை. வினைப்பயன் செயலாற்றும்வரை வினைபுரிய வேண்டும் என்கிறார். இப்பிறவியில் செய்த கர்மங்களால் உருவான புதிய வினையை எப்போது எவ்வாறு தீர்ப்பது, ஜீவன்முக்தி அடைந்தவுடன் இப்பிறவியில் செய்த கர்மவினை மறைந்துவிடும் என்றால், முன்பிறவியில் செய்த வினையும் சேர்ந்து கரைந்து, மறைந்து விடவேண்டியதுதானே.

**ஆக, இந்த அத்வைதக் கண்ணோட்டமும், கர்மவினையை செயல்படுத்துவதிலேயே குறியாக இருக்கிறது. உலகம் பிரம்மத்தின் தோற்றம் என்றுரைக்கும் அத்வைதம், வினைப்பயனை தோற்றம் என்று கூற மறுப்பதில் இருந்து, இந்தத் தத்துவத்தின் குறிக்கோள் (லட்சியம்) கர்மவினை என்ற பெயரில் சமூகம் செயற்படுவதை விரும்புகிறது. அதாவது முரண்பட்ட வர்க்க சமூகத்தில், வர்க்கப் பிரிவினைக்கு ஏற்ப வினையாற்றுவதை வலியுறுத்துவதே அத்வைதத்தின் நோக்கமாகிறது.**

ஜீவன் முக்தியடைந்த பிறகு, இந்தப் பிரபஞ்சமானது துயர் மண்டிக் கிடப்பதாகத் தோன்றாது. தன் உண்மை இயல்பை உணர்ந்து அதாவது தான் இயல்பிலேயே சத்-சித்-ஆனந்தன் என்பதை உணர்ந்து ஆத்ம இன்பத்தில் திளைத்து, உலகியல் துன்பத்தை மறந்து (மறுத்து) வினைப்பயனை செயலாற்றும்படி அத்வைத லட்சியம் வழிகாட்டுகிறது.

"*.. மொத்தம் சமமாகவே இருக்கிறது. எனவே ஒருவனை இன்புறச் செய்வது என்பது மற்றொருவனைத் துன்புறுத்துவதே. புற இன்பம்*



படிப்பகம்

www.padippakam.com

*ஜடமயமானது, அளவுக்கு உட்பட்டது, துளியளவாக இருந்தாலும் அது பிறரிடமிருந்து எடுக்கப்பட்டது.''*

*—ஞானதீபம் 2, பக்கம் 485*

சுவாமி விவேகானந்தர் கூறுகிறபடி ஒருவன் இன்புற வேண்டும் என்றால் மற்றொருவன் துன்புற நேருகிறது என்ற நிலையில் உள்ள சமூகத்தில், உன்னை நேசிப்பது போலவே அனைவரையம் நேசி, ஒருவருக்கும் தீங்கு செய்யாதே என்கிற பொது நன்னெறி, இன்புறுபவனுக்குச் சாதகமாகவும், துன்புறுபவனுக்குப் பாதகமாகவும் அமைகிறது. இதுவே அத்வைதத்தின் வர்க்கச் சார்பு.

மாயை என்ற அறியாமையினாலேயே இந்தப் பிரபஞ்சத் தோற்றம் பெற்றுள்ளது. இந்தத் தோற்றத்தைக் காண்பவனால், இறைவனைக் காணமுடிவதில்லை. இறைவனைக் கண்டவனுக்கு அக்கணமே பிரபஞ்சம் மறைந்து விடுகிறது. இவ்வாறு பிரபஞ்சத்தின் மறைவை விளக்குகிறது அத்வைதம்.

பிரம்மையால் மாயைச் சூரியனான மதம் மனிதனைச் சுற்றிவருவதைத் தடுத்து, இந்த பிரம்மையைக் குலைத்துப் பகுத்தறிவால் மீண்டு, மனிதன் தன்னைத் தானே சுற்றி வரவேண்டும் என்கிறது மார்க்சியம்.

அத்வைதத்திற்குப் பிரபஞ்சம் மாயையானது. மார்க்சியத்தற்கு மதம் பிரம்மையானது. அத்வைதம் பிரபஞ்ச மாயையிலிருந்து விடுபடவேண்டும் என்கிறது. மார்க்சிபம் மதப் பிரம்மையிலிருந்து விடுபடவேண்டும் என்கிறது.

அதுமட்டும் அல்லாது, சமூக சீர்திருத்தத்தை சுவாமி விவேகானந்தர் ஏற்கவேயில்லை என்பதுடன் கடுமையாக மறுக்கவும் செய்கிறார். இதன்மூலம் நடைமுறையில் உள்ள சமூகத்தைக் கட்டிக்காப்பதே அவரது விருப்பம் - அத்வதைத்தின் விருப்பம்- என்று அறிய முடிகிறது.

*''பல நூற்றாண்டுகளாகவே நம் மக்களின் மனத்தை ஆக்கிரமித்திருப்பவையும் வெறுப்படையச் செய்து வருபவையுமான ஜாதி மற்றும் சமூக சீர்திருத்தம் பற்றிய கடினமான சில கேள்விகள் இந்த இடத்தில் இயல்பாகவே எழுகின்றன. நான் ஜாதிகளை உடைப்பவனோ, வெறும் சமூகச் சீர்திருத்தவாதியோ அல்ல என்பதை வெளிப்படையோக உங்களிடம் சொல்லிக் கொள்கிறேன்''*

*—ஞான தீபம் 5, பக்கம் 103-104*

*''.. உண்பது, குடிப்பது, சமுதாயத்திற்குச் சிறிது நன்மை செய்வது இவற்றுடன் நிம்மதியாக இருக்கக் கூடாதா? இப்படிப் பலர் நினைக்கவும் செய்கின்றனர். 'உலகத்திற்கு நன்மை செய். அவ்வளவுதான் மதம். அப்பால் என்ன இருக்கிறது என்று மூளையைக் குழப்பிக் கொள்ளாதே'*



படிப்பகம்

www.padippakam.com

என்றுதான் மிகப் பெரிய பண்டிதரிலிருந்து மழலை பேசும் குழந்தைவரை எல்லோருக்கும் சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்லிச் சொல்லி இது ஓர் உண்மைபோலவே ஆகிவிட்டது.

...

***நாம் உலகிற்குப் பெரிதாக எந்த நன்மையும் செய்துவிட முடியாது. உலகிற்கு நன்மை செய்வது மிகவும் நல்லதுதான். ஆனால் அவ்வாறு அதிக நன்மை செய்ய நம்மால் முடியுமா?*** எத்தனையோ நூறு வருடங்களாக நாம் போராடி வந்திருக்கிறோமே. இந்தக் காலத்தில் உலகிற்கு நிறைய நன்மை செய்துவிட்டோமா?, உலகின் மொத்த மகிழ்ச்சியை அதிகரித்துவிட்டோமா? உலகின் மகிழ்ச்சியை வளர்ப்பதற்காக நாள்தோறும் ஆயிரக்கணக்கான வழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இது ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் கேட்கிறேன், இன்று உலகில் உள்ள மகிழ்ச்சி ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் இருந்ததைவிட அதிகமாக இருக்கிறதா? அது இயலாது. ஏனென்றால் கடலில் ஓர் இடத்தில் அலை எழுகிறது என்றால், அது இன்னோர் இடத்தில் பள்ளம் விழுவதன் காரணத்தினால்தான். ஒரு நாடு செல்வம் கொழிப்பதாகவும் ஆற்றல் மிக்கதாகவும் இருக்கிறது என்றால், அது எங்கேயோ இன்னொரு நாடு வீழ்த்தப்பட்டதன் காரணமாகத்தான் இருக்க வேண்டும்.

கண்டு பிடிக்கப்படுகின்ற ஒவ்வோர் எந்திரமும் இருபது பேரைப் பணக்காரர்களாக்கும். அதே வேளையில் இருபதாயிரம் பேரை ஏழைகளாக்கும். போட்டியின் நியதியே இதுதான். ஆற்றலின் மொத்தம் எப்போதும் ஒரே அளவாகத்தான் உள்ளது. துன்பம் இல்லாமல் இன்பம் இருக்க முடியும் என்று சொல்வது நியாயமற்றது. அந்த முயற்சி ஓர் அசட்டுத் துணிச்சலும்கூட. இந்தச் சாதனங்களை அதிகரிப்பதன்மூலம் நீங்கள் உலகின் தேவைகளை அதிகரிக்கிறீர்கள். தேவைகள் அதிகம் என்றால் தணியாத தாகம் என்று பொருள். அதைத் தீர்க்கவே முடியாது. இந்தத் தேவையை, இந்தத் தாகத்தை எது திருப்தி செய்ய முடியும்? இந்தத் தாகம் இருக்கும்வரை துன்பத்தையும் தவிர்க்க முடியாது. இன்பமும் துன்பமும் மாறிமாறி வருவதுதான் வாழ்க்கையின் இயல்பு.

நீங்கள் நன்மை செய்வதற்காகத்தான் இந்த உலகம் படைக் கப்பட்டிருக்கிறதா என்ன? உலகில் வேறு எந்தச் சக்தியும் வேலை செய்ய வில்லையா என்ன? என்றும் இருப்பவரான, எல்லாம் வல்லவரான, கருணைக் கடலான, எப்பொழுதும் விழித்துக் கொண்டிருப்பவரான, உலகம் தூங்கும்பொழுதும் தூங்காதவரான, கண் இமைகள் அசை யாதவரான அந்தக் கடவுள் உங்களிடமும் என்னிடமும் உலகை



படிப்பகம்

www.padippakam.com

*ஒப்படைத்துவிட்டுச் செத்துப்போய் விட்டாரா என்ன? இந்தப் பரந்த ஆகாயமே அல்லவா எப்பொழுதும் திறந்துள்ள அவரது கண்ணாக உள்ளது. அவர் இறந்துவிடவில்லையே! இந்தப் பிரபஞ்சத்தில் அவர் செயல்படவில்லையா என்ன? அது இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. நீங்கள் அவசரப்பட வேண்டாம். உங்களையும் வருத்தப்படுத்திக் கொள்ளவேண்டாம்.''*

*—ஞான தீபம் 4, பக்கம் 309-312*

இதைப் படிக்கும்போது, சுவாமி விவேகானந்தர் அத்வைதியா, தீவிரமான துவைதியா என்ற சந்தேகம் எழுகிறது. நானே கடவுள் தத்துவமசி என்றெல்லாம் சொல்லும் அத்வைதி, கடவுளிடம் விட்டுவிடுங்கள், உலகிற்குப் பெரிதாக எந்த நன்மையும் செய்துவிட முடியாது என்று கூறுவதின் மூலம், யதார்த்த உலகை மாற்ற முடியாது என்று நமக்குக் காட்டுகிறார். உலகில் காணும் போட்டியைப் பார்த்து இதுதான் நியதி என்று முடிவெடுத்ததின்மூலம் நிகழும் சமூகத்தைச் செல்வழியிலேயே, எதிர்ப்பின்றி செல்ல வழிவிடுகிறார். போட்டி, தாகம் என்றெல்லாம் கூறிவிட்டு, உலகே மாயம் என்று ஓடி ஒளிகிறார்.

அத்தோடு, ''நீங்கள் நன்மை செய்வதற்காகத்தான் இந்த உலகம் படைக்கப்பட்டிருக்கிறதா என்ன? உலகில் வேறு எந்தச் சக்தியும் வேலை செய்யவில்லையா?'' என்று சமூக மாற்றத்திற்கு பாடுபடுபவர்களைப் பார்த்து கேட்கிறார். எப்பொழுதும் விழித்துக் கொண்டிருப்பவரான கருணைக் கடலான கடவுள், உலகத்தை நம்மிடம் ஒப்படைத்துவிட்டுச் செத்துப்போய் விட்டாரா என்ன? என்றும் கேட்கிறார்.

நாமே பிரம்மம் என்று கூறிவிட்டு, துன்பங்களுக்கும் இன்பங்களுக்கும் நாம்தான் காரணம் என்று சொல்லிவிட்டு இப்போது சமூகச் சிக்கலைப் போக்குபவர்களை பார்த்து, உலகத்தை உங்களிடம் கொடுத்துவிட்டு கடவுள் செத்துவிட்டாரா?- என்று வினா எழுப்புவதின் மூலம் கடவுளிடம் கொண்டு சேர்க்கிறார்.

சமூகத்தில் ஓரவஞ்சனை இருப்பதற்குக் கடவுள்மீது குறை சொல்லாதீர்கள். கடவுள் கருணைமயமானவர். சென்ற பிறவியில் செய்தவினையே இந்த பிறவியின் நிலைமைகள் என்று கூறிவந்த சுவாமி விவேகானந்தர் இப்போது, (கடவுளும் பொருப்பாக மாட்டார்) சமூகத்தை நீங்களும் சீர்திருத்த முடியாது என்று கூறிவிடுகிறார்.

ஆக ஓரவஞ்சனையிலும் போட்டியிலும் முரண்பட்ட சமூகத்தை அப்படியே விட்டுவிடுங்கள். *நீங்கள் அவசரப்பட வேண்டாம். உங்களையும் வருத்தப் படுத்திக் கொள்ளவேண்டாம்.* அது செல்வழியிலேயே செல்லட்டும் என்ற முடிவைத்தான் அத்வைதம் வைக்கிறது.

www.padippakam.com

## அத்வைத ஒருமையும், மார்க்சிய ஒருமையும்

*"அத்வைத வேதாந்தத்தில் தனி ஆன்மாவுக்கு இடமில்லை. தனி ஆன்மாவைப் படைத்தது மாயை என்பது அவர்களின் வாதம். உண்மையில் தனி ஆன்மாக்கள் இருக்க முடியாது. இருப்பது உண்மையில் ஒன்றே என்றால் நான் வேறு, நீங்கள் வேறு என்றெல்லாம் எப்படி இருக்க முடியும்? நாம் அனைவரும் ஒன்றே. பன்மையைக் காண்பது தான் தீமைக்கான காரணம். நான் வேறு, பிரபஞ்சம் வேறு என்று உணர ஆரம்பித்த உடனே முதலில் பயம் தோன்றுகிறது, தொடர்ந்து துன்பம் உண்டாகிறது"*

*—ஞான தீபம் 4, பக்கம் 10*

பன்மையில்தான் தீமைக்கான காரணம் இருக்கிறது. அதனால் பன்மையை மறுத்து ஒருமையை வலியுறுத்துகிறார் சுவாமி விவேகானந்தர். புறத்தில் காணும் பன்மைகள் தோற்றங்களே. உண்மையில் நாமெல்லாம் ஆத்ம நிலையில் ஒருமை பெற்றவர்களேயாவோம். நாமே பிரம்மம். தத்துவமசி - அது நாமே என்கிறது அத்வைதம். இதன் அடிப்படையில் தான் அத்வைத நன்னெறி அமைந்துள்ளதாக சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். அத்வைத ஒருமை ஆத்மாவில் (பிரம்மத்தில்) நிலவுகிறது, மார்க்சிய ஒருமை பொருளாயதத்தில் அடங்கியிருக்கிறது.

தொடக்க காலத்திலிருந்து உலகத்தின் ஒருமையை அறிவதுபற்றி தத்துவம் முயற்சித்து வருகிறது. உலகத்தின் மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் பின்னணியில் உள்ளவற்றை ப்பற்றி ஒரு கோட்பாட்டை அமைத்துக்கொள்ள முயன்றனர். அதாவது உலகத்தில் காணப்படும் பல்வேறுபட்ட பொருட்கள் மற்றும் நிகழ்வுகள் ஆகியவற்றை ஒன்றிணைப்பது எது என்று தேடினர்.

கருத்துமுதல்வாதமும், மதமும் உலகத்தின் ஒருமையை ஆன்மீகத்தில் கண்டது. அத்வைதம் அதனை உலக ஆத்மாவில் அதாவது பிரம்மத்தில் கண்டது.

மார்க்சிய இயக்கவியல் பொருள்முதல்வாதம், உலக ஒருமையின் உண்மையை அதன் பொருளாயதத் தன்மையில் கண்டது. அதாவது மனிதனது உணர்வைச் சாராமல் புறநிலையின் இருப்பில் அந்த ஒருமையை அறிந்து கொண்டது.

## அத்வைத ஒருமை

இயற்கைக்கு அப்பாற்பட்ட பரமகருத்து அதாவது பிரம்மம்தான் உலகத்திற்குக் காரணம் என்று அத்வைதம் கருதுகிறது. கணக்கில்லா தோற்றங்களாகக் காட்சியளிக்கும் பிரபஞ்சம் முழுமைக்கும் அடிப்படையாய் இருப்பது



படிப்பகம்

www.padippakam.com

இந்த ஒன்றே. நாம் காணும் அனைத்தும், நாம் உணரும் அனைத்தும் இந்த ஒன்றே. இதனை "ஏகம் சத்" அதாவது அனைத்தும் இந்த ஒன்றே என்று நிறுவுகிறது அத்வைதம்.

"நான்" என்னும் உணர்வில் உறைந்துள்ளது ஆத்மா, "நீ" என்று சொல்லும்போது அங்கே உறைந்துள்ளதும் அந்த ஆத்மாவே. அந்த நீ யாராக இருந்தாலும், இருப்பதென்பது இந்த ஒரே ஆத்மாவான பிரம்மமே. நீ என்பவற்றில் ஞானியோ, கொலைகாரனோ, ஆடோ, மாடோ, செடியோ, மரமோ கூட இருக்கலாம். அனைத்தும் ஒன்றேயான ஆத்மாவே. அதாவது பன்மையாகக் காணும் இவையனைத்தும் பிரம்மத்தின் மாயையான வெளிப்பாடே என்கிறது அத்வைதம்.

> *"எல்லா தீமைகளும் தோன்றக் காரணம் எல்லையற்ற ஒன்றிற்கு நாம் எல்லையை ஏற்படுத்தியதே என்கிறான் வேதாந்தி."*
>
> *—ஞான தீபம் 4, பக்கம் 295*

அத்வைதம் பிரம்மத்தின், அவித்தையினால் (அறியாமையினால்) உண்டான தோற்ற வெளிப்பாடே, பன்மையாகத் தெரியும் உலகம். இந்த உலகம் பிரம்மத்தைப் பற்றிய அறியாமையின் வெளிப்பாடாக இருப்பதால், இந்த பிரபஞ்சமும் பிரம்மமும் ஒருமை பெற்றதாக அறிவிக்கிறது.

## மார்க்சிய ஒருமை

அளவற்ற பொருட்கள் மற்றும் புலப்பாடுகளினால் மனிதன் சூழப்பட்டுள்ளான். இவையனைத்தும் குறிப்பிட்ட உறவுநிலையில் காணப்படுகிறது. ஒரு பொருள் மற்றொன்று அத்துடன் வேறொன்று என பொருட்களிடையே இணைப்பைப் பெற்றுள்ளது. இப்பொருட்கள் அனைத்தும் விசும்பிலும் காலத்திலும் இருக்கின்றன.

நிகழ்வுகளின் தொடர்வரிசை, அதாவது மற்றவற்றுடன் ஏற்படும் தொடர்ச்சி, நடைபெறும் நிகழ்வுகள் ஆகியவை கால அளவைக் குறிக்கின்றன. உலகில் இயக்கம் என்பது விசும்பு காலம் ஆகியவற்றின் ஊடே இணைந்தும் பிணைந்தும் ஒருமையாய் நடைபெறுகிறது. விசும்பும், காலமும், பருப்பொருளில் இருந்து பிரித்தறிய முடியாத புறநிலையானதாகும். இவற்றின் இயக்கம் ஒன்றோடொன்று தொடர்புகொண்டு ஒன்றிணைந்து இயங்குகிறது.

ஒருமை வாதத்தின் உயர்ந்த முரணற்ற ஒரே வடிவம் இயக்கவியல் பொருள் முதல்வாதம் ஆகும். இயற்கை, சமூகம் இத்துடன் மனித உணர்வின் பலவிதமான நிகழ்வுகள் அனைத்தும் வளர்ச்சிடைந்து வருகின்ற பருப்பொருளின் உற்பத்திகளே என்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் உலகத்தின் பொருளாயத ஒருமையை வலியுறுத்துகின்றன. உலகத்தின் பொருளாயத ஒருமை என்பது பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் இடைத் தொடர்புகளையும் இடைச் சார்புநிலையையும் உள்ளடங்கிய வகையில் இருக்கிறது. பூமிக்கும் வானத்துக்கும் ஈர்ப்புச் சக்தியின் விசை, சக்தியின் வேறுபட்ட வடிவங்களின் பரிமாற்றம், வேதியல் மூலகங்கள் உருமாற்றம் அடைதல், தாவர உலகத்துக்கும் விலங்கின உலகத் துக்கும் உள்ள ஒற்றுமை, இயற்கைக்கும் சமூகத்திற்கும் இடையேயுள்ள உறவு, ஆகியவற்றை இயக்கவியல் பொருள்முதல்வாதம் அறிந்து கொண்டுள்ளது எனவே, இயற்கை மற்றும் சமூக சக்திகளை அனுசரித்து அவற்றை மனித சமூகத்திற்குச் சேவை செய்ய வைப்பதைச் சாத்தியமாக்குகிறது.

அத்வைத ஒருமை பிரம்ம நிலையோடு ஒடுங்கி, இயற்கை மற்றும் சமூகத் தின் புறநிலையான உண்மையினை மறுத்து, சமூக மாற்றம் என்பதைச் சாத்திய மற்றது என்கிறது.



படிப்பகம்

# 5. பகுத்தறிவுவாதமும் மதமும்

பகுத்தறிவுவாதம் என்பது மிகவும் பழைய சிந்தனை மரபாகும். கிரேக்கச் சிந்தனையின் தொடக்கமே பகுத்தறிவுவாதமாக இருந்தது. சாக்ரடீஸ் வரலாறு கண்ட முதல் பகுத்தறிவாளர். கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் சாக்ரடீஸ் கிரேக்கத்தில் எதையும் ஏன், எதற்கு எனக் கேட்டு விடைகாண வேண்டும் என்று பகுத்தறிவாதச் சிந்தனையைத் தொடங்கினார்.

ஏதாவது ஒரு பிரச்சனையைப் பற்றி மக்களிடம் சாக்ரடீஸ் கேள்வியை எழுப்புவார். அவர்களின் பதிலிருந்தே கேள்விகளைக் தொடுத்து அந்தப் பிரச்சனையினை அவர்களே அறிந்துகொள்ளும்படி செய்திடுவார். இதனால் இளைஞர்களை சமூகத்திற்கு எதிராகத் தூண்டிவிடுவதாகவும், கிரேக்கத்தில் நடைமுறையில் இருந்த பழைய மதநம்பிக்கைகளை எதிர்ப்பதாகவும் சாக்ரடீஸ் மீது குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. தீர்ப்பில் விஷம் கொடுத்து சாக்ரடீஸ் கொல்லப்பட்டார்.

பண்டைய இந்திய சமூகம் சடங்காச்சாரங்களிலும், மூடநம்பிக்கைகளிலும் மூழ்கியிருந்த போது மகாவீரரும், புத்தரும் இதனை எதிர்த்துப் பகுத்தறிவுவாதத்தை சிந்தனையில் புகுத்தி புரட்சி செய்தனர்.

ஆனால் மாகாவீரருடைய சிந்தனை அநேகாந்த வாதமாக இருந்தது. அதாவது உண்மை அறிய ஒரு வழிமுறை போதாது அல்லது சரியாக இருக்காது என்று கருதினார். இதனை விளக்குவதற்கு சமணர்கள் அதிகம் பயன்படுத்தும் உதாரணம் கண்பார்வையற்ற அறுவர் யானையினைத் தடவிப் பார்த்துச் சொன்னவற்றைக் கொண்டு தமது அநேகாந்தவாதத்தை நிறுவுவர். "யானை தூண் போன்றது." "யானை முறம் போன்றது" எனப் பலவாறு கூறுவது முழு உண்மையல்ல என்றாலும் ஓரளவு உண்மை என்றே ஏற்கவேண்டும் என்பது சமணரது அறிவுத்தோற்றம் பற்றிய கருத்தாகும். எதைப்பற்றி அறிய முற்பட்டாலும், அங்ஙனமிருக்கலாம் என்றே கூறுவர். இதனை சமணம் சியாத்வாதம் என்றழைக்கிறது. அதனை ஏழு பகுதிக்குள் அடக்குவர்.

1. ஆம்
2. இல்லை
3. ஆம் இல்லை
4. சொல்லொண்ணாதது
5. ஆம் மற்றும் சொல்லொண்ணாதது
6. இல்லை மற்றும் சொல்லொண்ணாதது
7. ஆம், இல்லை, சொல்லொண்ணாதது

www.padippakam.com

**சியாத்வாதம்** என்ற இந்தப் பகுத்தறிவு பகுதியறிவேயன்றி, முற்றறிவு அல்ல. எந்த முடிவிலும் முழு உண்மை இருக்க முடியாது பகுதியளவே உண்மையாகும் என்று பன்மைவாதம் பேசுகிறது சமணம்.

இந்தப் பகுத்தறிவைக் கொண்டு கடவுள் இருப்பை சமணர் மறுக்கின்றனர். இவ்வுலகம் படைக்கப்பட்டதில்லை, என்றும் இருந்துவருவதாகும் என்பதே சமணர்களது கருத்து. இவ்வுலகைப் படைக்கக் கடவுள் தேவையெனில், அவரைப் படைக்க மற்றொரு கடவுள் தேவை, அவரைப் படைக்க வேறொரு கடவுள் என்று தொடக்கத்தை காண முடியா நிலையேற்படும். படைக்கப்படாத கடவுள் உண்டென்பதைவிட, இவ்வுலகை படைக்கப்படாதது, என்றும் உள்ளது என்ற முடிவே சிறப்பாக இருக்க முடியும் என்பது சமணர்களது கடவுள் மறுப்புச் சிந்தனையாகும்.

புத்தர் அப்பாலைவாதக் கேள்விகளுக்கு விடையளிப்பதில் நேரம் செலவிடாது, இவ்வுலகில் காணும் துன்பங்களுக்குக் காரணம் எது என்பதையும் அதற்கான விடிவையும் தேடினார்.

புத்தர் கூறியதை ராகுல்ஜீ ***பவுத்த தத்துவவியல்*** என்ற நூலில் கூறுகிறார்:-

> *"உங்கள் சந்தேகம் சரியானதுதான். சந்தேகத்தின் இடத்தில்தான் சந்தேகம் பிறந்திருக்கிறது. வேதங்கள் சொன்னவை என்பதற்காகவோ, யாரோ ஒருவர் சொன்னார் என்பதற்காகவோ எதையும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். தர்க்கத்தின் வலிமையினாலோ, ஏதோவொரு காரணத்தினாலோ சொன்னவரின் உருவத்தால் கவரப்பட்டோ, தனது சொந்தக் கருத்துக்கு அனுசரணையாக இருக்கிறது என்பதற்காகவோ, சொன்னவர் தமது ஆசானாயிற்றே என்று எண்ணியோ எதையுமே ஒப்புக் கொள்ளாதீர்கள். நீங்கள் சுயமாகச் சிந்தித்து அவர்கள் கூறுபவை நல்லவை, குறைகளற்றவை, அறிஞர்களால் மெச்சப்பட்டவை, அவற்றை ஏற்றுக் கொள்வதால் நலமும், மகிழ்ச்சியும் உண்டாகும் என்றால், அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ளுங்கள்."*
>
> *(பக்கம் 44)*

புத்தரது இந்தச் சொற்பொழிவு பகுத்தறிவுக் கண்ணோட்டத்தை தெளிவுபடுத்துவதாக இருக்கிறது. வேதம் சொல்கிறது என்பதற்காகவோ, முன்வைக்கப்படும் கருத்து தர்க்கத்தின் வலிமை மட்டும் பெற்றிருந்தாலோ, சொன்னவரின் உருவத்தின் கவர்ச்சியினாலோ, சொன்னவர் தமது ஆசானாயிற்றே என்ற எண்ணத்தாலோ ஏற்றுக் கொள்ளாதீர்கள் என்றுரைக்கிறார் புத்தர்.

அப்பாலைத் தத்துவத்தை புத்தர் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை ***"தீக நிகாயம்"*** என்ற நூலில் புத்தர் வாசிட்டனோடு உரையாடுவதில் அறிந்து கொள்ள முடிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

பிரம்மநிலையை அடைந்தவரை கண்ணாரக் காணாமல், இதுவரை யாரும் பிரம்மத்தை அடைந்ததாக உறுதிப்படுத்த முடியாத நிலையில், பிரம்மத்தை அடைவதற்கான வழிமட்டும் தெரியும் என்று கூறும் போக்கை கேள்விக்குள்ளாக்குகிறார் புத்தர்.

வேதங்களின் தொடர்ச்சியாக தோன்றிய பூர்வ மிமாம்சை என்ற போக்கு, கடவுள் மறுப்பில் உறுதியாக நிற்கிறது. மிமாம்சை என்பதின் சொற்பொருள், முறையாக விசாரித்தல் என்பதாகும். ஆனால் முறையாக விசாரித்தல் என்றவுடன் வேதத்தில் கூறப்பட்டவை சரியானதா அல்லது தவறானதா என்ற வகையில் இந்த விசாரணை செல்லவில்லை. வேதத்தில் கூறப்பட்ட விதிமுறைக்கு ஏற்ப நடத்தப்படுகிறதா இல்லையா என்பதையே ஆராய்கிறது. இந்த ஆராய்வு முறையின் அடிப்படையில்தான் கடவுள் மறுப்பை வெளிப்படுத்துகிறது.

இந்திய மதங்கள் உண்மையை அறிய மூன்று பிரமாணங்களைப் பொது வாகப் பயன்படுத்துவண்டு. பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம். இந்த மூன்றைக் கொண்டும் கடவுள் உண்மையை அறிந்திட முடியவில்லை என்பதே பூர்வ மிமாம்சகர்களின் வாதமாகும்.

கடவுள் உண்டு என்பதைப் பிரத்யச்சமாக காட்டுவது முடியாத ஒன்று. பிரத்யட்சமே அனுமானத்திற்கு அடிப்படை. பிரத்தியட்சத்தில் காண முடியாதது அனுமானத்திலும் உணர முடியாது. எப்படி என்றால் அனுமானம் என்பது முன்பு பிரத்யட்சமாகப் பார்த்ததின் அடிப்படையில் உணர்வதாகும். அதாவது பக்கத்து மலையில் புகை வருகிறது என்றால் அங்கு நெருப்பு எரிகிறது என்று அனுமானிக்க முடிகிறது. இதனை முன்பு நெருப்பு எரிவதையும் அதனால் புகை வருவதையும் பிரத்தியட்சமாகக் கண்டதின் அடிப்படையிலே அனுமானிக்கப் படுகிறது. அதனால் பிரத்யட்சமாக காணமுடியாததை அனுமானத்தாலும் உணர முடியாது.

வேதக் கடவுள் நம்பிக்கையாளர்களுக்கு வேதத்தில் கடவுளைப் பற்றி கூறப்பட்டுள்ளதால் அதுவே கடவுள் உண்மையை நிரூபிக்கிறது என்பர். ஆனால் மீமாம்சகர்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. வேதத்திற்கு இந்தச் சிறப்பு எங்கிருந்து வந்தது என்பதற்கு, வேதக் கடவுள் நம்பிகையாளர்கள், வேதத்தை கடவுளே படைத்தார் என்கின்றனர். கடவுள் தாமே படைத்த ஒன்றில், தமது உண்மையை வெளிப்படுத்தினார் என்றால் இதனை எவ்வாறு ஏற்க முடியும? ஏற்பதென்பது விசித்திரமான முடிவாகத்தான் இருக்கிறது என்கின்றனர் மீமாம்சகர். இதனைத் தொடர்ந்து மீமாம்சகர்கள் எடுக்கும் முடிவு மற்றொரு விசித்திரமான போக்கை அடைகிறது. வேதம் என்றும் நிலை பெற்றுள்ளவையாகும், அதற்கு தோற்றம் என்பது கிடையாது அதனை யாரும் படைத்திடவும் இல்லை, எழுதிடவும் இல்லை, என்றென்றும் நிலைத்திருப்ப



படிப்பகம்

www.padippakam.com

தாகும். பகுத்தறிவால் கடவுள் உண்டென்பதை மறுதலித்த மீமாம்சையினரின் முடிவு இவ்வகையில் முடிகிறது.

இந்தியாவில் தொன்மையான சிந்தனை மரபில் உலகாயதமும் ஒன்றாகும். இதன் நேரடிப் படைப்புகள் கிடைக்கவில்லை. இவர்களது கருத்தை மறுத்துரைத்தவர்கள் தொகுத்தவற்றைக் கொண்டு, அன்றைய உலகாயதர்களின் கண்ணோட்டத்தை அறிந்திட முடிகிறது.

உலகாயதம், இந்திய தத்துவப்பிரிவில் நெடுங்காலமாக இருந்துவருகிறது. ஆத்மாவையையும், மறுவுலக வாழ்க்கையையும் மறுத்து, உலகம் என்பது உள்பொருள் என்று எடுத்துரைப்பதால் இத்தத்துவப்போக்கிற்கு உலகாயதம் என்று பெயர் பெற்றது.

உடல் உருவாவதற்கு முன்பும், உடல் அழிவடைந்ததின் பின்பும், அதாவது உடலுக்கு வேறாக உள்ள ஆத்மா என்பதை உலகாயதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பூதங்களின் சேர்க்கையின் போது உயிர் உண்டாகிறது. பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு இதில் இல்லாத சிவப்பு நிறம், இவற்றின் சேர்க்கையில் தோன்றுவது போல் பூதங்களின் சேர்க்கையால் உயிர் உண்டாயிற்று. இல்லா ஆத்மாவுக்கு மோட்சம், மேலுலகம் என்பதெல்லாம் மதவாதிகளின் பித்தலாட்டம் என்கின்றனர் உலகாயதர்.

இந்த உண்மைக்கு மாறாக, கண்ணுக்குப் புலனாகாத ஆத்மா உண்டு என்றும், முற்பிறவியில் செய்த வினைகளை நீக்கும் பொருட்டு இறைவன் இரக்கப்பட்டு உடலைக் கொடுத்தான் என்பதும் மதவாதிகளின் பிதற்றல். இந்த மயக்க மொழிகளுக்கு ஆளாக வேண்டாம் என்கின்றனர் உலகாயதர்கள்.

இறந்தவர்களுக்கு செய்யும் சிரார்த்தம் (திவசம்) மேலுலகில் உள்ளவர்களுக்கு சென்றடையும் என்றால், பல்வேறு இடங்களுக்கு பயணம் மேற்கொள்பவர்கள் தமது உணவுத் தேவைக்காக எதனையும் உடன் எடுத்துச் செல்ல வேண்டாம், இவர்களின் ஊரிலிருந்தே அவ்வப்போது உணவை அனுப்பலாமே?

இதுபோன்று தமது கருத்தோட்டங்களை கேள்விகளின் அடிப்படையில் பகுத்தறிவின் வழியில் விளக்கினர் உலகாயதர்.

ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவம் தனது முதலடியினை வைத்திடும் போது, நிலப்பிரபுத்துவம் மத நம்பிக்கையில் பிணைந்தும் இணைந்தும் காணப்பட்டது. முதலாளித்துவத்திற்கு தேவைப்பட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கு அன்றைய நிலப்பிரபுத்துவமும், மதமும் தடையாய் இருந்தன. அக்கால கட்டத்தில் பகுத்தறிவுவாதிகள் பலர் தோன்றினர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர். ரெனே தெகார்தே (1596-1650). இவர் ஒன்றைப் பற்றி ஐயம் கொள்வதாலும், கேள்வி எழுப்புவதாலும் சரியான முடிவை எட்ட முடியும் என்று கூறினார். அனுபவத்தைக் கொண்டு எதையும் முடிவெடுக்கக் கூடாது.



படிப்பகம்

எடுக்கப்படும் முடிவு, அறிவு வழிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது அவரது கருத்தாகும்.

அனுபவத்தால் ஏற்படும் அறிவென்பது பொய்த்திட வாய்ப்பிருக்கிறது. ஆனால் சிந்தனையால் ஏற்படும் அறிவானது ஏற்புடையதாக இருக்கிறது என்கிறார் தெகார்தே.

ஐயமே அறிவுக்கு வழி என்பதை வலியுறுத்துகிறவர், அனைத்தையும் சந்தேகித்து ஒதுக்கித் தள்ளுவது என்பது இவரது நோக்கமல்ல. ஐயம் என்னும் கருவியைக் கொண்டு தெளிவான உண்மையைக் கண்டறிய வேண்டும் என்பதே இவரது முடிபாகும்.

உண்மையை அறிவதற்குச் சிந்தனையே திறவுகோல். சில நேரங்களில் சிந்தனை தவறாயப் போவதற்கான காரணத்தை தெகார்தே சுட்டிக்காட்டுகிறார். மனித மனதில் ஆயிரக்கணக்கான கருத்துகள் தோன்றுகின்றன. இந்தச் சிந்தனை முறையில் இரண்டு நிலைகள் செயற்படுகின்றன. ஒன்று அறிநிலை மற்றொன்று செயல்நிலை. இது உண்மை-பொய், நல்லது-தீயது, சரி-தவறு என்று வேறுபடுத்திப் பார்ப்பது அறிநிலை. அறிநிலையை மீறும்போது அல்லது கணக்கில் கொள்ளாதபோது தவறு ஏற்படுகிறது. அறிநிலையின் முடிபு எப்போதும் சரியான உண்மையாகவே இருக்கும்.

அறிதலைப் பற்றி தெகார்தேயின் கோட்பாடு கலப்பற்ற அறிவிலிருந்து தோன்றியது. அறிதலில் அனுபவத்திற்கு எந்தப் பங்கும் இல்லை என்பது ஐரோப்பியப் பகுத்தறிவுவாதிகளின் கருத்தாகும். அறிவு என்பது சிந்தனையினால் மட்டும் தோன்றுவதாக தெகார்தே கருதுகிறார்.

சிந்தனையின் தோற்றுவாய் அகநிலையில் இருப்பதாக இந்தப் பகுத்தறிவுவாதிகள் எண்ணிக்கொள்வதால், சிந்தனையில் தவறுகள் ஏற்படுவது ஏன் என்பதை அறிய முடியாமல் இருக்கின்றனர். சமூகத்தில் ஒருவருக்குச் சரி எனப்பட்டது மற்றவருக்கு ஏன் தவறு என்று தோன்றுகிறது. நல்லது என்று ஏற்றுக் கொண்டவை சிலருக்கு தீயதாகப் போனதற்கான காரணங்கள் என்ன என்பதற்கு விடை இந்த பகுத்தறிவுச் சிந்தனையில் கிடைக்காது. சிந்தனையின் முடிவு தவறாகப் போனதற்கு காரணம் அறிநிலையை மீறிச் செயற்படுவதே காரணம் என்று சுட்டுவதன் மூலம் கருத்து என்பதை அகநிலையானதாகவே இந்தப் பகுத்தறிவு காண்கிறது. சிந்தனையின் தோற்றத்திற்கான புறநிலைக் காரணங்களைப் பகுத்தறிவுவாதம் புரிந்து கொள்ளவில்லை.

## தந்தை பெரியார்

*தமிழகத்தில் தந்தை பெரியார் பகுத்தறிவுச் சிந்தனையைத் தூண்டியவராவார். கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றை நம்பிவிடக் கூடாது. எழுதி*

www.padippakam.com

*வைத்திருப்பதாலேயே ஒன்றை நம்பிவிடக் கூடாது, வெகு காலமாக நடைபெற்று வருவதாகத் தெரிவதனாலேயே ஒன்றை நம்பக் கூடாது. அனேகம்பேர் பின்பற்று கிறார் என்பதனால் அதை நம்பிவிடக் கூடாது. எந்த விசயமானாலும் நம் முடைய புத்திக்கு ஆச்சரியமாய்த் தோன்றுவதாலேயே அதைத் தெய்வீகம் என்றோ மந்திரச் சக்தி என்றோ நம்பிவிடக் கூடாது. (33.4.1)* என்று எதனை யும் பகுத்தறிவோடு சிந்திக்க வைத்தவர் தந்தை பெரியார்.*

*பெரியார் எதனையும் புத்தியைக் கொண்டு தான் முடிவெடுக்க வேண்டும், மற்ற சிறப்புகளின் அடிப்படையில் அதனை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று கூறுகிறார். இது மட்டுமல்லாது யாருக்கும் எசமான் கடவுளோ, மதவாதிகளோ அல்ல. அறிவுதான் எசமானன். தான் கூறியதையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் பகுத்தறிவிற்குச் சரியெனப் பட்டதை மட்டுமே ஏற்றுக் கொண்டு மற்றவற்றைத் தள்ளிவிடும்படி பெரியார் வலியுறுத்துகிறார். (33.4.22)*

*நா.வானமாமலை பெரியார் நூற்றாண்டின்போது பெரியாரின் நாத்திக வாதத்தை ஆராய்ந்து, அதன் பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து, பெரியாரின் நாத்திகக் கருத்துகளை மார்க்சிய தத்துவத்தின் அடிப்படை யில் கற்று, அறிவியல் அறிவின் முடிவுகளோடு இணைத்துப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று கூறினார்.*

1, *இந்தியத் தத்துவங்கள் அனைத்துமே கடவுள் நம்பிக்கையைப் போதிக்கவில்லை. மாறாக, மிகப் பெரும் பான்மையானவை கடவுளை மறுக்கின்றன.*

2, *நமது பண்டைய நாத்திகவாதிகளின் பலவீனங்களை, மார்க்சீயம்தான் நிவர்த்தி செய்து, அவர்களது நாத்திகவாதத்தை தருக்க நிலையில் இருந்து, கீழே கொணர்ந்து வாழ்க்கை நிலையோடுள்ள தொடர்பைச் சுட்டிக் காட்டுகிறது.*

3, *இன்று, மார்க்சீயம் உலகெங்கும் பரவியுள்ள நிலையில்கூட, நமது பண்டைய நாத்திகவாதிகளின் கடவுள் மறுப்பு வாதங்கள், பயனுள்ள தர்க்க வாதங்களாகவே உள்ளன. அவற்றை முற்போக்காளர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.*

*மேற்கூறிய மரபும் அதன் தற்கால வளர்ச்சியான மார்க்சீயமும் வளர்ந் துள்ள நாத்திகத்தின் அடிப்படையில் பெரியாரின் நாத்திகவாதத்தை*

---

இங்கு பயன்படுத்தும் பெரியாரின் படைப்புகள் முனைவர் மா.நன்னன் தொகுத்த ''பெரியார் கணினி'' என்ற நூலில் இருந்து எடுத்தாளப் பட்டுள்ளது. வெளியீடு ஞாயிறு பதிப்பகம் 11, முதல் தெரு, அரங்கராசபுரம், சைதாப்பேட்டை, சென்னை 600015.



படிப்பகம்

www.padippakam.com

மதிப்பிட வேண்டும். மார்க்சீயவாதிகள் பெரியாரின் நாத்திகத்தை, சமூக வளர்ச்சிப் போக்கின் வெளிப்பாடாக ஆராய வேண்டும். இத்தகைய ஆராய்ச்சி இன்னும் துவங்கவில்லை.

ஆராய்ச்சி துவங்கு முன்னரே, முடிவுகளுக்கு வருவது மார்க்சீயவாதி களின் மரபல்ல. ஆயினும் சில மேற்போக்கான கருத்துக்களை இங்குக் கூறலாம். பெரியார் முரணற்ற நாத்திகர். "கடவுள் இல்லை. இல்லை. கடவுளை நம்புபவன் முட்டாள்" என்ற அவருடைய முழக்கங்களை, அவரு டைய சிலை களின்கீழ் செதுக்கி வைத்துள்ளார்கள். அவருடைய சுயமரி யாதை இயக்கத்தில் இருந்து பிரிந்து வந்தவர்கள் கடவுளை ஒப்புக் கொண்டு நாத்திகத்தை கைவிட்டார்கள். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற முழக்கத்தை அரசியல் சௌகரியத்துக்காக மேற்கொண் டார்கள்.

பெரியார் கடவுள் எதிர்ப்போடு, மூட நம்பிக்கைகளை எதிர்த்தும் பிரச் சாரம் செய்தார். தீமிதியின் தெய்வத் தன்மையை மறுத்து, எவ்வித விரதங் களும் இல்லாமல், கடவுள் இல்லை என்று முழங்கிக் கொண்டு அவருடைய மாணவர்கள் தீமிதி நடத்தினார்கள்.

கடவுளை, சமூகமும், அரசும் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி நிலையில் படைத்தது என்ற மார்க்ஸீய சிந்தனையை அறியாமல் அவர் சமூகப் படைப்பின் ஒரு பிரிவினரான பிராம்மணரையே, கடவுளைப் படைத்தவர் களாகவும், தங்கள் பிழைப்புக்கு தாங்கள் படைத்த மாயையான கடவுளையே பயன்படுத்தினார்கள் என்றும் கூறினார்.

பிராம்மணரையும், சூத்திரரையும் சமூக வரலாறு படைத்தது என்ற உண்மையை அவர் அறிபவில்லை.

அவருடைய நாத்திகம் பொது அறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது. அதில் விஞ்ஞானக் கொள்கைகளை அவர் பயன்படுத்தவில்லை. எனவே அது காடுமுரடாக இருந்தது.

அவருடைய காலத்தில் மார்க்சீயத்தைக் கற்றுணர வாய்ப்பு இருந்தது. ஆனால் அவருடைய நாத்திகத்தில் மார்க்சீயப் பொருள்முதல்வாதத்தின் தாக்கம் எதுவும் இல்லை. பண்டையப் பொருள்முதல்வாதிகள் வாதங் களின் சிலவற்றை அவர் பயன்படுத்திக் கொண்டார்.

அவருடைய நூற்றாண்டு விழாவில் நாத்திக சிந்தனையை மிகவும் துணிச்சலோடு மக்களிடையே பிரச்சாரம் செய்தார் என்பதை நினைவு கொள்வோம். அவருடைய பிரசாரம் பல நாத்திகர்களை உருவாக்கிற்று என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் வளர்ந்துவரும் அறிவியல் உண்மைகள், அவற்றின் அடிப்படையில் உருவாகும் அறிவியல்



படிப்பகம்

*கொள்கைகள், இவ்வறிவியல் கொள்கைகளைக் கிரகித்துக் கொண்டு வளர்ச்சி பெற்றுவரும் மார்க்சீய தத்துவம், இவற்றினின்று அவருடைய நாத்திகம் விலகியே நிற்கிறது. இதுவே அதனுடைய பலவீனம்.*

*தமிழக மார்க்சீயவாதிகள், முற்போக்காளர்கள் அவருடைய் நூற்றாண்டின் போது, அவருடைய நாத்திகவாதத்தை ஆராய்ந்து, அதன் பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து, பெரியாரின் நாத்திகக் கருத்துக்களை மார்கசீயத் தத்துவத்தின் அடிப்படையில் கற்று, அறிவியல் அறிவின் முடிவுகளோடு இணைத்துப் பிரச்சாரம் செய்ய வேண்டும்."*

*—இந்திய நாத்திகமும் மார்க்சீயத் தத்துவமும்*

நா.வானமாமலை கூறிய ஆலோசனையை முழுமையாகத் தமிழக மார்க்சியவாதிகள் செய்திடவில்லை. அதுமட்டுமல்லாது பெரியாரைப்பற்றி பல முரண்பட்ட கருத்துகள் தமிழக மார்க்சியவாதிகளிடம் நிலவுகிறது. இதனைப் போக்க வேண்டும் என்றால் நா.வானமாமலை கூறியதைப்போல் மார்க்சிய பார்வையில் பெரியாரை முழுமையாக அணுக வேண்டிய கட்டாயம் நமக்கிருக் கிறது. இதற்கான இடம் இதுவல்ல என்றாலும், இதனை இங்கு தொடங்கி வைக்கலாம்.

பெரியார் மூடநம்பிக்கைகளைக் களைவதற்கும், சாதி வேற்றுமைகளை நீக்குவதற்கும், பெண்விடுதலைக்கும் போராடியவர். சுயமரியாதை, பகுத்தறிவுவாதம் என்ற கோட்பாடுகளைக் கொண்டு தமது கண்ணோட்டத்தை வகுத்துக் கொண்டவர்.

மனித தர்மத்தை அடிப்படையாக வைத்து, மனித சமுதாயத்திற்கு யாராவது தொண்டாற்ற வேண்டுமானால் முதலில் செய்யவேண்டியது, பகுத் தறிவுப்படி மக்களை நடக்கச் செய்வதும் சிந்திக்கச் செய்வதுமே யாகும். மனிதன் தனக்குள்ளாகவே, தான் மற்றவனைவிடப் பிறவியில் தாழ்ந்தவன் என்கிற உயர்வு தாழ்வு உணர்ச்சியைப் போக்கித் தன்னம்பிக்கையும், சுயமரியாதையும் பெறவேண்டும் என்பதினை வலியுறுத்தி, தமது நீண்டகால வாழக்கை முழுவதும் சோர்வில்லாமல் போராடியவர். இறுதிவரை தமது வாழ்க்கையைப் போராட்ட களமாகவே அமைத்துக் கொண்டவர் பெரியார்.

பகுத்தறிவு, கடவுள், மதம், ஆத்மா போன்றவற்றைப் பற்றி பெரியார் கூறுவதைப் பார்ப்போம்.

*மனிதன் தன்னைக் காப்பாற்ற மட்டும் போதிய அறிவை அடைந்திருப்ப தோடு அதற்கும் மேம்பட்ட அறிவையும் அடைந்திருக்கிறான். அப்படி அதிகமாக அடைந்துள்ள அறிவுதான் பகுத்தறிவு. (33.1.2)*

*பகுத்தறிவு என்பது யாவற்றையும்விட மேலானது. சிந்தித்தும், ஆழ்ந்து யோசித்தும், ஆராய்ந்தும், அனுபவத்தை யொட்டியும், சூழ்நிலைக்கேற்ற*

www.padippakam.com

வண்ணமும் அப்போதைக்கப்போது தன் வாழ்க்கையின் நிலையை மாற்றி அமைத்துக் கொள்வதும் வாழ்க்கையின் நலனுக் கேற்றவாறு ஒவ்வொரு புதிய சாதனங்களையும் அமைத்துக் கொள்வதும் இதன் சம்பந்தப்பட்ட தாகும். (33.1.3)

—சிந்திக்கும் தன்மையின் கூர்மையே பகுத்தறிவு. (33.1.19)

கடவுள் சம்பந்தமான விஷயங்களில் மக்களுக்குத் தெளிவேற்படுத்தி, அவர்களை ஒழுக்கம் உள்ளவர்களாகவும் மோட்சம், நரகம் ஆகிய கற்பனைச் சொற்களுக்குப் பயப்படாதவர்களாகவும் ஆக்குவதே பகுத்தறிவுவாதிகளின் முக்கியப் பணியாகும். (33.1.16)

மனிதனுக்கு நம்பிக்கை வழி நடப்பதை விட்டுவிட்டு. அறிவின் வழியில் சென்று சிந்திக்க வேண்டும். எதுவும் அறிவிற்கு நிற்கின்றதா என்று உரசிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் மனிதன் காட்டுமிராண்டி நிலையிலிருந்து மனிதத் தன்மை அடைமுடியும் (33.4.24)

ஆத்மா என்பது கண்ணுக்குத் தெரியாதது என்றும் சரீரம், உருவம், குணம் இல்லாதது என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே. சரீரம் உருவம் இல்லாததற்கு நாம் பார்ப்பனரிடம் கொடுக்கும் அரிசி, பருப்பு, செருப்பு, விளக்குமாறு ஆகியவை எப்படிப் போய்ச் சேரும்? அவற்றை ஆத்மா எப்படி அனுபவிக்க முடியும்? (43.2.2)

ஆத்மா என்பது ஒரு பொய். மதக் கற்பனைக்கு ஒரு பொய்ப் பாதுகாப்பே அல்லாமல் வேறல்ல. ஒரு பொய்யை நிலைநிறுத்தப் பல பொய் பேச வேண்டியி ருப்பதுபோல், மதத் தத்துவம் என்னும் பொய்யை நிலை நிறுத்தவே ஆத்மா மோட்சம், நரகம், மறுபிறவி, விதி, தர்மம் என்பதாகப் பொய்க் களஞ்சியக் கற்பனைகளை ஏற்படுத்த வேண்டியதாயிற்று. (43.2.10)

எல்லாம் ஆண்டவன் செயல் என்றும், விதிப்பயன் என்றும் நம்பிக் கிடப்பவன் பகுத்தறிவு சூன்யம் என்பது வெள்ளிடைமலை. (43.3.5)

கடவுளும். மதமும். பக்தியும் மனிதனை நாசமாக்கி விடுகின்றன. இம் மூன்றும் உடையவனுக்குச் சுதந்திரமே இல்லை. அவன் அறிவைப் பயன்படுத்த மாட்டான். எதை எடுத்தாலும், கடவுளுக்கு விரோதம், மதத் துக்கு விரோதம், சாத்திரத்துக்கு விரோதம் என்று பயந்து கொண்டே இருப்பான். அறிவின்படி ஆராயக் கூடாதவைகள்தான் கடவுள், மதம், சாத்திரங்கள் வெறும் நம்பிக்கை தான் அவற்றுக்கு ஆதாரம். இப்படிப் பட்டவன் அறிவில் முன்னேற முடியுமா? (33.10.19)

நீங்கள் எந்த முறையில் கடவுளை நிர்ணயித்தாலும் எந்த முறையில் எவ்வளவு நல்ல கருத்தில் மதத்தை நிர்மாணித்தாலும் பலன்கள் எல்லாம்



படிப்பகம்

*ஒன்றாகத்தான் இருக்குமே தவிர மூட நம்பிக்கைக் கடவுளைவிடக் குருட்டுப் பழக்க மதத்தைவிடச் சீர்திருத்தக் கடவுளும் பகுத்தறிவு மதமும் ஒன்றும் அதிகமாய்ச் சாதித்துவிடப் போவதில்லை. (33.10.2)*

இவ்வாறு பெரியார் மதத்தையும், கடவுளையும் சாடிப் பகுத்தறிவின் துணையோடு சிந்திக்கும்படி தூண்டுகிறார். தமிழச் சமூகத்தில் பொதுவாக அனைத்துச் செயற்பாடும் மத நம்பிக்கையோடு இணைந்து காணப்படுகிறது. அதனால் மத மறுப்பாளர்கள், தம் கருத்தை மக்களிடம் எடுத்துச்செல்வதில் அச்சவுணர்வோடு இருந்த நேரத்தில், தந்தை பெரியார் தம் மத மறுப்புக் கருத்தை வெளிப்படையாக தமிழகம் முழுமைக்கும் சென்று பரப்பினார். இச்சாதனையைக் கண்ட பிறகும், இன்றைய நிலைமையில்கூட மார்க்சிய வாதிகளில் சிலர் மதமறுப்பை மக்களிடம் எடுத்துச் செல்லத் தயங்குகின்றனர். இதனைத் தாண்டி மக்களிடம் எடுத்துச் செல்பவருக்கு வழிகாட்டியாக இருப்பவர் தந்தை பெரியாராவார்.

இந்து மதச்செயற்பாட்டில் காணப்படும் மூடநம்பிக்கை மற்றும் மனிதனி டத்தில் காட்டும் ஏற்றத் தாழ்வு போன்றவற்றைக் கடுமையாக எதிர்த்தவர் பெரியார். அதே நேரத்தில் இந்து மதத்தின் தோற்றம் முதல் இன்றைய வளர்ச்சி வரையிலான நிலையினைப் பற்றிய முழுமையான விமர்சனத்தை நமக்கு அளித்திடவில்லை. இந்துமத நடைமுறையில் காண்பதிலிருந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இந்த முறையில்தான் மற்ற மதங்களையும் குறிப்பாக வெளிநாடுகளி லிருந்து வந்த மதங்களில் காணப்படும் மூடப்பழக்கங்களை மட்டும் எதிர்த்தார்.

மதத்தின் மூடச் செயற்பாட்டை எதிர்த்த பெரியார், பொதுவான மதத்தின் தோற்றம், அதன் இன்றைய நிலையின் தன்மை, பிறகு அதன் மறைவு என்ற வழியில் மதத்தை முழு ஆய்வுக்கு உட்படுத்தவில்லை.

இதன் விளைவாக, சமூகத்தில் காணும் அனைத்து முரண்பாடுகளுக்கும் கடவுளையும், மதத்தையும் காரணமாக்குகிறார் பெரியார். மதம் மனிதர்களின் சிந்தனையை மட்டுப்படுத்துகிறது என்று கூறும் பெரியாரின் கூற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம். இந்த மட்டுப்படுத்தும் செயல் யாருக்காக செய்யப்படுகிறது என்று அடையாளம் காட்டாமல், மத நடவடிக்கையில் ஈடுபடும் பார்ப்பனர்களையும், மதத்தைப் பரப்புபவர்களையும் முதன்மைப்படுத்தி எதிர்க்கும்போது, இவை யாருடைய நலன்களுக்காகச் செய்யப்படுகின்றன என்பது அடையாளம் காட்டப்படாமல் போகிறது. பார்ப்பனர்கள் பணம் பறிக்கின்றனர் என்ற உண்மையின் ஊடே, மத நம்பிக்கைகள் எந்தச் சுரண்டல்வாதிகளின் நலன்கள் காக்கப்படுகிறது என்பதையும் வலியுறுத்த வேண்டும்.

www.padippakam.com

இந்து மத எதிர்ப்பு என்பது, பார்ப்பன எதிர்ப்போடு நின்றுவிடுவதில்லை. மதத்தின் வர்க்கத் தன்மையைப் புரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது. தந்தை பெரியார் மத நடவடிக்கையின் வர்க்கத் தன்மையை வலியுறுத்தாமல் போனதால், அவரது மத எதிர்ப்பென்பது பார்ப்பன எதிர்ப்போடு நின்றுவிடு கிறது. பார்ப்பனர்கள் சுரண்டும் வர்க்கத்திற்கான அறிவுத்துறைப் பணி யினைச் செய்தவர்கள். வர்க்கச் சார்பான அறிவை எதிர்ப்பதோடு, சுரண்டும் வர்க்கத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும். இன்றைய முதலாளித்துவ வர்க்கத்திற்கான அறிவுத்துறைப் பணியினை செய்துவருபவர்களில் பார்ப்பனர் கள் மட்டும் இடம் பெறவில்லை என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். முந்தைய சமூகத்தில் பார்ப்பனர்களின் செயற்பாட்டை எதிர்க்கும் அதே நேரத்தில், இன்றைய சமூகத்தில் சுரண்டும் வர்க்கத்தையும், இவர் களுக்குத் துணைபோகும் அறிவுத்துறையினரைப் புரிந்தும், அறிந்தும் எதிர்க்க வேண்டும். ஏனெனில் இன்றைய சுரண்டும் வர்க்கத்திற்கான அறிவுத் துறையாளர்கள் பார்ப்பனர்களை மட்டும் கொண்டிருக்கவில்லை.

இந்திய சமூகத்தில் காணும் முரண்பாட்டிற்கு மதநம்பிக்கையை மட்டும் காரணப்படுத்துவதால், சமூகத்தில் காணும் அனைத்து முரண்களும், பகுத்தறிவு ஏற்பட்டால் தீர்ந்துவிடும் என்ற புரிதலுக்குச் சென்றுவிடுகிறார் பெரியார்.

பெரியாரின் கூற்றை நேரடியாகப் பார்ப்போம்.

*நமது இழிநிலை நமது முட்டாள்தனம் மாறவேண்டுமானால் நாம் ஒன்றும் பெரிய கஷ்டப்பட்டு முயற்சி செய்யவேண்டியதில்லை. பகுத்தறிவு கொண்டு தாராளமாய்ச் சிந்தித்தால் போதும். நமது கொள்கை பகுத்தறிவு. பகுத்தறிவு என்றால் நாத்திகம் என்பது பொருள். அறிவு கொண்டு சிந்திப்பதுதான் நாத்திகம் ஆகும். (33.1.18)*

*சமுதாயத் துறையில் இன்றுள்ள வேற்றுமை, பகைமை, துவேசம், இழிவு, தரித்திரம், மடமை முதலிய குணங்கள் மனிதன் அறிவுக் குறைவினால் பகுத்தறிவைச் செவ்வனே பயன்படுத்தாததால் ஏற்பட்டவை என்றுதான் சொல்ல வேண்டுமே ஒழிய காலக் கொடுமையாலோ கடவுள் தன்மையாலோ அரசாட்சியாலோ ஏற்பட்டது என்று எவரும் சொல்லிவிட முடியாது. (33.4.3)*

*பகுத்தறிவு இன்று எல்லா மக்களுக்கும், எல்லாத் துறையிலும் செலுத்தப்படுவது சாத்தியமாக இருக்கக்கூடுமானால் மனிதச் சமுதாயத்தில் இன்று காணப்படும் பேத நிலைமைகளும், போதாமை உணர்ச்சிகளும், மனக் குறைகளும், ஒப்பற்ற போட்டித் தன்மைகளும் இருப்பதற்கு இடமே இல்லாமல் போய்விடும். (33.6.2)*



படிப்பகம்

www.padippakam.com

*இவ்வாறு சமூகத் தீங்கிற்கு மதமே காரணம் என்று கூறும்போது, சமூக முரணிற்கான மூல காரணத்தை அறியாமல், அந்த மூலகாரணத்திற்கு துணை போகும் மதத்தையே முதன்மைப்படுத்தும் போது இலக்கு மாறிப் போகிறது. அம்பை எய்தவனுடன் போராடுவதை விடுத்து அம்புடன் மோதுவது, எய்தவனை தப்பிக்க வைத்துவிடும்.*

*சமூக முரணிற்கு காரணமான இந்த சமூக பொருளாதார அமைப்பை அறிந்து கொண்டு, அதனை மாற்றுவதற்கான வழிமுறைகளைத் தேடாமல், அதற்குத் துணைபுரியும் மதம், அரசாங்கம் போன்றவற்றை மட்டுமே குறிவைக்கும்போது, நடைமுறையில் காணப்படும் சமூக அமைப்பைத் தக்கவைக்கத் துணைபுரிவது போலாகிவிடுகிறது.*

*"இந்த நாட்டில் பணக்காரன் என்றும் ஏழை என்றும் இரு பிரிவுகள் இருக்கக் காரணம் என்ன வென்று நினைக்கிறீர்கள்? இதற்கு முன்ஜென்மம் பின்ஜென்மம் பித்தலாட்டம்தான் காரணம். பாவம், புண்ணியம் என்ற பித்தலாட்டம்தான் காரணம். ஏழையும் பிச்சைக்காரனும் தன் ஏழ்மைத் தன்மையை ஒப்புக் கொண்டு பொறுத்துக் கொண்டிருப்பதுதான் காரணம்." (43.9.12)*

*"நம் நாட்டில் பெரும்பான்மை மக்களின் ஏழ்மைக்குக் காரணம் இந்தப் பாடுபட்ட மக்கள் பாடுபடாத சோம்பேறிக்கு மோட்சம் பெற விரும்பித் தாம் சம்பாதித்த பணத்தையெல்லாம் கொடுத்து விடுவதால் வரும் வினைப் பயன்தானே. இந்த மடமை நீங்காதவரை இவர்கள் ஏழ்மை நீங்காது. இவர்கள் நாகரிகமும் அடைய முடியாது." (43.4.3)*

மக்கள் ஏன் கடவுளை நாடிச் செல்கிறார்கள் என்பதற்கான காரணங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், கடவுள் நம்பிக்கையால் பணம் எல்லாம் புரோகிதர்களுக்குச் செல்கிறது என்று வருத்தப்படுவதோடு நின்று விடுவதால், அதாவது பிரச்சனையின் தோற்றத்திற்கான காரணத்தை அறிந்துகொள்ள முடியாமல் போகிறது.

இந்தப் புரோகிதர்களின் செயல்களும், மதப் பிரச்சாரகர்களின் நடவடிக்கைகளும் பணம் படைத்தவர்களின் நலன்களின் அடிப்படையில்தான் செயல்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பாடுபடாத சோம்பேறிகள் புரோகிதர்கள் மட்டுமல்ல, உடலுழைப்பு செய்யாத சோம்பேறிகளின் அணியில் முதலில் இடம்பெறுபவர் பணம்படைத்தவர்களே. இந்தப் பணம்படைத்தவர்கள்தான் உழைப்பாளர்களைச் சுரண்டிப் பெற்ற பணத்தை, உடல் உழைப்பில்லாத மற்ற பணியாளர்களுக்குப் பெரும் அளவிற்கு அளிக்கின்றனர்.

பணக்காரர்களின் நலன்களைக் காப்பதற்காகவே மத நம்பிக்கைகள் நிலைநாட்டப்படுகிறது. மதம், தத்துவம், அரசு போன்ற மேற்கட்டமைப்பு முழு



படிப்பகம்

www.padippakam.com

வதும் சுரண்டும் வர்க்கத்தின் நலன்களுக்கு சேவை செய்வதற்கு உருவானவை யேயாகும்.

ஏன் இதனைக் குறிப்பிட வேண்டிவருகிறது என்றால், தொழிலாளர்கள், கூலிப் போராட்டம், பொருளாதாரம் பற்றிய பெரியாரின் பார்வையினைக் காணும்போதும், இதனைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிவருகிறது.

தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வைப் போராடிப் பெற்றுத் தரும் அரசியல்வாதிகளை மிகச் சாதாரணமாகத் தள்ளிவிடுகிறார்.

பெரியார் கூறுகிறார்:-

> ''தொழிலாளருக்குப் பாடுபட்டோம் என்று சொல்லும் சிலர் தங்களால்தான் கூலி உயர்ந்து விட்டதென்று கூறலாம். ஆனால் கூலி வேலை செய்பவன், தோல் வேலை செய்பவன், வண்டி ஓட்டுபவன், புல் விற்பவன் இன்றைக்கு முன்பைவிட நான்கு மடங்கு அதிகமாகக் கூலி சொல்கிறானே, அவனுக்காக யார் பாடுபட்டார்கள்? எந்தக் கட்சி பாடுபட்டது? அரிசி மூட்டை ரூ10க்கு விற்றது, இபொழுது (1965) ரூ 45க்கு விற்கிறதே, அவர்கள் எந்தச் சங்கம் வைத்து விலை ஏற்றினார்கள்? சில அரசியல் கட்சியினர் வேண்டு மென்றே ஒன்று மறியாத தொழிலாளரிடம், நாங்கள்தான் பாடுபட்டோம் என்று சொல்லி ஏமாற்றுகிறார்கள். காலம், சூழ்நிலை இவைகளால் தானாகவே பொருள்களின் விலை அதிகமாயிற்று, கூலியும் அதிகமாயிற்று.'' (38.1.1)

இந்தக் கருத்துகளை நோக்கும்போது பெரியாரின் பொருளாதார அறிவு வறட்சி வெளிப்படுகிறது. கூலிக்கான போராட்டம் நடத்துவதையே சந்தேகித்து, பகுத்தறிவை மட்டும் பிடித்துக் கொண்டிருந்தால் சமூக மாற்றம் எவ்வாறு நிகழும்? காலம் சூழ்நிலை இவற்றால் தானாகவே மாறுகிறது என்றால், இந்தச் சமூகப் பொருளாதாரச் சுரண்டல் அமைப்பை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ள வேண்டிவரும். இந்த ஆபத்தைக் கணக்கில் கொள்ள வேண்டியிருக்கிறது.

மேலும் பெரியார் கூறுகிறார்:-

> ''நம் பொருளாதார ஏற்றத் தாழ்விற்குக் காரணமே கடவுள், மதம், சாத்திரம்தான். எப்படி என்பீர்கள்? நீ எப்படிடா பணக்காரன் என்று ஒருவனைக் கேட்டால் அவன் என்ன சொல்லுகின்றான். எனது சாமர்த்தியத்தால் சம்பாதித்தேன் என்று சொல்லுவது கிடையாது, கடவுள் அருளால் கிடைத்தது என்கின்றான். லட்சுமி கடாட்சம் என்கிறான். அதை மற்றவனும் நம்புகிறான்.'' (38.2.8)

பணக்காரன் தமது சாமர்த்தியத்தையும் கடவுள் அருளியதே என்று சேர்த்துத்தான் கூறுகிறான். பணக்காரனைக் காப்பாற்றும் சக்திதான் மதம்.



படிப்பகம்

www.padippakam.com

மேற்கட்டமைப்புக்குக் காரணமான பொருளாதாரத் தன்மைகளை மனதில் கொள்ளாமல், மதம், அரசுப்பொறியமைப்பு போன்றவற்றோடு மட்டும் போராடினால், வெற்றி என்பது பெரியார் கூறுகிற "காலம், சூழ்நிலை" இவற்றுக்காக காத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

சமூக மாற்றத்தின் விதியையும், சமூக வளாச்சியின் நியதியையும் அறிந்திடாமல் பகுத்தறிவு ஒன்றே போதும் என்பது சமூகத்தைப் புரிந்து செயல்படுவதிலிருந்து நம்மைத் தடுத்துவிடும். **"காலம், சூழ்நிலை இவைகளால் தானாகவே பொருள்களின் விலை அதிகமாயிற்று, கூலியும் அதிகமாயிற்று"** என்ற பெரியாரின் கூற்று சமூகவளர்ச்சியைப் பற்றிய கருத்தோட்டம் ஏதுமின்றி காலத்திற்கு முன் கைகட்டி நம்மை நிற்கச்செய்கிறது.

> *"பொருளாதாரச் சமத்துவத்தால் சமுதாயப் பேதாபேதங்கள் அகன்று விடும் என்பது மேல் நாடுகளுக்குச் சற்றுப் பொருத்தமானதாயிருக்கலாம். மேல்நாட்டு மக்கள் எல்லோருமே ஒரே மதத்தைத் தழுவியவர்கள் ஆவார்கள். எனவே இயல்பிலேயே அங்குச் சமுதாயத்தில் பேதா பேதம் இல்லாமலிருந்து வருகிறது. நம் நாட்டு நிலை அப்படி இல்லை. (இங்குப் பிறவியிலேயே பேதாபேதம் கற்பிக்கப்பட்டு மக்கள் பல சாதிகளாகப் பிரிந்து கிடக்கிறார்கள்)." (38.3.13)*

இங்கு பெரியார் இந்தியாவில் பிறவியால் ஏற்படும் ஒடுக்குமுறை என்பது, பொருளாதார நலன்களின் விளைவாய் ஏற்பட்ட சித்தாந்தப் போக்கு என்பதைப் புரிந்து கொள்ளாமல், பிறப்பால் பிரித்து வைத்திருக்கும் சித்தாந்தத்துடனான மோதலாக மட்டுப்படுத்துகிறார்.

சிந்தனையின் தோற்றுவாயை அறிந்திடாமல், பகுத்தறிவின் துணையை மட்டும் நாடுவதால் என்ன அறிவைப் பெற்றுவிட முடியும்?

> *"பகுத்தறிவு என்றால் அன்றன்றைய கருத்துக்கேற்ப நடப்பிற்கேற்ப நம்மை மாற்றிக் கொள்வதுதான்." (33.1.14)*

கருத்துகள் ஏன் மாறுகின்றன, அந்த மாற்றத்தை நிகழ்த்துவது எது, அதற்கான சமூகக் காரணம் என்ன என்பதெல்லாம் பகுத்தறிவுச் சிந்தனைக்குள் அகப்படுவதில்லை

> *"செல்வம் என்பது உலகின் பொதுச்சொத்து. அதாவது மக்கள் அனைவரும் அனுபவிக்க உரிமையுள்ள சொந்தமான சொத்தாகும். அதை யார் உண்டாக்கி யிருந்தாலும் உலகத்தில் உள்ளவரை எந்தச் சீவனுக்கும் அது பொதுச் சொத்தாகும். அனுபவிக்கும் உரிமை போல அதை அழியாமல் பாதுகாக்கவும் உரிமை உண்டு." (38.3.15)*

இந்தக் கூற்று நம்மை அராஜகப் போக்கிற்கே இட்டுச் செல்லும். தனியுடைமையின் தோற்றத்தையும் சாரத்தையும் அறிந்துகொள்ளாமல் எடுத்த முடிபாகும். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையைத் தமிழகத்தில் முதன்முறையாக



படிப்பகம்

மொழியாக்கம் செய்து வெளியிட்ட பெரியாருக்கு, விஞ்ஞானக் கம்யூனிசத்தின் மேல் பிடிப்பு ஏற்படவில்லை என்பதை இது காட்டுகிறது. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் நேரடி நூல்கள் தமிழகத்தில் தமிழில் கிடைக்கும் காலத்தில் வாழ்ந்தவர் பெரியார். ஆனால் விஞ்ஞானக் கம்யூனிசம் அவரைச் சிறிதளவிற்கும் பாதிக்கவில்லை என்பதும் அதிலிருந்து விலகியே இருந்தார் என்பதும் நம் தமிழ்நாட்டிற்கு கிடைத்த கெட்ட வாய்ப்பாகும்.

> *"நம் நாட்டில் கடவுள்களுக்கு இருக்கும் செல்வங்களைக் கைப்பற்றி தொழிற்சாலைகள் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தினால் வேலையில்லாத் திண்டாட்டமும் தற்குறித் தன்மையும் அந்நிய நாட்டார் வியாபாரத்தின் பேரால் சுரண்டுதலும்* ***இந்நாட்டில் அரைநிமிடமாவது இருக்க முடியுமா?****" (38.7.7)*

சமூகச் சீரழிவிற்கு மூலதனப் பற்றாக்குறைதான் காரணம் என்பதாக இங்குப் பெரியார் கூறுகிறார். மூலதனத்தின் ஆதிக்கத்தை புரிந்துப் கொள்ளாததால்தான் இவ்வாறான முடிவிற்கு வரமுடிகிறது.

மூலதனத்திற்கும் மதத்திற்கும், மூலதனத்திற்கும் தொழிலாளர்களைச் சுரண்டுவதற்கும் உள்ள இணைப்பை புரிந்து கொள்ளாமல் போனால் இன்றைய சமூகத்தின் சுரண்டலை எவ்வாறு அறிந்து போராடுவது?. "**இந்த அரைநிமிடத் தீர்வு**" என்பது சமூகப் போராட்டத்தை மிகவும் எளிமைப் படுத்திவிடுகிறது.

> *"தொழிலாளர் சங்கம் என்று வைத்துக்கொண்டு அதன்மூலம் தொழிலாளர்கள் உயர வேண்டும், முதலாளிகள் ஒழிய வேண்டும் என்று கூப்பாடு போடுவது (இனி எனக்கு) அர்த்தமற்றதாகவே தோன்றுகிறது. சக்ரவர்த்திகளை ஒழித்து விட்டோம். அரசர்களை ஒழித்துவிட்டோம். சமீனை ஒழிக்கிறோம். முதலாளிகள் மாத்திரம் ஏன் ஒழியாமல் இருக்க வேண்டும்? ஆகவே முதலாளிகள் என்ற தன்மையும் ஒழியுமானால் தொழிலாளிகள் எப்படி இருக்க முடியும் என்று சிந்தித்துப் பாருங்கள்" (28.2.6)*

தொழிலாளர் இருப்பிற்காக முதலாளியின் தேவை என்ற அடிப்படையில் புரிந்து கொள்வது, முதலாளித்துவத்திற்கு முதலாளியும் அதாவது முதலாளியிடம் சேகரமாகியிருக்கும் பணமும், பழைய உற்பத்தி முறையிலிருந்து விரட்டப்பட்ட தொழிலாளர்களின் படையும் தேவை. இவற்றில் ஒன்றைக் கொண்டு முதலாளித்துவம் செயற்படமுடியாது. இவற்றில் ஒன்று சுரண்டுகிறது, மற்றொன்று சுருண்டலுக்கு ஆளாகிறது. தொழிலாளியின் வாழ்வென்பது முதலாளியின் இருப்போடு மட்டும் புரிந்து கொள்வது முதலாளிக்கு ஆதரவான கருத்தேயாகும்.

இத்தோடு பெரியார் தனது கூற்றை நிறுத்திக் கொள்ளவில்லை. மேலும் கூறுகிறார் :-

www.padippakam.com

*"முதலாளி தொழிலாளி என்கிற பிரச்சினை எங்கிருந்து வந்தது? மூட நம்பிக்கையிலிருந்து வந்ததல்ல. அந்தப் பிரச்சினை ஆதாரத்தோடுதான் உள்ளது. எப்படி இருக்கிறான் முதலாளி? சட்டத்தின்படி இருக்கிறான். அரசாங்கத்தின் பாதுகாப்பின்படி இருக்கிறான். அரசாங்கத்தின் சலுகை யில்தான் அவன் முதலாளியாக வாழ முடிகிறது. ஆகையால் முதலாளி கூடாது என்றால் அவனைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் மீது திரும்ப வேண்டும். முதலாளி மீது பாய்வதால் பலன் ஏதுமில்லை. முதலாளிகள் மீது போராட்டம் துவக்கித் தொழிற்சங்கங்கள் இந்த அம்பது வருடக் காலமாகச் சாதித்தது என்ன?" (28.2.10)*

இங்கு அரசாங்கம் என்பதற்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து அதுவே முதலாளித்துவத்தை உருவாக்கியது போல் காட்டப்படுகிறது. முதலாளித்துவத் திற்குத் தேவையான மேற்கட்டமைப்பாக அரசாங்கம் தோற்றம் பெற்றுள்ளது. அதனால்தான் அது முதலாளித்துவச் சார்பான வர்க்கத் தன்மையுடன் செயற்படுகிறது என்பதுதான் மார்க்சியம்.

தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தைக் கடுமையாக எதிர்க்கிறார் பெரியார்.

*"ஸ்ட்ரைக் என்றால் இதில் ஈடுபடுபவர்கள் பரம முட்டாள்கள். இதை நடத்துகிறவர்கள் பரம அயோக்கியர்கள். அதாவது சட்டம், அமைதி, கட்டுப்பாடு, ஒழுக்கம், நேர்மை ஆகியவற்றில் சிறிதும் கவலை அற்றவர்கள். இப்படிபட்ட இவர்களைக் கொண்டு நடத்தப்படும் காரியம் எப்படி ஒழுங்காக இருக்க முடியும்?" (28.3.11)*

அரசாங்கத்தின் கருவிகளைக் காப்பாற்றிவிட்டு, முதலாளி இல்லையேல் தொழிலாளி இல்லை என்று முதலாளியையும் காப்பாற்றிவிட்டு, வெறும் அரசாங்கத்தை மட்டும் எதிர்ப்பது என்பது, அரசு என்பதின் தோற்றத்தையும், அதன் வாக்க தன்மையையும் அறிந்திடாததின் விளைவேயாகும்.

அரசாங்கம் என்பது ஆளும் முதலாளித்துவத்துக்கு சார்பான ஒடுக்கும் கருவியாகும், ஒடுக்குவர்களை விட்டுவிட்டு ஒடுக்கும் கருவிகளைக் குறைசொல்வதால் என்ன பயன் கிட்டிவிடும்?

சமூகப் பொருளாதார அமைப்பின் அடித்தளத்தின் மீதுதான் அரசாங்கம், மதம், சித்தாந்தம் போன்ற மேற்கட்டமைப்புகள் அமைந்துள்ளன என்பதைப் பெரியார் ஏற்றுக் கொள்ளாததால், முதலாளித்துவ அமைப்பின்மீதான போராட்டத்தை முதலாளிமீதான போராட்டமாகப் பார்க்கிறார். ஆனால் இங்கு பெரியாரின் தொழிலாளர் மற்றும் கம்யூனிச எதிர்ப்புக் கருத்தினைப் பற்றி விமர்சிப்பதைவிட, பெரியார் மதத்தை எதிர்த்து நடத்திய போராட்டத்தை விமர்சனக் கண்கொண்டு புரிந்து செயல்படுவதோடு நிறுத்திக்கொள்வோம்.



படிப்பகம்

www.padippakam.com

மதம் பற்றிய எதிர்ப்பென்பது மக்களிடமிருந்து நம்மைப் பிரித்துவிடும் என்ற எண்ணத்தைக் கொண்டுள்ளவர்களின் இடையில் பெரியார் மதத்தை மிகவும் கடுமையாக எதிர்த்தும், மக்கள் மதிப்பைப் பெற்றும் அதனை இன்னும் இழக்காமலும் இருக்கிறார். நம் நாட்டில் மதம் என்பது மக்களின் முழு வாழ்வோடும் இணைந்து பிணைந்து காணப்படுகிறது. அதனை எதிர்ப்ப தென்பது மிகவும் கடினமான செயலேயாகும். இந்தப் பணியை செவ்வனே செய்த தந்தை பெரியாரின் பணியினை இன்றைய கம்யூனிஸ்டுகள் தமது இயக்கவியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தின் வழியில் செழுமைப் படுத்தி பின்தொடர வேண்டும். இதனை விடுத்துப் பெரியாரின் பொருளதாரக் கண்ணோட்டத்தில் வீழ்ந்தோமானால், வர்க்கப் போராட்டத்தைப் பாட்டாளி வாக்கச் சர்வாதிகாரத்தை நோக்கி எடுத்துச்செல்லும் பாதையை விட்டு விலகி மாற்றுப் பாதையில் பயணிக்க நேரிடும்.

பகுத்தறிவுவாதத்தின் பொதுவான குறைபாடு என்னவென்றால், மதத்தையும் கடவுள் சிந்தனையையும் உடனடியாகச் சித்தாந்தப் போராட்டத்தால் தூக்கி எறிய முயல்வதாகும். மத உணர்விற்கான வேர்கள் புறநிலையாக இருக்கும்போது அதனைப் பிடுங்கி எறிவதென்பது நடவாத காரியம். மத இருப்பிற்கான காரணங்கள் இருக்கும் வரையில் மதம் சமூகத்தில் பிரதி பலித்துக் கொண்டிருக்கும் என்பதை பகுத்தறிவுவாதிகள் ஏற்றுக் கொள்வ தில்லை.

"இயற்கையான அதன் மரணத்தில் மதம் மறையும் வரையில் ஹெர் டூரிங்கால் காத்திருக்க முடியாது" (டூரிங்குக்கு மறுப்பு) என்று எங்கெல்ஸ் சொல்வதுபோல் பகுத்தறிவுவாதிகளால் மதத்தின் சமூக வேர்களைப் புரிந்து கொள்ளாமல் மதத்தின் இருப்பிற்கான புறநிலைக் காரணங்கள் மறையும்வரை பொறுத்திருக்காமல் மதத்தோடு நேரடி போராட்டத்தைக் கைக்கொள்கின்றனர்.

வர்க்கப் போராட்டத்திற்கு அப்பாற்பட்ட அறிவுத்துறைப் பிரச்சினையாக மதத்தைப் பார்ப்பது தவறானப் பாதை என்றும், அந்தப் போக்கு கருத்து முதல்வாதப் பாணியில் அணுவதாகவே ஆகும் என்றும் லெனின் கூறுகிறார். மேலும் மதமெனும் மூட நம்பிக்கைகளை வெறும் பிரசாரத்தின்மூலம் நீக்கிவிட முடியும் என்பது அசட்டுத்தனமானது. தொடர்ந்து லெனின் கூறுகிறார்:-

> *"மனிதகுலம் மதமெனும் நுகத்தடியின்கீழ் வதைபடுவது, சமுதாயத்தி லுள்ள பொருளாதார நுகத்தடியின் விளைவும் பிரதிபலிப்புமே ஆகுமென் பதை மறப்பது முதலாளித்துவக் குறுகிய பார்வையையே குறிக்கும். முதலாளித்துவத் தின் இருண்ட சக்திகளை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் தானே போராடு வதன்மூலம் அது அறிவொளி பெறாத வரை, எத்தனைப் பிரசுரங்களை வெளியிட்டாலும், எவ்வளவுதான் உபதேசம் செய்தாலும் அதை அறிவொளி பெறச் செய்துவிட முடியாது."*
>
> *—சோஷலிசமும் மதமும்*



படிப்பகம்

www.padippakam.com

பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தின் இருண்ட சக்திகளை எதிர்த்துப் போராடும்போது ஏற்படும் அறிவொளியைப் பெறும்போதுதான், பொருளாதார விளைவின் பிரதிபலிப்பான மதமெனும் மூட நம்பிக்கையை நீக்க முடியும் என்கிறார். அதாவது வெறும் நூல்களின் மூலம் கல்வி புகட்டுவதால் மதத்தை நீக்கிவிட முடியாது. மக்களே எழுச்சியடைந்து மதத்தின் மூலவேர்களை எதிர்த்துப் போராடும்போதுதான் மதத்தைத் துடைத்தெறிய முடியும் என்கிறார் லெனின்.

இதனால் மதத்திற்கெதிரான கல்வி புகட்டுவது தேவையற்றது என்று பொருள்கொள்ளக் கூடாது. வர்க்கப் போராட்டத்திற்கு உட்பட்டதாக நாத்திகப் பிரச்சாரம் இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாது தூய மார்க்சிய போதனை என்னும் நேரான பாதையிலேதான் இந்த இருளிலிருந்து விடுபட்டு வெளியே வர முடியுமென நினைப்பது, மார்க்சியவாதி செய்யும் மிகக் கடுந் தவறாகும் என்கிறார் லெனின். அதனால் பதினெட்டாம் நூற்றாண்டின் பழைய நாத்திக இலக்கியத்தை படித்தறிய வேண்டும். உப்புச்சப்பில்லாத மார்க்சிய சலிப்பூட்டும் பொழிப்புரையைக் காட்டிலும், பதினெட்டாம் நூற்றாண்டின் நாத்திகர்களது அறிவாற்றல் மிக்க இலக்கியம் ஏற்றவை என்கிறார் லெனின்.

> *“மதத்தால் மயக்குண்ட நிலையிலிருந்து மக்களைத் தட்டியெழுப்புவதற்கு மிகப் பல சந்தர்ப்பங்களிலும் இவை, மார்க்சியத்தின் உப்புச்சப்பில்லாத, சலிப்பூட்டும் பொழிப்புரைகளைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு கூடுதலாய் ஏற்றவையாய் இருக்கும். திறம்படத் தெரிந்தெடுக்கப்பட்ட உண்மை களைக் கொண்டமைந்த எடுத்துக்காட்டுகள் வாயிலான விளக்கங்கள் அனேகமாய் எவையுமில்லாத இப்படிப்பட்ட பொழிப்புரைகள்தான் நமது வெளியீடுகளில் மிகவும் மலிந்திருக்கின்றன. இவையும் (இவ்வுண் மையை மறைத்துப் பயனில்லை) அடிக்கடி மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டுவனவாகவே இருக்கின்றன. மார்க்ஸ், எங்கெல்சின் பிரதான நூல் கள் யாவற்றின் மொழிபெயர்ப்புகளும் நம்மிடம் இருக்கின்றன, ஆகவே பழைய நாத்திகமும், பழைய பொருள் முதல்வாதமும், மார்க்சும், எங்கெல் சும் அவற்றில் புகுத்திய திருத்தங்களால் சரிசெய்யப்பட்டுச் செம்மை யாக்கப்படாமல் இருந்து விடுமென்று அஞ்சக் காரணம் சிறிதும் இல்லை.”*
>
> *—போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் முக்கியத்துவம் குறித்து*

தமிழகத்தைப் பொருத்தளவிலும் மார்க்ஸ், எங்கெல்சின் பிரதான நூல்கள் தமிழில் வெளிவந்திருக்கின்றன. அதன் வழிகாட்டுதலின்படி பெரியார் போன்றோரின் நாத்திக இலக்கியங்களைத் தமிழ் வாசகர்களுக்கு அளித்திட வேண்டும். பதினெட்டாம் நூற்றாண்டின் நாத்திக இலக்கியத்தைப் படிப்பதுப் பற்றி லெனின் கூறிய ஆலோசனையின்படி நமது ஊரில் கிடைக்கும் நாத்திக இலக்கியத்தை வெளியிட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

*"... பதினெட்டாம் நூற்றாண்டின் பழைய நாத்திக இலக்கியம் பழமைப் பட்டுவிட்டது. விஞ்ஞானத்துக்கு ஒவ்வாததாகவும் சிறுபிள்ளைத்தனமாக வும் ஆகிவிட்டது என்றெல்லாம் காரணம் கூறப்படுகிறது. இத்தகைய போலியான விஞ்ஞானக் குதர்க்கத்தைக் காட்டிலும் மோசமானது எதுவும் இல்லை. பகட்டுப் புலமையை அல்லது மார்க்சியத்தைப் பற்றிய அறவே தவறான உணர்வை மூடி மறைக்கவே இந்தக் குதர்க்கம் பயன்படுகிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் புரட்சியாளர்களுடைய நாத்திக நூல்களில் விஞ்ஞானத்துக்கு ஒவ்வாததும் சிறுபிள்ளைத்தனமானதும் நிறைய இருப்பது மெய்தான். ஆனால் இந்நூல்களில் பதிப்பாளர்கள் இவற்றைச் சுருக்கி வெளியிடுவதையும், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக்குப் பிற்பாடு மதங்களைப் பற்றிய விஞ்ஞான விமர்சனத்தில் மனிதகுலம் கண்டிருக்கும் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டியும், இப்பொருள் குறித்து அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள புத்தகங்களைக் குறிப்பிட்டும், இன்ன பிற விவரங்களைக் கூறியும் சுருக்கமான பின்னுரைகளை இந்நூல்களுக்கு அளிப்பதையும் யாரும் தடுத்து நிற்கவில்லை. கோடிக் கணக்கான மக்கள் (முக்கியமாய் விவசாயிகளும் கைத்தொழிலாளர் களும்) நவீன காலச் சமுதாயம் அனைத்தாலும் இருளிலும் அறியாமையி லும் மூடநம்பிக்கையிலும் வதையும்படி இருத்தப்பட்டிருக்கும் இவர்கள் கலப்பற்ற தூய மார்க்சிய போதனை என்னும் நேரான பாதையிலேதான் இந்த இருளிலிருந்து விடுபட்டு வெளியே வர முடியுமென நினைப்பது, மார்க்சியவாதி ஒருவர் புரியக்கூடிய மிகப் பெரிய, மிகக் கடுந் தவறாகி விடும். இந்த வெகுஜனங்களை நாட்டங்கொள்ளும்படிச் செய்வதற்காக வும், மதத்தால் மயக்குண்ட நிலையிலிருந்து இவர்களை விழித்தெழச் செய்வதற்காகவும், மிகப் பல்வேறுபட்ட கோணங்களிலிருந்து உசுப்பி விடுவதற்காகவும், இன்ன பிறவற்றுக்காக வும், இவர்களுக்கு நாம் மிகப் பல்வேறுபட்ட நாத்திகப் பிரசார வெளியீடுகளும் கிடைக்கச் செய்ய வேண்டும். வாழ்க்கையின் மிகப் பல்வேறுபட்ட துறைகளி லிருந்துமான உண்மைகளை இவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். சாத்தியமான எல்லா வழிகளிலும் இவர்களை அணுகியாக வேண்டும்."*

*—போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின்
முக்கியத்துவம் குறித்து*

பதினெட்டாம் நூற்றாண்டின் நாத்திக இலக்கியங்கள் விஞ்ஞானத்துக்கு ஒவ்வாததாக, சிறுபிள்ளைத்தனமானதாக இருந்தாலும் இந்நூல்களை வெளியிடும் பதிப்பாளர்கள், இதனைச் சுருக்கியும், பதினெட்டாம் நூற்றாண் டின் இறுதியில் மதங்களைப் பற்றிய விஞ்ஞான விமர்சனத்தில் ஏற்பட்ட முன் னேற்றத்தைச் சுட்டிக்காட்டியும், பின்னுரைகள் எழுதியும் வெளியிடவேண்டும் என்று லெனின் கூறுகிறார். நம் காலத்தில் இதனைக் கணக்கில் கொண்டு, இந்த ஆலோசனைகளைப் பின்பற்றி இந்திய நாத்திக இலக்கியங்களைப் பதிப்பித்து வெளியிடவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# 6. மதத்தின் தேவையின்மையும் மறைவும்

**(இக்கட்டுரை எங்கெல்சின் 'டூரிங்குக்கு மறுப்பு' என்ற நூலினை அடியொற்றி எழுதப்பட்டுள்ளது)**

மதம் சமூக வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்டக் கட்டத்தில் தோன்றியது.

தோன்றியவை தோற்றத்திற்கான காரணங்கள் இருக்கும்வரை நிலைத்திருக்கும், அந்தக் காரணங்களின் மறைவை ஒட்டிக் காரியமும் மறைந்து போகும். மதத்தின் தோற்றத்திற்குக் காரணங்களான இயற்கையைப் பற்றிய அறியாமை, சுரண்டல் உற்பத்தியின் போது காணும் நெருக்கடிகள் சமூகத்தின் மீறிய சக்தியாக உருவெடுத்து, மக்களின் கட்டுப்பாட்டிற்கு எதிராகவும் மாறாகவும் செயற்படுவதின் மறைவோடு மதமும் மறைந்து உலர்ந்து போகும்.

அதனால்தான் லெனின் மதத் தோற்றத்திற்கான சமூக (புற) சூழலை மாற்றுவதற்கான போராட்டத்தை முன்னிறுத்தி, மதக் கேடுகளிலிருந்து விடுபடும்படி கூறுகிறார்:-

> ''*மதக்கேடுகளின் மிக ஆழமான மூலாதாரம், இல்லாமையும் கல்லாமையும் ஆகும். இந்தத் தீங்குகளைத்தாம் நாம் எதிர்த்து நின்று சமாளித்தாக வேண்டும்*''
>
> —*உழைக்கும் மாதர்களின் முதலாவது*
> *அனைத்து ரஷ்ய காங்கிரசில் ஆற்றிய உரை*

இல்லாமை என்பதின் மூலம் சமூகத்தில் சுரண்டலும் அதற்குக் காரணமான வர்க்க வேறுபாடு இருப்பதையும், கல்லாமை என்பதின் மூலம் இயற்கையைப் பற்றிய அறியாமையையும் லெனின் குறிப்பிடுகிறார். இயற்கையை அறிதலுக்கான கல்வியும் அதன் தொடர்ச்சியான விஞ்ஞான வளர்ச்சியும், வர்க்கம் மறைவதற்கான சமூக பொருளாதார வளர்ச்சியும் இங்கு வலியுறுத்தப்படுகின்றன.

இயற்கையை அறிதலுக்கான விஞ்ஞான வளர்ச்சியாக எங்கெல்ஸ் மூன்று பெரும் கண்டு பிடிப்புகளைக் குறிப்பிடுகிறார். இயற்கை நிகழ்வுப் போக்குகளின் இடைத்தொடர்பைப் பற்றிய நம்முடைய அறிவு விரைந்து முன்னேறுவதற்கு அந்த மாபெரும் மூன்று கண்டு பிடிப்புகள் உதவுகிறது என்கிறார் எங்கெல்ஸ்.

1, ஆற்றலின் உருமாற்றம் 2, உயிரணு 3, பரிணாமக் கொள்கை ஆகியவை அன்றைய நூற்றாண்டின் மாபெரும் மூன்று கண்டுபிடிப்புகளாகும்.



படிப்பகம்

www.padippakam.com

**ஆற்றலின் உருமாற்றம்:-** உயிரற்ற இயற்கையில் உள்ளவற்றின் செயற்பாடுகள் எண்ணற்ற காரணங்கள் அனைத்தும் இதுவரை சக்திகள் என்ற பெயரால் விளக்க இயலாத, மர்மம் சூழ்ந்த வாழ்வியலையைக் கொண்டிருந்தன. ஆற்றலின் உருமாற்றம் என்ற கண்டிபிடிப்பு இயற்கையில் இயங்குகின்ற சக்திகள் என்று சொல்லப்படுபவை அனைத்தும் இயக்கத்தினுடைய வெளிப்பாட்டின் வெவ்வேறு வடிவங்களே என்று அறிந்து கொள்ள முடிகிறது. ஒரு பொருளில் குறிப்பிட்ட அளவு மறைகிறது என்றால் அந்த மறைந்தவை மற்றொன்றில் குறிப்பிட்ட அளவு தோன்றுகின்றன என்பது புரிந்து கொள்ளப் பட்டது. ஆகவே இயற்கையின் மொத்த இயக்கமுமே ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத்துக்கு மாற்றமடைகின்ற இடைவிடாத நிகழ்வுப்போக்காக, இந்த ஆற்றலின் உருமாற்றம் பற்றிய கண்டுபிடிப்புகள் நிரூபித்தது. இதனை ராபர்ட் மாயர், ஜீல், கோல்டிங் ஆகியோர் கண்டு பிடித்தனர்.

மேலும் எங்கெல்ஸ் கூறுகிறார்:-

*"பத்தாண்டுகளுக்கு முன்னால் மட்டுமே அப்பொழுது அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட இயக்கம் பற்றிய மாபெரும் அடிப்படை விதி வெறும் ஆற்றலின் அழியாநிலை விதியாக மட்டுமே, இயக்கத்தின் அழியாத் தன்மை மற்றும் படைக்கவியலாத் தன்மையின் வெளியீடாகவுமே, அதாவது அதன் அளவு அம்சத்தில் மட்டுமே கருதிப் பார்க்கப்பட்டு வந்தது. இந்தக் குறுகிய எதிர்மறைக் கருத்தோட்டம் மேலும் மேலும் ஆற்றலின் **மாற்றத்தைப்** பற்றிய நேர்நிலைக் கருத்திற்கு இடமளிக்க நேர்ந்தது. இந்த இயக்கப் போக்கின் குணாம்ச உள்ளடக்கம் முதன் முதலாகத் தன்நிலைக்கு வருகிறது. உலகியலுக்கு அப்பாற்பட்ட படைப்பாளரின் கடைசி எச்சம் ஒழிக்கப்படுகிறது. இயக்கத்தின் அளவு (ஆற்றல் எனப்படுவது) இயக்கம் சார்ந்த ஆற்றலிலிருந்து (யாந்திரிக இயக்கம்) மின்சக்தி வெப்பம், ஒடுக்க நிலை ஆற்றலாகவும் அது மறுபுறமும் மாற்றப்படும் பொழுது அது ஏதோ புதியது என்று இனிமேல் பிரசாரம் செய்ய வேண்டுவதில்லை. மாற்றமடைதலின் உண்மை நிகழ்ச்சிப் போக்கு பற்றியதான மிகவும் கருத்து நிறைந்த ஆராய்ச்சிக்குரிய இயற்கை பற்றிய சகல அறிவையும் உள்ளடக்கிய அறிவைக் கொண்ட அந்த மாபெரும் அடிப்படை நடைமுறையின் ஏற்கெனவே பெறப்பட்ட அடித்தளமாகச் செயல்படுகிறது."*

*—டூரிங்குக்கு மறுப்பு, பக்கம் 24 25*

பொருளின் இயக்கம் தனித்தனியாவை அல்ல, அனைத்துடனும் உட்தொடர்பு கொண்டவையாகும். ஆற்றல் இழப்பின்றி ஒன்று மற்றொன்றாக மாற்றம் அடைகிறது. ஆற்றலுக்கு மூலமும் கிடையாது, அழிவும் கிடையாது, ஆற்றலின் வடிவ மாற்றமே தொடர்ச்சியாக நடைபெற்றுவருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

ஆற்றலின் அழியாமையும், மாற்றமும் பற்றிய இந்த விதி, பொருளும், அதன் இயக்கமும் நிரந்தரமானவை, தோற்றுவிக்கவும் அழித்திடவும் முடியாதவை என்பதை உறுதிப்படுத்துகிறது.

**உயிரணு:-** எல்லா உயர்நிலை உயிரினங்களின் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஒரு பொது விதிக்கு ஏற்ப நடைபெறுவதை அங்கீகரிப்பதோடு, உயிரணுவுக்கு மாற்றமடைகின்ற தகுதி இருப்பதால் உயிரினங்கள் மாற்றமடையக் கூடிய, அதன்மூலம் தனிப்பட்ட வளர்ச்சியைக் காட்டிலும் சற்று மேலான வளர்ச்சியடைகின்ற முறை சுட்டிக்காட்டப்பட்டது. அங்கஜீவிகளின் பிறப்பு, வளர்ச்சி, அமைப்பு ஆகியவற்றைப் பற்றி இதுவரை இருந்த புரியாது இருந்த மர்மமான தன்மை களையப்பட்டது. இதுவரை அறிந்திட முடியாதிருந்த அற்புத வித்தை எல்லாப் பல ஜீவ அணுக்களால் அமைந்த அங்கஜீவிகளுக்கும் சாராம்சத்தில் ஒரே ஒரு விதியின்படி நிகழ்கிற மாற்றப்போக்குடன் இரண்டற ஒன்றிவிட்டது. இதனைக் கண்டுபிடித்தவர்கள் ஷ்வான், ஷ்லைடென் ஆகியோராவர்.

**பரிணாமக் கொள்கை:-** டார்வினால் கண்டுபிடிக்கப்பட்ட கொள்கை. இவ்வுலகில் நம்மைச் சுற்றியிருக்கும் உயிரினங்கள் அனைத்தும் தொடக்கத்திலிருந்த ஒரு சில ஒற்றை உயிரணுவைக் கொண்ட உயிரிகளிலிருந்து ஏற்பட்ட நீண்ட பரிணாமப் போக்கின் விளைவுகளாகும். எளிய உயிரினத்திலிருந்து சிக்கலான உயிரினங்களாக வளர்ச்சியடைந்திருக்கின்றன. மனிதன் விலங்கினத்தின் நெடிய பரிணாமத்தின் விளைவே, என்று டார்வின் அறிவியல் முறையில் நிரூபித்தார்.

இந்த முப்பெரும் கண்டுபிடிப்புகளின் மூலம் இயற்கையின் முதன்மையான மாற்றப் போக்குகளுக்கு விளக்கம் கிடைத்தன, இதன்மூலம் இயற்கையின் தோற்றம், நிலையிருப்பு, வளர்ச்சி ஆகியவற்றிற்கான காரணங்களை அறிந்திட முடிகிறது. இதனை அடுத்துப் பொருளாயத உலகிற்கு அப்பாலுள்ளவற்றிடம் வைத்திருந்த நம்பிகை என்பது தேவையற்றதாக்கியது. இயற்கை முழுவதின் இடைத் தொடர்பை, எவ்வித அயலான கலப்பின்றி உள்ளதை உள்ளவாறு இன்றைய பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தால் அறிய முடிகிறது.

இதனை எங்கெல்ஸ் கூறுகிறார்:-

> "*.. இயற்கையைப் பற்றிய பொருள்முதல்வாதக் கண்ணோட்டம் இன்று, சென்ற நூற்றாண்டில் இருந்ததைவிட, மிக உறுதியானதோர் அடித்தளத்தின் மீது நிற்கிறது. அந்தச் சமயத்தில் வான்கோள்களுடையவும், புவி ஈர்ப்பின் ஆளுகைக்குட்பட்ட நிலவுலகத்துத் திடப் பொருட்களுடையவும் இயக்கம் மட்டுமே முழுமையாக அறியப்பட்டு இருந்தது, ஏறக்குறைய இரசாயனவியலின் துறைமுழுவதும், உயிர்ப்புள்ள இயற்கை முழுவதும் மர்மமாகவும், புரியப் படாமலும் இருந்தன. இன்று இயற்கை முழுவதுமே, இடைத் தொடர்புகளினுடைய மாற்றப் போக்குகளின் ஓர்*

www.padippakam.com

*அமைப்பாக நம்முன்னே விரிந்து கிடக்கிறது, அதனுடைய பிரதான லட்சணங்களாவது இன்று குறைந்த பட்சம் விளக்கப்பட்டு புரியப்பட்டுள்ளன. எப்படியிருப்பினும், இயற்கையைப் பற்றிய பொருள்முதல்வாதக் கண்ணோட்டம் என்றால், எவ்வித அயல் கலப்புமின்றி, இயற்கையை உள்ளதை உள்ளவாறு எளிய முறையில் கருதுவது என்பதே பொருள்.''*

*—இயற்கையின் இயக்கவியல். 324 -325*

லெனின் கூறியபடி மதக்கேடுகளின் ஆழமான மூலாதாரத்தில் ஒன்றான கல்லாமை என்பது படிப்பறிவைப் பெற்று, அத்துடன் இந்த அறிவியல் வளர்ச்சியை அறிந்தவுடன் மதத்தின் தோற்றத்திற்கான முதல் வேர் (இயற்கையைப் பற்றிய அறியாமை) அகன்றுவிடுகிறது. இருந்தாலும் சமூக வேரான, வர்க்க முரண்பாடு மறையும்வரை மதம் இருந்துவரும், இந்த வேரின் நீக்கம் என்பது சமூக மாற்றத்திற்கான போராட்டத்துடன் இணைந்து காணப்படுகிறது.

வளர்ந்துவரும் முதலாளித்துவ அமைப்பு, தம்மால் உருவான நெருக்கடியைத் தடுக்கவும், தீர்க்கவும் முடியாத நிலையினை அடையும் என்பதை மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் விளக்கிவந்துள்ளனர். அதன்படி முதலாளித்துவத்தின் வளர்ச்சியையும் அழிவையும் புரிந்து கொள்வதும், அதற்கான போராட்டத்தை அறிந்து கொள்வதும் இன்றியமையாததாகும்.

வர்க்கத்தின் தோற்றத்தோடு மதத்தின் இருப்பை புரிந்துகொள்வது என்பது மத இருப்பிற்கான புறநிலைத் தன்மையை அறிந்து கொள்வதாகும். ''அரசியல், சட்டவியல், தத்துவஞான, சமய, இலக்கிய, கலை, இதர வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருக் கிறது, ஆனால் இவை அனைத்தும், ஒன்றின்மீது ஒன்றும், பொருளா தார அடிப்படையின் மீதும் எதிர்ச்செயல் புரிகின்றன.'' ( வொ.போர் கியுசுக்கு எழுதிய கடிதம், லண்டன், ஜனவரி 25, 1894) எங்கெல்ஸ் இங்கு வரலாற்றியல் பொருள்முதல்வாத அடிப்படையில் அடித்தளம் மேற்கட்டமைப்பு என்பதை விளக்குகிறார். அடித்தளத்திற்கு ஏற்ப மேற்கட்ட மைப்பு உருவாகிறது, அதாவது தனிச்சொத்து அடிப்படையில் அமைந்த சுரண்டல் சக்திகளுக்கு சார்பான அறிவுசார்ந்த செயல்களைச் செய்திட மேற்கட்டமைப்பான அரசியல், சட்டம், தத்துவம், இலக்கியம், கலை போன்று மதமும் சேவை செய்கிறது. அதனால்தான் ஆன்மீக ஒடுக்குமுறைகளில் மதமும் ஒன்று என்று லெனின் கூறியுள்ளார்.

சுரண்டலுக்கு ஆளான வர்க்கம் தமக்கு எதிரான இந்தச் சமூக அமைப்பைத் தூக்கி எறியப் போராடும் போது சுரண்டலாளர்களுக்குத் துணை போகும் இந்த மேற்கட்டமைப்பில் உள்ள அரசியல், சட்டம், தத்துவம், இலக்கியம், கலை, மதம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

வளர்ச்சியடைந்த உற்பத்தி முறையில், முரண்பாடுகளின் முதிர்ச்சி யினால், முதலாளித்துவ உற்பத்திமுறையின் வீழ்ச்சி தடுக்க முடியாமல் போகிறது. முதலாளித்துவத்தில் சமூகமயமாகிவிட்ட பொருளுற்பத்திக்கும், முதலாளித்துவச் சுவீகாரிப்புக்கும் இடையிலான முரண்பாடு, பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான பகைமையாய்த் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

முதலாளித்துவம் கொண்டுவரும் இந்தப் பொருளாதார நெருக்கடிகள் இதனையே வெளிப்படுத்துகின்றன. இதுவரையான முதலாளித்துவ உற்பத்தி முறையினால் பிறப்பிக்கப்பட்டு மேலும் கடுமையான பகைமையுடன் இடையறாது மறுஉற்பத்தியாக்கப் பெற்றதான இரு வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டம் வளர்ச்சியடைந்து வருகிறது.

ஒவ்வொரு முதலாளியும் தம்மிடம் இருக்கும் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு பண்டப் பரிவர்த்தனைக்காக உற்பத்தியில் ஈடுபடுகிறார். அவ்வாறு ஈடுபடும்போது குறிப்பிட்ட பண்டம் தாம் உற்பத்தி செய்வதைப் போன்று மற்ற முதலாளிகள் எவ்வாறு எவ்வளவு உற்பத்தி செய்து சந்தைக்கு அனுப்புகிறார் என்பதை அறியாமல், சந்தையை நோக்கிப் பண்டம் மிகையாய் சென்று தேங்குகிறது. இதனைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு நாசத்தை விளைவிக்கிறது. அதாவது சமூகமயமாகிவிட்ட பொருளுற்பத்தியில் அராஜகம் தலைவிரித்தாடுகிறது. இதனை எங்கெல்ஸ் கூறுவதைப் பார்ப்போம்:-

> *"சமூகமயமாகிவிட்ட பொருளுற்பத்திக்கும் முதலாளித்துவ சுவீகாரிப்புக்கும் இடையிலான முரண்பாடு இப்பொழுது தனிப்பட்ட தொழில் நிலையத்தில் பொருளுற்பத்தியின் ஒழுங்கமைப்புக்கும் பொதுவில் சமுதாயத்திலான பொருளுற்பத்தியின் அராஜகத்துக்கும் இடையிலான பகைமையாய்த் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது"*
>
> *—டூரிங்குக்கு மறுப்பு, பக்கம் 477*

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை இப்போது பரிவர்த்தனை முறையினை எதிர்த்துக் கலகம் புரிகிறது. பொருளுற்பத்திச் சக்திகள் (உற்பத்தி உறவுகள்) எதை மீறி வளர்ந்து விட்டனவோ அந்தப் பொருளுற்பத்தி முறைக்கு எதிராகக் கலகம் செய்கின்றன. இதன் மூலம் முதலாளித்துவ உற்பத்தி முறை தொடர்ந்து, இந்த உற்பத்தி சக்திகளை நெறியாண்மை செய்திடத் திறனற்றது என்பது நிரூபிக்கப்படுகிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை முதலில் தொழிலாளர்களை வெளியே தள்ளியது. இதனைத் தொடர்ந்து இறுதியில் முதலாளிகளையும் வெளியே தள்ளி, தொழிலாளர்களைச் செய்தது போலவே இவர்களையும் உடனடி யாகத் தொழில்துறை ரிசர்வ் பட்டாளத்தின அணிகளில் சேர்க்கவில்லை



படிப்பகம்

www.padippakam.com

என்றாலும், வேண்டாத உபரி மக்கள் தொகையின் அணிகளுக்குத் தாழ்த்தி விடுகிறது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ உற்பத்தி சக்திகளுக்கும் பழைய முதலாளித்துவ உற்பத்தி முறைக்கும் இடையிலுள்ள இந்த முரண்பாட்டை, பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலம் புதிய உற்பத்தி முறைக்கு மாற்றீடு செய்கிறது. சமூக மாற்றத்தின் மூலம் முதலாளித்துவத்தில் உற்பத்திச் சாதனங் களை, அவை இதுவரை தாங்கி இருந்த மூலதன இயல்பிலிருந்து விடுவித்து, சமூகத்தின் இயல்பாய் செயல்படுவதற்கு முழுச் சுதந்திரம் கிடைத்துவிடுகிறது.

உற்பத்திச் சாதனங்களைச் சமுதாயம் கைப்பற்றிக் கொண்டதும், பரிவர்த்தனைப் பண்ட உற்பத்திக்கு முடிவுகட்டப்பட்டு விடுகிறது. இதனுடன் கூடவே உற்பத்தியாளரை உற்பத்திப் பொருள் அடக்கி ஆண்மை செலுத்துவதும் ஒழிந்து விடுகிறது. சமூகப் பொருளுற்பத்தியில் அராஜகம் ஒழிக்கப்பட்டு திட்டப் பொருத்தமுடைய, உணர்வுபூர்வமான ஒழுங்கமைப்பு உண்டாக்கப்படு கிறது. தனிமனிதனின் பிழைப்புப் போராட்டம் மறைகிறது. இதற்குபிறகு மனிதன் முதன்முதலாய் ஒருவகைப் பொருளில் விலங்கின உலகிலிருந்து முடிவாய்த் துண்டித்துக் கொண்டு மெய்யான மனித வாழ்நிலைமைகளினுள் நுழைகிறான். மனிதனை ஆட்சி செய்துவந்த வாழ்நிலைமைகள் இப்பொழுது மனிதனுடைய ஆதிக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்படுகின்றன.

இதுவரை வரலாற்றை ஆளுமை செய்த அயலான புறநிலை சக்திகள் நேரடியாய் மனிதனது கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. அது முதல்தான் மனிதன் முழு உணர்வுடன் தனது சொந்த வரலாற்றைத் தானே படைப்பவனாய் ஆகிறான்.

பொருளுற்பத்தியின் வளர்ச்சியானது சமுதாயத்தில் வெவ்வேறு வர்க்கங் கள் இருத்தலை தேவையற்றதாக்குகிறது. சமூகப் பொருளுற்பத்தியில் உள்ள அராஜகம் எந்தளவுக்கு மறைகிறதோ அதேயளவிற்கு அரசின் அரசியல் அதிகாரமும் மடிந்துபோகிறது.

முடிவில் தனக்கு உரித்தான சமூக ஒழுங்கமைப்பை ஆட்சி செய்திடும் எஜமானனாகிவிடுகிறான் மனிதன். இயற்கையின் அதிபதியுமாகி, தானே தனக்கு எஜமானன் ஆகிறான்.

இதுவரையிலும் எங்கெல்ஸ் எழுதிய *டூரிங்குக்கு மறுப்பு* என்ற நூலின் வழியிலேயே எழுதப்பட்டு வந்தது. அடுத்து அவரது நூலிலிருந்து சமூகத்தில் மதத்தின் பிரதிபலிப்புக்கு என்று ஏதுவும் மீதமாக இல்லா சமூகத்தில் மதம் மறைந்து போவதைப் பற்றிக் கூறுவதை நேரடியாக பார்ப்போம்:-

"... *மனிதர்கள் புறம்பான, இயற்கை மற்றும் சமுதாய சக்திகளின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும்வரையில், அவர்கள் மீதுஆதிக்கம்*



படிப்பகம்

www.padippakam.com

*செலுத்தும் இந்தச் சக்திகளுடனான மனிதர்களுடைய உறவின் நேரடியான அதாவது உணர்ச்சிபூர்வமான வடிவில் சமயம் தொடர்ந்து நிலவ முடியும். எனினும், நிலவும் முதலாளித்துவ சமுதாயத்தில் மனிதர்கள் தம்மாலேயே உருவாக்கப்பட்ட பொருளாதார நிலைமைகளால், அவர்களே உண்டாக்கியுள்ள உற்பத்திச் சாதனங்களால் புறம்பான ஒரு சக்தியின் மூலம் போன்று ஆதிக்கம் செலுத்தப்படுகின்றனர். எனவே, சமயத்தைத் தோற்றுவிக்கும் பிரதிபலிக்கிற செயல்பாட்டின் உண்மையான அடிப்படை தொடர்ந்து நிலவுகிறது, அதோடு சேர்ந்து அதன் சமயப் பிரதிபலிப்பும் நிலவுகிறது.*

*இந்தப் புறம்பான ஆதிக்கத்தின் தற்செயலான தொடர்பு குறித்து முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம் ஒரு குறிப்பிட்ட அளவு நுண்ணறிவினை வழங்கியிருந்த போதிலும் இதனால் முக்கியமான வித்தியாசம் எதுவும் ஏற்பட்டு விடவில்லை. முதலாளித்துவப் பொருளாதாரத்தால் பொதுவாக நெருக்கடி களைத் தடுக்க முடியாது. தனிப்பட்ட முதலாளிகளை நஷ்டம், திரும்பிவராத கடன், வக்கற்ற வகையற்ற நிலை ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கவும் முடியாது, தனிப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் வறுமைக்கு எதிராகப் பாதுகாக்கவும் முடியாது. மனிதன் ஒன்று நினைக்கத் தெய்வம் **(அதாவது முதலாளித்துவ உற்பத்தி முறையின் அன்னிய ஆதிக்கம்)** ஒன்று கட்டளையிடுகிறது என்பது இன்னும் மெய்யாகவே உள்ளது.*

*முதலாளித்துவப் பொருளாதார விஞ்ஞானத்தைக் காட்டிலும் மேலும் கூடுதலாகவும் அதிக ஆழமாகவும் சென்றதாயினும் சரி, வெறும் அறிவு சமூக சக்திகளை சமூகத்தின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வருவதற்குப் போதுமானதல்ல. எல்லாவற்றுக்கும் மேல் இதற்கு அவசியமாக இருப்பது ஒரு சமூதாயச் செயலே. இந்தச் செயல் நிறைவேற்றப்படும் பொழுது, சமுதாயம் எல்லா உற்பத்தி சாதனங்களின் உடைமைகளையும் மேற்கொண்டு, அவற்றைத் திட்டமிட்ட அடிப்படையில் பயன்படுத்துவது மூலம் தன்னையும் தனது உறுப்பினர்கள் எல்லோரையும் அவர்களாலேயே உண் ாக்கப்பட்டு அவர்களை (வெல்ல) முடியாத அன்னிய சக்தியாக எதிரிட்டு நிற்கும் இந்த உற்பத்திச் சாதனங்களால் அவர்கள் தளைப் படுத்தி வைக்கப்பட்டிருக்கும் நிலையிலிருந்து தன்னைத் தானே விடுவித்துக் கொள்ளும் பொழுது.- மனிதன் நினைப்பது மட்டுமின்றி செயல்படவும் செய்கிறான்- அப்பொழுது மட்டுமே சமயத்தில் இன்னும் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் கடைசி அன்னிய சக்தி மறையும், அதனுடன் சமயப் பிரதிபலிப்பே மறையும். இதற்குக் காரணம் பிறகு பிரதிபலிப்பதற்கென்று எதுவும் மீதமாக இருக்காது"*

*—டூரிங்குக்கு மறுப்பு, பக்கம் 557-558*



படிப்பகம்

இயற்கை மற்றும் சமூதாய சக்திகளின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் வரையில் மனிதர்களுக்குப் புறம்பான இந்தச் சக்திகளுடன் மனித உறவின் நேரடியான உணர்ச்சி பூர்வமான வடிவில் மதம் தொடர்ந்து நிலவிவருகிறது. மனிதர்களால் உருவாக்கப்பட்ட பொருளாதார நிலைமைகளால், அதாவது அவர்களால் உண்டாக்கப்பட்ட உற்பத்தி சாதனங்களால், புறம்பான ஒரு சக்தியைப் போல் ஆதிக்கம் செலுத்துகிறது. எனவே மதத்தைத் தோற்றுவிக்கும் பிரதி பலிப்புக்கான சக்திகள் தொடர்ந்து இருக்கும்போது மதத்தின் பிரதி பலிப்பும் நிலவுகிறது.

முதலாளித்துவத்தின் முரண்பாட்டால் தனிப்பட்ட முதலாளிகளின் நட்டத்தைத் தடுக்கவும் மற்றும் பாதுகாக்கவும் முடியாமல் போகிறது. தனிப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கவும் மற்றும் பாதுகாக்கவும் முடியாமல் போகிறது. இந்நிலையில்தான் மனிதன் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று கட்டளையிடுகிறது என்பது போல் தோன்றுகிறது. அதாவது முதலாளித்துவ உற்பத்தி முறையின் அன்னிய ஆதிக்கம் புறநிலை சக்தியாகச் செயல்படுகிறது.

சோஷலிசப் புரட்சியைத் தொடர்ந்து, வளர்ச்சியடைந்த கம்யூனிச சமூகத்தில் முதலாளித்துவ உற்பத்திச் சாதனங்களால் மக்களைத் தளைப்படுத்தி வைக்கப்படிருந்த நிலையிலிருந்து முழுமையாக விடுவித்துக் கொள்ளும்போது மனிதன் நினைப்பது மட்டுமின்றி செயல்படவும் முடியும். அப்பொழுதுதான், அந்நிலைமையில் மட்டுமே - இன்னும் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் இறுதியான அந்நிய சக்தியும் மறைந்த நிலையில் - மதம் என்னும் பிரதிபலிப்பும் மறையும். மதத்தைப் பிரதிபலிப்பதற்கு என்று எதுவும் மீதமாய் இல்லாத காரணத்தால், மதம் தேவையற்று உலர்ந்து மறைந்து போகும்.

இந்நிலை அடையும்வரை சமூகத்தில் மதம் வர்க்கத்தன்மையோடே செயல்படும். கம்யூனிஸ்ட் கட்சி மதத்தின் மாய்மாலத்தை அம்பலப்படுத்திப் போராடும்.

மனித சமூகம் தனது தொடக்க நிலையில் மதத்தைப் பெற்றிருக்க வில்லை. மதமற்ற சமூகமாகவே இருந்தது. வருங்காலத்தில் இவ்வாறு மதம் இல்லாத சமூகம் தோன்றும். இந்தப் புதிய சமூகம் பழையதைக்காட்டிலும் அதிமேலான முன்னேறிய வடிவமாய்த் திகழும்.

★ ★ ★

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



“நீதி, மதம், அரசியல், சமுதாயம் சம்பந்தமான எல்லாவிதச் சொல்லடுக்குகளுக்கும் பிரகடனங்களுக்கும் வாக்குறுதிகளுக்கும் பின்னே ஏதாவதொரு வர்க்கத்தின் நலன்கள் ஒளிந்து நிற்பதைக் கண்டு கொள்ள மக்கள் தெரிந்து கொள்ளாத வரையில் அரசியலில் அவர்கள் முட்டாள்தனமாக ஏமாளிகளாகவும் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வோராகவும் இருந்தனர், எப்போதும் இருப்பார்கள். பழைய ஏற்பாடு ஒவ்வொன்றும் எவ்வளவுதான் அநாகரிகமானதாகவும் அழுகிப்போனதாகவும் தோன்றிய போதிலும் ஏதாவது ஓர் ஆளும் வர்க்கத்தின் சக்திகளைக் கொண்டு அது நிலைநிறுத்தப்பட்டு வருகிறது. சீர்திருத்தங்கள், மேம்பாடுகள் ஆகியவற்றின் ஆதரவாளர்கள் இதை உணராத வரையில் பழைய அமைப்பு முறையின் பாதுகாவலர்கள் அவர்களை என்றென்றும் முட்டாள்களாக்கிக் கொண்டேயிருப்பார்கள்.”

லெனின்

“மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும்”

படிப்பகம்